Registered as a News Paper in Sri Lanka
දිනමුරසු වාරමලර්
பக்கம் 24
செப்.27- ஒக்.03, 2012
ரூபா 30.00

# வாரமலர்
# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 981

## ஈழம் பற்றிப் பேசுவோரை நம்பி


## தமிழர்கள்
## மேலும் இழந்துவிடக் கூடாது



## மடமை அரசியலுக்குள் புதையும் இனம்!



## மு.கா.வின் இணக்க அரசியல் தமிழ் - முஸ்லிம் உறவைப் பாதிக்குமா?

# இறைவழிபாட்டில் முக்கிய பொருள் தேங்காய்

கோயில்களில் பெரும்பாலும் இறைவனுக்கு தேங்காய் உடைப்பது வழக்கம். ஏன் தேங்காய் உடைக்கிறோம். இதில் என்ன தத்துவம் இருக்கிறது என்ற விவரம் நம்மில் பலருக்கு தெரியாது. ஏதோ சுவாமிக்கு அர்ச்சனை பண்ணினோம். தரிசனம் செய்தோம் என்றவாறே இதை நாம் தொன்றுதொட்டு செய்து வருகிறோம். அதைப் பற்றி ஒரு சிறிய தத்துவ தகவல்.

தேங்காய் உடைப்பதில் ஒரு பெரிய உண்மை மறைந்து இருக்கிறது. தேங்காயின் மேல் கடுமையான ஓடும் அதனுள் மென்மையான பருப்புமாகிய காய்ப்பகுதியும் அதனுள் நீரும் உள்ளது. உருண்டையான புற ஓடு பிரபஞ்சத்தை ஒத்து இருக்கிறது. இரண்டும் கோள வடிவம் உடையது. இது உலக மாயை யைக் குறிப்பது ஆகும். உள்ளே உள்ள வெண்ணிறமான பகுதி பரமாத்மாவை குறிக்கும்.

இளநீர் அதனால் விளையும் பரமானந்த அமிர்தத்தை ஒத்து இருக்கின்றது. ஜீவாத்மா மாயையினால் பரமாத்மாவை உணராமல் பரமானந்த பிராப்தியையும் பெறாமல் நிற்கின்றது. அது போல் வெள்ளை பகுதியையும், நீரையும் காண முடியாமல் ஓடு மறைகின்றது. ஈசுவர சந்நிதியில் மாயையை அகற்றி தேஜோமய சுவரூபத்தை காட்டி அவர் அருளாள் பரமானந்த பேரமுதத்தை நுகரச் செய்யும் செயலையே இது காட்டுகிறது.

இவ்வளவு உட்கருத்து இருப்பதால் தான் தேங்காயை இறை வழிபாட்டில் முக்கிய பொருளாக வைத்து நம்முன்னோர்கள் வழிபட்டு வந்துள்ளனர் என்கிற உண்மையை நாம் உணர வேண்டும்.

ப. தாட்சாயினி, யாழ்ப்பாணம்.

ஆன்மீகம்

# சாந்த குணம் உள்ளவர்கள் பாக்கியவான்கள்

சாந்த குணம் உள்ளவர்கள் பாக்கியவான்கள்.

(மாற்கு 5:5)

நமது பழைய வாழ்க்கை அருவருப்பானதாகவும், அவமானம் நிறைந்ததாகவும், பலருக்குத் தீமை விளை விக்கக் கூடியதாகவும் இருந்திருக்கலாம். இவைகளை விட்டு மனந்திரும்பி, ஆண்டவர் இயேசுவுக்குள் புது வாழ்வு வாழ்கின்றபோது, மற்றவர்கள் நம்மை குறித்து; இவரை நமக்குத் தெரியாதா? இவன் இன்னானன் அல்லவா... இவன் இப்படிப்பட்டவன் அல்லவா...! என்று பேசலாம். நமக்கு விரோதமாய் சூழ்ச்சி செய்யலாம். அல்லது நமது வாழ்க்கையின் இரகசியங்களை எடுத்துத் தெருத்தெருவாய் மற்றவர்களுக்கு முன்பாக பறைசாற்றி அறிவிக்கலாம்.

ஆனால்; நாம் எல்லாவற்றையும் கடவுள் ஒப்புக்கொடுத்து அவர் என்ன அறிவார். என்னுடைய நிலவரத்தை விளங்கப் பண்ணுவார் என், கடவுளை முழுவதுமாய் நம்பி அவருக்குக் கீழ்ப் படிந்து நடக்கின்றவர்களே சாந்த குணமுள்ளவர்கள். இத்தகைய சாந்தகுணம் நம்மை இம்மையிலும் மறுமையிலும் பாக்கியவான்களாக மாற்றும். நமது அனுதின வாழ்க்கையில் சாந்த குணமுள்ளவர்களாக நாம் வாழ முயற்சிப்போமாக.

கே. யோவான், மன்னார்.

# அருள்மறை கூறும் பெற்றோர் பெருமை

மனித உறவுகளில் மிக முக்கியமானதும் முதன்மையான தும் தாய் தந்தையரே!

தாய் தன் உதிரத்தை அமுதாக்கி தன் பிள்ளைக்கு ஊட்டி மகிழ்கின்றாள். இதற்காக இவள் எதுவித பிரதியுபகாரமும் இப்பிள்ளையிடம் இருந்து எதிர்பார்ப்பதில்லை.

தந்தையோ மழை வெய்யில் பாராது தான் கஷ்ரப்பட்டு உழைத்த பணத்தை தன் மைந்தனின் நல்வாழ்வுக்காக அர்ப்பணிக்கின்றார். இத்துனை செம்மல்களை தாம் வயது முதிர்ந்த தாய் தந்தையரென்றோ, வேறுசில பலவீனங்கள் காரணமாகவோ புறக்கணிக்கக் கூடாது.

அல்லாஹ்வின் அருள்மறையும் அழுத்தமாக இது பற்றி எடுத்துரைக்கிறது.

உங்கள் பெற்றோரில் ஒருவரோ. இருவரோ முதிய வயதடைந்து உங்களை அண்டி வாழ்ந்தால் அவர்களை வெறுப்பூட்டும்படி "சீ" எனச் சொல்லாதீர்கள் என்று.

அல்குர் ஆன் (17:23)

எனவே நாம் ஒவ்வொருவரும் பெற்றோரை பேணி நடப்பது கடமையாகும்.

எம். சீ. கலீல், கல்முனை - 05.

## கவிதைப்போட்டி இல 978



# தவறு

பாராட்டுக்குரியது

குலைந்து கிடக்கும்
சட்டம் ஒழுங்கையும்
மலிந்து கிடக்கும்
சமூகச்
சீரழிவுகளையும்
விரைந்து தடுக்க
சீறிப் பறக்கிறாள்
பெண் அதிகாரி!
தவறை தடுக்கும்
அவசரத்தில்
தலைக்
கவசத்தையும்
தவற விட்டு விட்டார்
அம்மணி!?

எஸ். அஜி,
வட்டுக்கோட்டை.

## கவிதைப் போட்டி இல 981



என்னத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள்.
அனுப்பவேண்டிய கடைசித் திகதி 09.10.2012

கவிதைப் போட்டி இல. 981 தினமுரசு வாரமலர்,
த.பெ.இல. 167, யாழ்ப்பாணம்.
இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

### நிலவரம்

சட்டம் கூட
சாதாரண மக்களுக்குத்தான்
காக்கியில் போனால்
தடுத்து நிறுத்திக்
கடிந்து கொள்ள யாருக்கும்
துணிவு இல்லை
இதுதான் சட்டம் ஒழுங்கின்
நிலவரம்.

கே. கௌதமன், மன்னார்.

### மனசாட்சி

சட்டத்தை சத்தியமாய்
மதியாமல் பவனி வந்தால்
சட்டம் மீறும்
சாமானியருக்கு
தண்டனை கொடுக்க
மனசாட்சிதான்
இடம் கொடுக்குமா?

எஸ். மது,
சாவகச்சேரி.

### சட்டங்கள்

'ஹெல்மட்'டின்றி
மோட்டார் சைக்கிளில்
காவலர்கள்
நகர பவனி!
வீதிச்சட்டங்கள்
மற்றவர்களுக்கே
எமக்கில்லையென்ற
தலைக்கனமோ?

அ. சந்தியாகோ, கண்டி.



### தலை க(னம்)வசம்

சீருடை
தரித்ததனால்
எறிய
தலைக்கனத்தால்,
தலைக்கேற
மறுக்கிறதோ
இந்தத்
தலைக்கவசம்.?!

வி. குகதா,
கல்வியங்காடு.



### குற்றங்களைத் தடுக்க

பெண் பொலிஸ்
அதிகாரியே!
நாட்டில் மலிந்த
குற்றங்களைத் தடுக்க
இன்னும் வேகமாய்
நீ செயற்படு
குற்றமற்ற சமுதாயத்தை
உருவாக்கிடு.

சு. ஜெயரூபன், பருத்தித்துறை.

# உங்கள் பக்கம்

## அம்புலன்ஸ் வண்டி தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரு கின்ற முதியோர் இல்லங்களுள் கைதடியில் அமையப் பெற்றுள்ள அரச முதியோர் இல்லம் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

இவ் இல்லத்தில் நூற்றுக் கணக்கான முதியோர்கள் தமது இறுதிக்காலத்தைக் கழித்திருக்கின்றனர் - கழித்து வருகின்றனர்.

இங்கு தங்கியிருக்கும் வயோதிபர்கள் மருத்துவ தேவைகளுக்காகவும், இதர தேவைகளுக்காகவும், வெளியே செல் வதற்குத் தேவையான வாகனம் இல்லாமை இங்கு இருப்பவர் களுக்குப் பெரும் குறையாகவே காணப்படுகின்றது.

இந்த இல்லத்தில் தங்கியுள்ள வயோதிபர்கள் நோய் வாய்ப்படும் பட்சத்தில் அவர்களை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்வதற்குப் பல்வேறு சிரமங்கள் ஏற்படுகின்றது.

அதாவது இரவு நேரங்களில் நோயினால் அவதிப்படுகின்ற வயோதிபர்களை மறுநாள் வாகனப் போக்குவரத்துக்கள் தொடங்கும் வரை வைத்திய சிகிச்சைக்கு அனுப்பி வைக்க முடியாத சூழலே காணப்படு கின்றது.

இந்த துர்ப்பாக்கிய நிலையைக் கருத்திற்கொண்டு குறித்த முதியோர் இல்லத்தின் பாவனைக்காக அம்புலன்ஸ் வண்டி ஒன்று கிடைப்பதற்கான ஒழுங்குகளைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டும் என்பதே இங்குள்ள வயோதிபர்களினதும், நிர்வாகிகளினதும் எதிர்பார்ப்புாக இருக்கின்றது.

கே. துவாரகன், கைதடி மேற்கு.


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள் உட்பட சகல
தொடர்புகளுக்கும்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:- 167,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :-0212223628
தொலை நகல்
(Fax): 0212221811
ஈ-மெயில்:
(E-mail):-
thinamurasu@live.com
விளம்பரத் தொடர்புகளுக்கு:-
0212220188





## பிரமாதம்

என் மனதில் இடம்பிடித்துள்ள தின-முரசு வாரமலரில் இடம்பெறும் ஒவ்வொரு அம்சங்களுமே பிரமாதம். அரசியல், அரிய பல தகவல்கள், சினிமா, குறுக்கெழுத்துப்போட்டி, ,தொடர் கட்டுரைகள், தேன் கிண்ணம், லேடிஸ் ஸ்பெஷல், விளையாட்டு, இதுபோன்ற இன்னும் பல அம்சங்களுமே வாரமலரை மெருகூட்டுகின்றது. வாரமலரில் பேனா நண்பர் பகுதியை ஆரம்பித்தால் மேலும் சிறப்பாக இருக்குமல்லாவா?

ஏ. சீ. எம். அஜ்மல் , குளியாப்பிட்டியாவ.

## சுதந்திரப்பறவை

சுதந்திரப்பறவையாய் உலகெங்கும் சுற்றிவரும் முரசே! யதார்த்தத்தை பிரதிபலிக்கின்ற அதேநேரம் உள்ளதை உள்ளபடி எடுத்துரைக்கின்றாய். படித்த மக்கள் முதல் பாமர மக்கள் வரை சென்றடையக் கூடியதாய் இருக்கின்றது. சினிமா பகுதி பிரமாதம். ஏனைய வாசகர்கள் குறிப்பிட்டதையே நானும் கூறயிருக்கின்றேன். மற்றும் சினிமாப் பகுதியில் படங்களுடைய பெயரைப் பிரசுரித்திருக்கின்றாய். நன்றி.

க. விசாலகன். மட்டக்களப்பு.

## வாசகர் சாலை

## ஆரூடம்

வாரம், வாரமாக நீ வரும்வரை உனக்காகக் காத்திருப்பவர்களில் நானும் ஒருத்தி. காலத்தின் தேவையறிந்து, சூழலின் தன்மையுணர்ந்து உனது கருத்துக்களை நீ மக்கள் அரங்கிற்கு எடுத்துச் செல்லும் பாங்கு அபரீதமானது.

இருந்தாலும் வளர்ந்து வரும் தகவல் தொழில்நுட்பத்தினாலும் இலத்திரனியல் ஊடகங்களின் ஆதிக்கத்தினாலும் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் சாவால்களுக்கு முகம் கொடுப்பதற்கு நீ சிரமப்படுவதை உணரக் கூடியதாக இருக்கின்றது. எனினும் அரசியல் நிலவரங்களை ஆய்வு செய்வதில் நீ தொடர்ந்தும் யமாய்க்கின்றாய், பத்திரிகை உலக ஜாம்பவான்களும், புத்தி ஜீவிகளும் கூறுகின்ற ஆரூடங்க்ளுக்கு நேர் எதிரான கருத்தினை முரசு துணிந்து கூறும். அதுவே சரியானது என்பதைக் கால ஓட்டம் நிரூபிக்கும். இவ்வாறான பல சம்பவங்கள் பலமுறை என்னை வியப்படையச் செய்திருக்கின்றது. அவ்வாறான தீர்க்க தரிசனக்கருத்துக்கள் தொடர வேண்டும் என் பதே என் வேண்டுகள்.

எம். தேவகி, வவுனியா.

## கிளி.இல் பூர்த்தியடைந்த அபிவிருத்தித் திட்டங்கள்

# ஜனாதிபதியினால் திறந்து வைப்பு



**கிளிநொச்சிக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டு அங்கு சென்றிருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பூர்த்தியாக்கப்பட்ட பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களையும் மக்கள் பயன்பெறும் பொருட்டு ஆரம்பித்து வைத்ததுடன் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலும் பங்குபற்றி குறித்த மாவட்ட மக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளையும் அவற்றிற்குத் தீர்வு காணும் வழிவகைகள் பற்றியும் ஆராய்ந்துள்ளார்.**

கடந்த செவ்வாய்க்கிழமை பொருளாதார அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, பாரம்பரிய கைத்தொழில மற்றும் சிறுதொழில் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர் முருகேசு சந்திரகுமார், பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, வடமாகாண ஆளுனர் G.A சந்திரசிறி, உட்பட்ட பல அதிகாரிகள் சகிதம் கிளிநொச்சி நகருகுச் சென்ற ஜனாதிபதி அவர்கள் 3200 மில்லியன் பெறுமதியான ஜப்பானின் நிதியுதவியுடன் உருவாக்கப்பட்ட மின்சார பரிவர்த்தன நிலையத்தினைத் திறந்துவைத்தார்.

இதன்மூலம் கடந்த 25 வருடங்களாகத் தடைப்பட்டிருந்த வடக்கிற்கான லக்சபான நீர் மின்சார விநியோகம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து கிளிநொச்சியில் புதிதாக அமைக்கப்பட்ட மத்தய சந்தையையும், கரைதுரைப்பற்று செயலகத்தையும் மக்கள் பலனடையும் பொருட்டு திறந்து வைத்தார்.

இவ்விஜயத்தின்போது முல்லைதீவு மாவட்டத்தின் சில பகுதிகளுக்கும் விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதி அப்பிரதேசங்களின் நிலைமைகளையும் நேரில் பார்வையிட்டார்.

# நுவரெலியாவில் சுரங்கப் பாதை!

தலவாக்கலை - நுவரெலியா பிரதான பாதையில் லிந்துலை பெயார்வெல தோட்டத்துக்கு அருகில் இனங்காணப்பட்ட சுரங்கப்பாதை தொல்பொருளியல் ஆய்வுக்கு முக்கியத்துவமற்றதென அறிவிக்கப்பட்டுள்ளது.

ஹட்டன் - நுவரெலியா பிரதான பாதையில் அண்மையில் சுரங்கப் பாதையொன்று கண்டுபிடிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து சுரங்கப் பாதை தொடர்பில் தொல்பொருளியல் ஆய்வு பிரிவுக்கு அறிவிக்கப்பட்டதைத தொடர்ந்து அவ்விடத்திற்கு வருகை தந்த தொல்பொருளியல் ஆய்வாளர் டி.எம்.எஸ்.பண்டார அது தொடர்பில் ஆராய்ச்சிகளை மேற்கொண்டுள்ளார்.

இந்த ஆய்வுக்குப் பின்பு இது வரலாற்று முக்கியத்துவமற்றதெனவும் இயற்கையாக மண்திட்டினுள் ஏற்பட்ட குழிபோன்ற பகுதியே இது எனவும் அவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

# யதார்த்தத்தைப் புரிந்துகொண்டு ஊடகவியலாளர்கள் செயற்பட வேண்டும்

**சிவநேசதுரை சந்திரகாந்தன்**

நடைபெற்று முடிந்த கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் பெரும்பாலான தமிழ் ஊடகங்கள் தமிழ்க் கூட்டமைப்புக்கு ஆதரவான முறையில் செயற்பட்டதை வெளிப்படையாக அவதானிக்கக் கூடியதாக இருந்ததாக கிழக்கு மாகாண சபையின் முன்னாள முதல்வரும் தற்போதைய உறுப்பினரும் ஜனாதிபதியின் ஆலோசகருமான சிவனேசதுரை சந்திரகாந்தன் குற்றம்சாட்டியிருக்கின்றார்.

அண்மையில் கொழும்பு தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்த சந்திரகாந்தன் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்க் கூட்டமைப்பானது அன்று தொட்டு வாக்குவேட்டையை மையமாக வைத்து மக்களை ஏமாற்றும் விதத்தில் கருத்துக்களைக் கூறிவருகின்றது. அன்று வாக்குகளுக்காக தமிழீழத் தீர்மானத்தை மேற்கொண்ட கூட்டணியின் வழித்தோன்றல்களான கூட்டமைப்பின்ர் இப்பொழுதும் அதே வழியையே பின்பற்றுகின்றது.

அண்மைய கிழக்கு மாகாண சபைத் தேர்தல்களிலும் சர்வதேசத்துக்கு வாக்களியுங்கள், கடவுள் வழங்கியிருக்கும் சந்தர்ப்பத்திற்கு வாக்களியுங்கள் என்றெல்லாம் மக்களை தவறாக வழிநடத்தியிருந்தனர். இந்த கபட நோக்கங்களைப் புரிந்துகொள்ளாமல் சில தமிழ் ஊடகங்களும் கூட்டமைப்பிற்கு ஆதரவு தெரிவித்தமை வேதனைக்குரியதாகும்.

எதிர்காலத்திலாவது யதார்த்தத்தினைப் புரிந்துகொண்டு மக்கள் நலன்களை முன்னிலைப்படுத்தி தமிழ் ஊடகங்கள் செயற்பட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்

# தமிழ் மக்களுக்குத் தலைமைதாங்கும் தார்மீக உரிமை கூட்டமைப்புக்கு இல்லை!

**சங்கர சிவன்**



> அரசியல் தீர்வை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டுமானால் கணிசமான சிங்கள மக்களை வென்றெடுக்க வேண்டும் என்பது இதன் அர்த்தம். தமிழகத் தலைவர்களின் வன்முறைச் செயற்பாடுகள் சிங்கள மக்களை ஆத்திரமூட்டுவனவாகவே இருக்கின்றன. சர்வஜன வாக்கெடுப்பில் சிங்கள மக்கள் அரசியல் தீர்வுக்கு ஆதரவாக வாக்களிக்காவிட்டால் அது தோற்றுவிடும் என்பதை விளங்கிக்கொள்ள முடியாத அறிவு சூன்யர்களல்ல வைகோ, திருமாவளவன் போன்ற தலைவர்கள். எந்தத் தீர்வை முன்வைத்தாலும் சர்வஜன வாக்கெடுப்பில் அது தோல்வியடைய வேண்டும் என்ற நோக்கத்துடனேயே இவர்கள் சிங்கள மக்களுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களையும் தாக்குதல்களையும் மேற்கொள்கின்றார்கள் என்ற முடிவுக்கே வரவேண்டியுளளது.

தமிழ் நாட்டுக்கு விஜயம் மேற்கொள்ளும் சாதாரண சிங்கள மக்களுக்கும் சிங்கள அரசியல்வாதிகளுக்கும் எதிரான வன்முறைச் செயற்பாடுகள் பற்றி அண்மையில் இலங்கைப் பாராளுமன்றத்தில் விவாதிக்கப் பட்டபோது, இந்த வன்முறை தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கொண்டிருக்கும் உண்மையான நிலைப்பாட்டை அறியக் கூடியதாக இருந்தது. கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கூட்டமைப்பின் நிலைப்பாட்டைப் பின்வருமாறு எடுத்துக் கூறினார்.

"இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக் காணாத குறைபாட்டை இலங்கை அரசாங்கம் தன் பக்கம் வைத்துக்கொண்டு, தமிழ் நாட்டில் இடம்பெறும் சம்பவங்களைப் பற்றிக் குறை சொலலிக கொண்டிருப்பதில் எந்தப் பல னும் கிடையாது."

இனப்பிரச்சினைக்கு அரசாங்கம்தான் அரசியல் தீர்வொன்றை வழங்கவேண்டும் என்றும் அவர் கூறினார்.

தமிழ் நாட்டில் சிங்கள மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் வன்முறைச் செயற்பாடுகளுக்குத் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தார்மீக ஆதரவு இருப்பதைக் கோடிட்டுக் காட்டும் வகையில் அடைக்கலநாதன் தெரிவித்த கருத்துக்களிலிருந்து பல கேள்விகள் எழுகின்றன. கூட்டமைப்பின் உண்மையான நிலைப்பாடு தனிநாடா அல்லது ஐக்கிய இலங்கையா என்பது முதலாவது கேள்வி.

சிங்கள மக்களுக்கு எதிராகத் தமிழ்நாட்டில் இடம்பெறும் ஆர்ப்பாட்டங்களையும் தாக்குதல்களையும் வழிநடத்தும் வைகோ, திருமாவளவன், சீமான் போன்றவர்கள் இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தனிநாட்டைத் தவிர வேறு தீர்வு இல்லை என்ற நிலைப்பாட்டில் இருப்பவர்கள். இவர்கள் இலங்கையின் யதார்த்தத்தை விளங்கிக் கொள்ளாமல் பேசுவதாகவும் இருக்கலாம். அல்லது இலங்கையின் தனிநாடு அமைவது சாத்தியமில்லை என்பதையும் இங்குள்ள தமிழ் மக்களில் பெரும்பாலானோர் தனிநாட்டை ஆதரிக்கவில்லை என்பதையும் விளங்கிக் கொண்ட போதிலும் தமிழ்நாட்டு மக்களின் ஆவேச உணர்வுகளைத் தூண்டிவிட்டு அரசியல் இலாபம் பெறும் நோக்கத்துடனோ அல்லது வேறு ஏதாவது நலன்களுக்காகவோ தனிநாட்டுக்கு ஆதரவான நிலைப்பாட்டை மேற்கொள்வதாகவும் இருக்கலாம். எவ்வாறாயினும் இவர்களின் வன்முறைச் செயற்பாடு இனப்பிரச்சினையின் அரசியல் தீர்வுக்குப் பாதகமான நிலையைத் தோற்றுவிப்பது இவர்களுக்குத் தெரியாததல்ல. அவ்வாறான ஒரு நிலை உருவாக வேண்டுமென்ற எதிர்பார்ப்புடனேயே இவர்கள் செயற்படுகின்றார்கள்.

இப்போது பதின்மூன்றாவது அரசியலமைப்புத் திருத்தம் நடைமுறையில் இருக்கின்றது. அதனிலும் பார்க்க கூடுதலான தீர்வே அடுத்த கட்டமாக இடம்பெற வேண்டியது. பதின்மூன்றாவது திருத்தம் மயிரிழையிலேயே சர்வஜன வாக்கெடுப்பிலிருந்து தப்பிப் பிழைத்தது. அதனிலும் கூடுதலான ஒரு தீர்வை நடைமுறைக்குக்கொண்டுவர வேண்டுமானால் சர்வசன வாக்கெடுப்பைத் தவிர்க்கமுடியாது. கணிசமான சிங்கள வாக்காளர்கள் தீர்வுக்கு ஆதரவாக வாக்களித்தால் மாத்திரமே சர்வஜன வாக்கெடுப்பில் அங்கீகாரம் பெறமுடியும். அரசியல் தீர்வை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டுமானால் கணிசமான சிங்கள மக்களை வென்றெடுக்கவேண்டும் என்பது இதன் அர்த்தம். தமிழகத் தலைவர்களின் வன்முறைச் செயற்பாடுகள் சிங்கள மக்களை ஆத்திரமூட்டுவனவாகவே இருக்கின்றன.

சர்வஜன வாக்கெடுப்பில் சிங்கள மக்கள் அரசியல் தீர்வுக்கு ஆதரவாக வாக்களிக்காவிட்டால் அது தோற்றுவிடும் என்பதை விளங்கிக்கொள்ள முடியாத அறிவு சூன்யர்களல்ல வைகோ, திருமாவளவன் போன்ற தலைவர்கள் எந்தத் தீர்வை முன்வைத்தாலும் சர்வஜன வாக்கெடுப்பில் அது தோல்வியடைய வேண்டும் என்ற நோக்கத்துடனேயே இவர்கள் சிங்கள மக்களுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களையும் தாக்குதல்களையும் மேற்கொள்கின்றார்கள் என்ற முடிவுக்கே வரவேண்டியுளளது.

அடுத்ததாக, இந்தியா தலையிட்டு அரசியல் தீர்வைப் பெற்றுத்தர வேண்டும் என்று கூட்டமைப்புத் தலைவர்கள் கூறுகின்றார்கள். இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுக்க இந்திய அரசாங்கம் தவறிவிட்டது என்று வைகோ, திருமாவளவன் போன்ற தலைவர்கள் குற்றஞ்சாட்டுகின்றார்கள். இந்தக் குற்றச்சாட்டும் இவர்களின் செயற்பாடும் ஒன்றுக்கொன்று முரண்பாடாக இருக்கின்றன.

இந்திய அரசாங்கம் அரசியல் தீர்வைப் பெற்றுத்தர வேண்டுமானால் இலங்கை அரசாங்கத் தலைமையுடன் பேச்சுவார்த்தை நடத்தவேண்டும். இந்திய அசராங்கத்தின் மூத்த தலைவர்கள் யாராவது இலங்கைக்கு வந்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்தால் தமிழ் நாட்டில் அதற்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடக்கின்றது. மகிந்த ராஜபக்ஷ இந்தியாவுக்கு வரக்கூடாது என்று ஆர்ப்பாட்டம் செய்கின்றார்கள்.

(22 ஆம் பக்கம் தொடர்ச்சி...)

வாரமலர்
தினமுரசு
த.பெ.இல:- 167, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 3628
தொலைநகல் (Fax):- 021 222 1811
ஈ-மெயில் (E-mail):-
thinamurasu@live.com

## முரசம்

### வாசகர்களுக்கு வணக்கம்!

## விரயமாகின்றன நம்பிக்கைகள்

ஜனாதிபதியின் இந்திய விஜயமும் அதனோடு ஒட்டிய செய்திகளும் கடந்த காலங்களைப்போல் பெரிதாக பேசப்படவில்லை.

இந்தியாவுக்கு ஜனாதிபதி போனதை எதிர்த்து தமிழகக் கட்சிகள் சில நடத்திய எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் மட்டுமே பரபரப்புக்கு உதவின.

வைகோவும், சீமானும் கூலிக்கு மாரடித்து தமது பொறுப்பை செவ்வனே செய்து முடித்திருக்கின்றார்கள். அவர்களுக்கு பிரசாரம் மற்றும் ஆர்ப்பட்டங்களுக்கான ஏற்பாட்டுச் செலவுகளுக்கான அனுசரணைகள் எல்லாம் காலக்கிரமத்தில் பட்டுவாடா செய்யப்பட்டிருக்கும்.

ஜனாதிபதிக்கு வழமையைவிட கூடுதல் பாதுகாப்புக் கிடைப்பதற்கும், தமிழ்நாட்டின் எதிர்ப்பு இருந்தாலும் இந்தியாவின் இன்னொரு மாநிலத்தில் தனக்கு செங்கம்பள வரவேற்பு உண்டு என்பதை உலகுக்கு உணர்த்துவதற்கும் இந்த எதிர்ப்புகள் நிச்சயம் உதவியுள்ளது.

இவற்றைவிட ஜனாதிபதி மகிந்த இந்திய ஜனாதிபதி மற்றும் பிரதமர் உள்ளிட்ட முக்கிய இந்தியத் தலைவர்களைச் சந்தித்துப் பேசியவை முக்கியமானவையாகும். அதாவது இந்தியத் தலைவர்கள் இலங்கை ஜனாதிபதியிடம் தமிழ் மக்களுக்கு தீர்வு வழங்கப்பட வேண்டுமென கூறியதாகவும், அதற்கு இலங்கை ஜனாதிபதி பதிலளிக்கும்போது, பாராளுமன்றத் தெரிவுக்குழு ஊடாக தீர்வு காண்பதற்கு அரசு தயாராக இருப்பதையும், நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கு அரசு பொறிமுறைகளை இனங்கண்டிருப்பதையும், வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதையும் எடுத்து விளக்கியதாகவும் செய்திகள் கூறின.

இவற்றைப் பார்க்கும்போது இந்தியத் தலைவர்கள் கேட்பதுபோல கேட்பதும், இலங்கை அரசு பதில் கூறுவதைப்போல் கூறுவதும், ஒரு உயர்மட்டச் சம்பிரதாயம் போல் இருப்பதாக தமிழ் மக்கள் கூறுகின்றனர்.

இவ்வாறான பேச்சுவார்த்தைகள் இன்னொரு கட்டத்தை நோக்கி நகர்வதில்லை. சந்திக்கும்போதெல்லாம், இலங்கைத் தமிழ் பிரச்சினை பற்றியும் ஒரு வார்த்தை கேட்டுவைப்பது வழமையாகிவிட்டது.

ஆகவேதான் தமிழ் மக்களுக்கு உயர்மட்டச் சந்திப்புகள், பேச்சுவார்த்தைகள் தொடர்பில் அக்கறை இல்லாமல் போய்விட்டது.

தமிழ் மக்கள் தற்போதைய நிலைமையை சுதாகரித்துக் கொண்டு வாய்ப்புக்களை பயன் படுத்திக் கொள்ளவேண்டும். தாம் செய்யவேண்டியவற்றைச் செய்யாமல் எல்லாவற்றையும் முடக்கிப்போட்டுவிட்டு, மூன்றாவது மனிதர்கள் தமக்காக வந்து நின்று வெட்டி வீழ்த்துவார்கள் என்று குருட்டுத்தனமாக நம்பிக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை என்பதைப் புரிந்துகொண்டு காரியமாற்ற வேண்டும்.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை
என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

# மடமை அரசியலுக்குள் புதையும் இனம்!

“தமிழ் மக்கள் கூட்டமைப்புக்கு வாக்களித்திருக்கின்றார்கள் என்பதற்காக அவர்களுக்கு முதலமைச்சர் பதவியைக் கொடுக்கவேண்டுமென்றோ, அவர்களுக்கும் அமைச்சுப் பொறுப்புக்களை வழங்கவேண்டுமென்றோ சர்வதேச சமூகம் இலங்கை அரசைக் கேட்க முடியாதே. இலங்கை அரசு தமிழ் மக்களுக்கு தீர்வை வழங்காது என்று கூறிய கூட்டமைப்பு, மாகாண சபையில் தனது உறுப் பினர்களின் சுகங்களுக்காக மட்டும் தேசிய அரசாங்கம் பற்றிச் சிந்தித்தது எதற்காக? மு.காவும், அரசும் கைவிட்ட நிலையில் தாம் பெற்ற தமிழ் மக்களின் வாக்குகள் பிரயோசனமற்றுப் போய்விட்டதே. இப்படி தமிழ் மக்களும் சிந்திக்கமாட்டார்கள். தாமும் அதைப் பற்றி அலட்டிக் கொள்ளத்தேவையில்லை என்பதுதான் கூட்டமைப்பின் நிலைப்பாடாகவுள்ளது.”

**இலங்கையில்** மூன்று தசாப்தத்துக்கும்மேலாக தமிழ் மக்கள் உரிமைப் போராட்டம் நடத்தி இருக்கின்றார்கள். ஐந்து தசாப்தத்துக்கும் மேலாக தேசிய அரசியலிலிருந்து ஒதுங்கி இருக்கின்றார்கள்.

புலிகள் தனிநாடு வாங்கித் தருகின்றபோது, தமிழர் ஒருவர் ஜனாதிபதியாக இருப்பார். தமிழர் ஒருவர் பிரதமராக இருப்பார். கைக்குள்ளும், காலுக்குள்ளும் தமிழ் அமைச்சர்கள் இருப்பார்கள்.

சிங்களவர்களும், முஸ்லிம்களும் இலங்கையின் பாதிக்குள் தலையைப் பிய்த்துக் கொண்டு இருப்பார்கள். தமிழர்கள் மட்டும் இலங்கையின் மிகுதிப்பகுதியில் தனி ஆட்சி செய்வார்கள். தமிழர்களின் ஆட்சிக்கு சலாம் போட்டுக் கொண்டு வாழ விரும்புகிற சிங்களவர்களும், முஸ்லிம்களும் அடக்கம் ஒடுக்கமாக ஒரு மூலையில் வாழ்ந்துவிட்டுப் போகலாம்.

இப்படி ஒரு மிதப்பில் தமிழ் மக்கள் இருக்கின்றார்கள் என்றுதான் புலிகள் இருந்த வரை தமிழர்கள் பற்றிய அபிப்பிராயம் ஏனைய இனங்களுக்கு இருந்துள்ளது. ஆச்சரியம் என்னவென்றால், புலிகள் அழிக்கப்பட்ட பின்னரும், புலிகளிடம் எதிர்பார்த்த அதே எதிர்பார்ப்பை தமிழ் கூட்டமைப்பிடம் தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றனர் என்று எண்ணுகின்ற அளவுக்கு நிலைமை உள்ளது.

கூட்டமைப்பினர் எதுவும் செய்யமாட்டார்கள், செய்யவும் தேவையில்லை. என்ன தேர்தல் வந்தாலும் தமிழ் மக்கள் உணர்ச்சிப் புல்லரிப்போடு வந்து கூட்டமைப்புக்கு வாக்களிப்பார்கள். சர்வதேசம் மட்டுமல்ல? வேற்றுக் கிரகவாசிகள் தமிழர்களை கவனித்துக் கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் தமிழ் கூட்டமைப்பைத் தான் தமிழ் மக்களின் அரசியல் தலைமையாக ஏற்றுக் கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் தமிழ் மக்களுக்கு தீர்வு பெற்றுத் தரவும் தயாராக இருக்கின்றார்கள். தமிழ் மக்கள் கூட்டமைப்புக்கு வாக்களித்தால் வேற்றுக்கிரகவாசிகள் போர்க் குற்ற விசாரணை-யையும் நடத்த வேண்டுமென கூட்டமைப்புக்கு வாக்குறுதி வழங்கியுள்ளார்கள் என்று கூட்டமைப்பினர் கதை கூறி-னாலும் அதையும் உணர்ச்சித் தமிழர்களும், மானமுள்ள தமிழர்களும் ஏற்றுக் கொண்டு கூட்டமைப்புக்கு வாக்களிப்பார்கள் என்ற நிலைமைதான் உள்ளது.

இந்த நிலைமைதான் தமிழ் மக்களை ஒட்டுமொத்த அரசியல் அரங்கிலிருந்து அப்புறப்படுத்தியுள்ளது. மத்திய அரசில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவையும், அவரது கட்சி சார்ந்த இரண்டு பாராளுமன்ற உறுப் பினர்களையும், கிழக்கு மாகாண சபையில் உறுப்பினர் சந்திரகாந்தனையும் தவிர வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் சார்பில் எவரும் தமிழ் மக்களின் சார்பில் இல்லை. அமைச்சர் கருணா அவர்கள் தேசிய கட்சியின் சார்பில் உறுப்பினராக இருப்பதால் அவரை தமிழ் மக்கள் பொருட்படுத்தவில்லை யென்பது கூட்டமைப்பின் கருத்தாகவுள்ளது.

பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி வரிசையில் 14 பேர் கூட்டமைப்பு சார்பிலும், கிழக்கு மாகாண சபையில் 11பேர் கூட்டமைப்பு சார்பிலும், வடக்கில் நான்கு உள்ளூராட்சி சபைகள் தவிர்ந்த மிகுதி உள்ளூராட்சி சபைகளும் கூட்டமைப்பு சார்பில் ஆளும் தரப்பாக இருந்தாலும் எதிர்க்கட்சி ஆட்சியிலிருப்பது போல் இருப்பதானது தமிழ் மக்களின் அரசியல் பலமானது அப்படியே முடக்கிப்போடப்பட்டுள்ளது.

அதைப்பற்றி தமிழ் மக்களுக்கு எந்த கூச்சமும் இல்லை. கூட்டமைப்புக்கும் பொறுப்புச் சொல்லும் கடமைப்பாடு ஒன்றுமில்லை. தமிழ் மக்கள் இலங்கை அரசின் எதிரிகள் என்ற சூழலை ஏற்படுத்துவதுமே, அதைத் தக்கவைப்பதும் தமிழ் சேியத்தின் பெயராலும், தமிழ் மக்களின் தன்மானத்தின் பெயராலும் செய்து முடிக்கப்படவேண்டிய தலையாக பணிகளாக முன்னெடுக்கப்படுகின்றன.

கூட்டமைப்பை வெற்றி பெறச் செய்வதோடு தமிழ் மக்களின் கடமை முடிந்துவிடுகின்றது. பின்னர் ஒட்டுமொத்த தமிழ் மக்கள் சார்பிலும் அரசோடு இணக்க அரசியல் நடத்தும் தமிழ் பிரதிநிதிகள் செய்ய வேண்டும். அதில்கூட ஒரு தேசிய வியாக்கியானம் கூறப்படுகின்றது. அரசிலிருந்து கிடைக்கவேண்டிய சலுகைகள், உரிமைகளை, உத்தியோகத்தை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கேட்கலாம், அவர் தருவதைப் பெற்றுக்கொள்ளலாம். ஆனால் வாக்கை மட்டும் கூட்டமைப்புக்குப் போட்டு விடவேண்டும் என்பதுதான்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சளைக்காத விக்கிரமாதித்தன் போல் எல்லாவற்றையும் தாங்கிக் கொண்டு மீண்டும், மீண்டும் தன்னால் முடியுமான முயற்சிகளுக்கூடாக தனது பணியைச் செய்து கொண்டிருக்கின்றார். அவரின் முயற்சியும் பணிகளும், தமிழ் மக்கள் விழிப்படையும் போது வெற்றி பெறும் என்று அவர் உறுதியாக நம்புவதைக் காட்டுகின்றது.

ஆனால் கிழக்கு மாகாணத்தில் சந்திரகாந்தன் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, கிழக்கு மாகாணத்தில் எதிர்பார்த்ததை விடவும் கூடுதல் பணி-களை ஆற்றியுள்ளார் என்று ஒரு மதிப்பீடு இருந்தது. அவர் மீண்டும் முதலமைச்சராக தெரிவு செய்யப்படுவார் என்று நம்பினார். தமிழ் மக்கள் அவ்வாறு நம்பவில்லை.

அவர் வெற்றி பெற்றார். அவரது சகாக்கள் தோற்றுப் போனார்கள். அதிகப்படியான விருப்பு வாக்குகளைப் பெற்றார் என்பதைத் தவிர ஆளுந் தரப்புக்குள் தனி ஒரு தமிழனாக சந்திரகாந்தனை தமிழ் மக்கள் நிறகச் செய்தார்கள். முஸ்லிம் ஒருவர் முதலமைச்சராக தெரிவு செய்யப்படவேண்டும் என்று ஒட்டுமொத்த முஸ்லிம் மக்களும் வாக்களித்ததைப்போல் கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் எண்ணவில்லை. எதிர்த்து வாக்களித்தால் போதும் என்று நினைத்தார்களே தவிர தமிழர் ஒருவர் முதலமைச்சராக வரவேண்டும் என்பதையோ, அமைச்சுப் பொறுப்பில் தமிழர்கள் இருக்கவேண்டும் என்பதையோ தமிழ் மக்கள் கிஞ்சித்தும் நினைக்கவில்லை என்பதை தேர்தல் முடிவுகள் காட்டின.

மக்கள் எதை விரும்பினார்களோ அது நடந்தால்தான் அந்த வெறுமையை தமிழ் மக்கள் புரிந்துகொள்வார்கள். ஏனைய இனங்களுக்கு மத்தியில் தாம் கூட்டமைப்பை நம்பி ஏமாந்ததை எண்ணி தலைகுனிந்து நிற்பார்கள். அந்த அனுபவம் அடுத்த தடவையாவது தவறு செய்யாமலிருக்க உதவும் என்று உறுப்பினர் சந்திரகாந்தன் சிந்தித்தார். சூழல் அவரை அப்படித்தான் சிந்திக்கச் செய்துள்ளது.

முதலமைச்சராக இருக்க முடியாத சபையில் அமைச்சராக இருப்பது தர்மசங்கடமானது என்பதை அவர் வெளிப்படையாகவே கூறினார். அதற்காக வெட்கப்படவேண்டியதுதானல்ல, கூட்டமைப்புக்கு வாக்களித்தவர்கள்தான் என்பதை வேறு மாதிரிக் கூறினார்.

இப்போது கிழக்கு மாகாண சபையில் தமிழ் முதலமைச்சரும் இல்லை. தமிழ் அமைச்சர்களும் இல்லை. முஸ்லிம் மக்களும், சிங்கள மக்களும் விரும்பியது போல் முழு ஆட்சி அதிகாரத்திலும் அவர்களின் பிரதிநிதிகளே இருக்கின்றார்கள். கிழக்கு மாகாண சபையில் தமிழர்களை எதிர்வரிசையில் இருக்கச் செய்து வெறும் பார்வையாளர்களாக்கிய அரசியல் சாணக்கியம் கூட்டமைப்பையே சாரும்.

இப்போது தமிழ் மக்களின் போராட்டத்தாலும், தியாகத்தாலும், இழப்புக்களாலும் பெறப்பட்ட மாகாணசபையில் தமிழ் மக்களுக்கு எந்த அதிகாரங்களும் இல்லை. தமிழ் மக்கள் புறக் கணிக்கப்பட்டுள்ளார்கள் என்று அழுவதிலும், முஸ்லிம் காங்கிரஸ் எடுத்த முடிவு வேதனை அளிக்கின்றது. எங்களுக்கும் ஒரு காலம் வரும் என்றெல்லாம் கூட்டமைப்பு ஒப்பாரி வைப்பதிலும் அர்த்தமில்லை.

தமிழ் மக்கள் கூட்டமைப்புக்கு வாக்களித்திருக்கின்றார்கள் என்பதற்காக அவர்களுக்கு முதலமைச்சர் பதவியைக் கொடுக்கவேண்டுமென்றோ, அவர்களுக்கும் அமைச்சுப் பொறுப்புக்களை வழங்கவேண்டுமென்றோ சர்வதேச சமூகம் இலங்கை அரசைக் கேட்க முடியாதே.

இலங்கை அரசு தமிழ் மக்களுக்கு தீர்வை வழங்காது என்று கூறிய கூட்டமைப்பு, மாகாணசபையில் தனது உறுப் பினர்களின் சுகங்களுக்காக மட்டும் தேசிய அரசாங்கம் பற்றிச் சிந்தித்தது எதற்காக? மு.காவும், அரசும் கைவிட்ட நிலையில் தமிழ் மக்களின் வாக்குகள் பிரயோசனமற்றுப் போய்விட்டதே என்று தமிழ் மக்களும் சிந்திக்கமாட்டார்கள். தாமும் அதைப் பற்றி அலட்டிக் கொள்ளத்தேவையில்லை என்பதுதான் கூட்டமைப்பின் நிலைப்பாடாகவுள்ளது.

தொடர்ச்சியாக அரங்கேறி வரும் இவ்வாறான அசிங்கங்களை தூரத்திலிருந்து பார்ப்பவர்களும், அரசியல் அதிகாரத்தை முடிந்தவரை முறையாக பாவித்துக் கொள்ளும் சிங்கள மற்றும் முஸ்லிம் இனங்களும், தமிழ் மக்களின் நிலையை பார்த்துச் சிரிக்கின்றார்கள்.

தமிழ் மக்களுக்கு அரசியல் அதிகாரத்தின் தன்மை பற்றி தெளிவு இல்லையா? அல்லது அரசியல் பலத்தை எவ்வாறு, எப்படி பிரயோகிப்பது என்று அரசியல் தலைமை என்போர் புரியும் படியாக தெளிவுபடுத்தவில்லையா? அல்லது தமிழ் மக்களுக்கு ஆயுதங்கள் மீதும், வன்முறைகள் மீதும் மட்டும்தான் நம்பிக்கை உண்டா?

(தொடர்ச்சி 22 ஆம் பக்கம்...)



ரிஷி



# புலிகளின் வீழ்ச்சி! 10

> "யுத்தம் மிக மும்முரமாக நடந்துகொண்டிருந்த நிலையில், பிரபாகரனை நேரில் சந்தித்துதான் இது தொடர்பாக விளக்க முடியும். ஆயுதப் போராட்டம் நடத்தும் ஒரு அமைப்பிடம் ஆயுதங்களை கீழே வையுங்கள் என்று போனில் சொல்லிச் சம்மதிக்க வைக்க முடியாது என்பதை நீங்கள் புரிந்து கொள்வீர்கள்" என்று தனது கருத்துக்களை கே.பி. நோர்வே பிரதிநிதிகளுக்கு விளக்கி உரைத்தமை பற்றி கடந்த வாரம் பார்த்தோம்.

## இறுதி நாட்கள்...

### புலிகளுக்கு கிடைத்த இறுதிச் சந்தர்ப்பம்

இப்போது ஆளாளுக்கு, "புலிகள் அழிக்கப்படுவதை சர்வதேசமே வேடிக்கை பார்த்துக் கொண்டு இருந்தது" என்று ஒப்பாரி வைக்கிறார்கள். சர்வதேசம் சந்தர்ப்பத்தைக் கொடுத்துவிட்டு தான், வேடிக்கை பார்த்தது. யுத்தம் முடிவதற்கு 3 மாதங்களுக்குமுன் 2009 பெப்ரவரியில் கொடுத்த வாய்ப்பை புலிகளின் தலைவர் பிரபாகரன் பற்றிக் கொள்ளவில்லை. மே மாத இரண்டாவது வாரத்தில், "வாய்ப்பை மீண்டும் தாருங்கள்" என்று போனபோது டூ லேட்!

இந்த உண்மையை சொல்ல இங்கே யாரும் கிடையாது. யாராவது சொல்ல வாய் திறந்தால் துரோகி என்பார்கள்! ஆனால், அதைத்தான் இந்த தொடர் சொல்கிறது.

### பலருக்கும் தெரிந்த முடிவு

யுத்தம் முடிவை நெருங்கிக் கொண்டிருந்த நேரத்தில், அதன் முடிவு புலிகளுக்கு சாதகமாக இருக்கப் போவதில்லை என்பதற்கான அறிகுறிகள் நன்றாக தெரிய தொடங்கியிருந்தன. "இதோ யுத்தம் புலிகளுக்கு சாதகமாக திரும்பப் போகிறது. ரொம்ப நாளா காத்திருந்த பெடியள் திருப்பி அடிக்க போறாங்கள்" என்று புலிகளின் பிரசார ஊடகங்கள் சொலிக் கொண்டு இருந்தன.

ஆனால், அநேக நாடுகளுக்கு தத்தமது உளவுத்துறைகள் மூலம் யுத்தத்தின் முடிவு எப்படி இருக்கும் என்று தெரிந்திருந்தது. வேறு நாடுகளுடன் தொடர்பில் இருந்த தமிழர்களிடம், "யுத்தத்தில் புலிகள் தொடர்ந்தும் தாக்குப் பிடிக்க போவதில்லை" என்பதை அந்த நாடுகள் தெளிவாகவே கூறியிருந்தன. "இனியும் யுத்தத்தை தொடரும் எண்ணத்தை விட்டுவிட்டு, போராளிகளினதும் மக்களினதும் உயிர்களை காப்பாற்றும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது" என்று சில வெளிநாட்டு உளவுத்துறைகளும் கூறின. ஆனால், நம்புவதற்குதான் ஆளில்லை.

அமெரிக்க உளவுத்துறைகளில் ஒன்றின் (சி.ஐ.ஏ. அல்ல) ஆசிய விவகாரங்களை கவனிக்கும் அதிகாரி ஒருவர், "புலிகளின் தலைவர் யுத்தத்தை தொடரும் முடிவை எடுத்தால், தனது சொந்தப் போராளிகளை பலிகொடுக்க போகிறார் என்று அர்த்தம். யுத்தம் முடியும்போது அவர்கூட உயிர் தப்புவது சந்தேகமே" என்றார்.

### அமெரிக்கர்கள் அவதானித்த வன்னி அசைவுகள்

அதேநேரத்தில், அமெரிக்காவின் மற்றொரு உளவுத்துறையான சி.ஐ.ஏ. இற்கு எல்லாமே தெரிந்திருந்தது.

புலிகளின் தலைவர் பிரபாகரன், இராணுவத்தால் முற்றுகை இடப்பட்ட சிறிய பகுதிக்குள் சிக்கியிருக்கிறார் என்பதை சி.ஐ.ஏ. நிச்சயமாக தெரிந்து வைத்திருந்தது.

2009ஆம் ஆண்டு பெப்ரவரி மாத நடுப்பகுதியில் தொடங்கி, அந்த சிறிய பகுதிக்குள் பிரபாகரனின் நடமாட்டங்கள் எங்கெல்லாம் உள்ளன என்பதை அமெரிக்க reconnaissance satellite படங்கள் உறுதி செய்து கொண்டிருந்தன. 24 மணிநேர கவரேஜ் அவர்களிடம் இருந்தது.

வன்னிக்குள் முற்றுகைக்குள் சிக்கியிருந்த புலிகள் 'தமது இரகசியங்கள்' என்று நினைத்திருந்த பல விடயங்கள் அமெரிக்க உளவுத்துறைக்கு விலாவாரியாக தெரிந்திருந்தன. புலிகளின் தலைவர் எங்கே இருக்கிறார். எப்போது வெளியே வருகிறார். புலிகளின் நிஜமான பலம் எவ்வளவு



என்று ஆரம்பித்து சகல விடயங்களையும் அவர்கள் அறிந்திருந்தார்கள்.

புலிகள் இரகசியம் என்று நினைத்து வைத்திருந்தவற்றை வெளிநாட்டு உளவுத்துறைகள் எப்படி அறிந்து கொண்டார்கள். என்று யுத்தம் முடிந்தபின் ஒவ்வொருவரும் ஒவ்வொரு காரணங்களை சொல்லிக் கொண்டார்கள்.

பல தமிழ் ஊடகங்கள் சில தமது அறிவுக்கு எட்டிய வகையில், காரணம் கூறின. "துரோகி காட்டிக் கொடுத்தான், துரைசாமி ஊடுருவினான்" என்று சோழர் சரித்திரக் கதை, அம்புலிமாமா கதைகள் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

இந்த அப்பாவிகளுக்கு, யுத்தம் நடைபெறும் இடம் ஒன்றில் வெளிநாட்டு உளவுத்துறைகள் HUMINT (Human Intelligence) மூலம் கிடைக்கும் தகவல்களைவிட பெறுமதியான தகவல்களை SIGINT (Signals intelligence) மூலம் பெறுகிறார்கள் என்று தெரிய வாய்ப்பே இல்லை என்பதை, அவர்களது ஊடகங்களில் வெளியாகும் செய்திகளைப் பார்த்தாலே நீங்கள் புரிந்து கொள்ளலாம்.

### Almost Zero

வன்னி யுத்தக் களத்தில் புலிகள் என்ன செய் கிறார்கள் என்பது அமெரிக்காவில் அமைந்திருக்கும் NRO (National Reconnaissance Office) தரைக் கட்டுப்பாட்டு நிலையத்தில் (ground station) சட்டலைட் மூலம் பதிவாகிக் கொண்டிருந்தது. இந்த தகவல்கள் சி.ஐ.ஏ.யின் தலைமை செயலகத்துக்கு செல்ல, அவர்களது நிலவர அறிக்கைகளில் புலிகள் தொடர்பாக, "..the chances of survival are almostzero" என்ற வாக்கியம் இடம் பெற்றது.

புலிகள் ஆயுதங்களை கீழே வைத்தால் மட்டுமே, 'மட்டுப்படுத்தப்பட்ட' உதவிகளை செய்ய முடியும் என்றது அமெரிக்க உளவுத்துறை சி.ஐ.ஏ.! பொதுமக்களின் அழிவை தடுப்பதற்கு, புலிகள் ஆயுதங்களை கீழே வைத்தால்தான் எந்த அரசியல் நகர்வையும் எடுக்கலாம் என்ற முடிவுக்கு வந்திருந்தது அமெரிக்கா. நோர்வே அரசை புலிகளின் தலைமையுடன் பேசி, ஆயுதங்களை கீழே வைக்க விரும்புகிறார்களா" என்று கேட்க சொல்லியிருந்தது.

அமெரிக்காவின் கேள்விக்கான பதில் என்ன? அடுத்த வாரம்...

(தொடரும்...)



# புலிகளின் வதை முகாமில் மணியம்

வதை 29 துன்பியல் தொடர்

அன்றைய அலைச்சல் காரணமாக அசதியில் சிறிது நேரம் தூங்கி விட்டேன். காலையில் விழித்த போது, அங்கிருந்த அனைவரும் அங்குள்ள அடைப்பில்லாத மலசல கூடத்தில் காலைக் கடன்களை முடிக்கவும், முகம் கழுவவும் முண்டியடித்துக் கொண்டு நிற்பதை அவதானித்தேன். பலர் என்னருகில் வந்து என்னை உற்றுப் பார்த்துவிட்டுச் சென்றனர்.

எனக்கருகில் இருந்த ஒரு வயதான மனிதர் என்னைப் பார்த்து மெதுவாகச் சிரித்தார். பின்னர் "நீங்கள் முகம் கழுவல்லையோ?" என வினவினார். என்னிடம் கதைத்த முதல் சக கைதி அவர்தான். நான் "கழுவுவம்" என்றேன்.

பின்னர் அவர் சிறிதுநேரம் யோசித்துவிட்டு, "புதிசாக வந்திருக்கிறியள். காலையிலை விசாரணைக்குக் கூப்பிடுவினம். முகம் கழுவி ரெடியா இருந்தாத்தான் நல்லது" என்றார்.

நான் எழுந்து சென்று முகம் கழுவ முயற்சித்தேன். பல் விளக்குவதற்கு எந்தப் பொருட்களும் அங்கு இருக்கவில்லை. எப்பொழுதாவது ஒருமுறை பற்பொடி வழங்கப்படுவது உண்டு எனப் பின்னர் தெரிந்து கொண்டேன். இரண்டு தேநீர்க் கோப்பை அளவு தண்ணீரில் முகம் 'கழுவினேன்'. உடுத்திருந்த சாரத்தால் முகத்தைத் துடைத்துக்கொண்டு, எனக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் போய் இருந்தேன்.

காலைத் தேநீர் என்ற பேச்சுக்கே அங்கு இடமில்லை. அநேகமானோர் முகம் கழுவிய பின்னர் வெறும் தண்ணீரைப் பருகியதைக் கண்டேன். அது அவர்களுக்குப் பழகிப்போய் . விட்டது. தண்ணீர் இறைக்கும் இயந்திரம் இறைத்துத்தான் அங்கு தண்ணீர் வரவேண்டும். அதனால் சில வேளைகளில் குடிப்பதற்குத் தண்ணீர் இல்லாமலும் காத்திருக்க நேரிடும் என்பதைப் பின்னர் அறிந்து கொண்டேன். காலையில் தேநீர் அருந்தாமல் இருப்பது எனக்குக் கஸ்டமாக இருந்தது. சமாளித்துக் கொண்டேன்.

காலை 9 அணி அளவில் புலி உறுப்பினர்கள் ஒவ்வொருவராக வந்து, உள்ளேயிருந்த கைதிகளில் சிலரைப் பெயர் சொல்லியும், சிலரை ஏதோவொரு இலக்கத்தைச் சொல்லியும் வெளியே அழைத்துச் சென்றனர். அவர்கள் விசாரணைக்காக அழைத்துச் செல்லப் படுகிறாகள் என்பதை அறிந்து கொண்டேன். அங்கே இரண்டுவிதமான கைதிகள் இருந்தனர். ஒரு பகுதியினா விசாரிக்கப்பட்டுக் கொண்டிருந்தனர். இன்னொரு பகுதியினர் விசாரணை முடிந்து தண்டனையை எதிர்பார்த்து காத்திருந்தனர். சிலர் விசாரணை முடிந்த பின்னரும், இரண்டு வருடங்களுக்கு மேலாகவும் கூடக் காத்திருந்தனர்.

அரசாங்கச் சிறைச்சாலைகளில் உள்ள கைதிகள் போன்று, இங்குள்ளவர்கள் பகிரங்கமாக நீதிமன்றங்களில் வைத்து விசாரிக்கப்படுவதில்லை. குற்றச்சாட்டுகளும் வெளிப்படையாக சந்தேக நபர்களுக்குத் தெரிவிக்கப்படுவதில்லை. விசாரிக்கும் 'புலிப் பொடியன்' என்ன குற்றச்சாட்டு எனச் சொல்லாமல், சுற்றி வளைத்துக் கேள்விக்கு மேல் கேள்விகள் கேட்டுக் கொண்டிருப்பான். அவன் என்னத்தை எதிர்பார்க்கிறான் என்ற தெரியாததால், கைதி வேறு ஏதேதோ எல்லாம் சொல்லுவார். "என்னடா எங்களைச் சுத்தப் பாக்கிறியா?" எனக்கேட்டு பல்வேறு வகையான சித்திரவதைகள் அவர் மீது நிகழ்த்தப்பட்டு, ஏதாவதொரு குற்றம் ஒப்புதலாகப் பெறப்படும்.

அதன் பின்னரும் அவனுக்கு என்ன தண்டனை என்று தெரிவிக்கப்பட மாட்டாது. திடீரென ஒரு இரவில் அழைத்துச் செல்லப்பட்டு தண்டனை வழங்கப்படும் போதுதான், என்ன தண்டனை என்பது தெரியவரும். இந்த 'விடுதலைப் பயங்கரவாதம்' என்பது, இலங்கைத் தமிழர்களால் பெரிதாகப் பேசப்பட்டு வரும் 'அரச பயங்கரவாதத்தில்' இல்லாத, புலிகளுக்கு மட்டுமே உரிய 'சிறப்பம்சம்' ஆகும்.

நான் அங்கு காத்திருக்கையில், எனது முறையும் வந்தது. துப்பாக்கி சகிதம் வந்த ஒருவன். "பதிசாக வந்த மணியம் யார்?" என வினவினான். நான் உடனும் வாசலருகில் எழுந்து சென்று, "நான்தான்" என்றேன். அவன் "வெளியே வா" என்றுவிட்டு, இன்னொருவனை அழைத்து கதவைத் திறந்து என்னை வெளியே கூட்டிக்கொண்டு போனான்.

என்னை அழைத்தவனின் (இயக்க) பெயர் ஆதவன் என்றும், அவன்தான் இந்தச் சிறைச்சாலை வாசலின் நிரந்தரக் காவலாளி என்றும் அறிந்து கொண்டேன். அத்துடன் அந்த 'வாயிற்காப்போன்' ஆவரங்காலைச் சேர்ந்தவன் எனவும் பின்னர் தெரிந்து கொண்டேன்.

வெளியே என்னை அழைத்துச் சென்ற அவர்கள், நான் வீட்டிலிருந்து உடுத்து வந்த சாரம், சேட், பெனியன், உள்ளங்கி எல்லாவற்றையும் கழற்றிப் பெற்றுக்கொண்டு, கைதிகளுக்கு என உடுக்கக் கொடுக்கும் சிவப்பு புள்ளிகளிட்ட சாரம் ஒன்றைக் கட்டிக் கொள்ளும்படி தந்தனர். பலரால் உடுக்கப்பட்டு, நீண்ட நாட்களாக துவைக்கப்படாமல் இருந்த அந்தச் சாரத்திலிருந்து வந்த மணத்தால் எனக்கு வயற்றைக் குமட்டிக்கொண்டு வந்தது. ஆனால் வேறு வழியில்லை. வாங்கி உடுத்திக் கொண்டேன்.

அதன்பின்னர் அவர்கள் வெளியே அழைத்துச் சென்றனர். அங்கு ஒருவன் படம் பிடிக்கும் புகைப்படக் கருவியுடன் நின்று கொண்டிருந்தான். அவன் என்னைக் கண்டதும், "எப்படி ஐயா மாமியார் வீட்டு வாழ்க்கை இருக்குது?" என நையாண்டி செய்தான். எனக்கு உள்ளே கோபம் பொத்துக்கொண்டு வந்தாலும், அவனை 'ஏமாற்றக் கூடாது' என்பதற்காக அசட்டுத்தனமாகச் சிரித்து வைத்தேன்.

இந்த 'விடுதலைப் போராளிகள்' மக்களை நடாத்தும் முறையைப் பார்க்கையில், தமிழ் மக்கள் தெரியாத்தனமாகத் தங்கள் தலையில் தாங்களே மண் அள்ளிப் போட்டதை எண்ணி, அவர்கள் மீது அனுதாபம்தான் வந்தது. நான் எமது கட்சி 1960ஆம் ஆண்டுகளில் தீண்டாமை ஒழிப்புப் போராட்டங்களை நடாத்திய காலத்திலும், பின்னர் இனப் பிரச்சினை தீவிரமடைந்து, நாம் 'தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணி'யை அமைத்து வேலை செய்த காலத்திலும், சில தடவைகள் இலங்கைப் பொலிசாரால் – அதுவும் பெரும்பாலும் சிங்களப் பொலிசாரால் – கைது செய்யப்பட்டிருந்த போதிலும், அவர்கள் இவர்கள் போல எந்த நேரமும் கேலியும் கிண்டலுமாக எம்முடன் அநாகரிகமாக நடந்து கொள்ளவில்லை என்பதை நினைக்க, இவர்களது ஒழுக்கங்களின் தன்மையை இட்டு கவலையும் கோபமும்தான் ஏற்பட்டது.

பின்னர் அவர்கள் ஒரு நம்பர் எழுதிய போட் பலகையைக் கொண்டுவந்து எனது கழுத்தில் தொங்கவிட்டு விட்டு, என்னைப் பல கோணங்களில் புகைப்படம் எடுக்க ஆரம்பித்தனர். (தொடரும்...)

# நிலமெல்லாம் இரத்தம் 20

பா.ராகவன்

**கி.பி. நான்காம் நூற்றாண்டைப் பிரதி நிதித்துவப்படுத்தும் விதமாக ஒரே ஒரு விஷயத்தைக் குறிப்பிட வேண்டும் என்றால், ஒட்டுமொத்த சரித்திர ஆசிரியர்களும் சுட்டிக்காட்டுவது, கிருத்தவத்தின் பரவலைத்தான். இயேசு வின் மரணத்தை அடுத்து ஆரம்பமான இயக்கம் அது. இன்று வரையிலும் தொடர்ந்து கொண்டிருக்கும் ஒரு நடவடிக்கையே என்ற போதும், நான்காம் நூற்றாண்டில் அதன் வீச்சு, கற்பனைக்கு அப்பாற்பட்டதாக இருந்தது.**

**அது** வரை மன்னரை வழிபடச் சொல்லி அவர்கள் வற்புறுத்தப் பட்டார்கள். தமது மத வழக்கங்களை, வழிபாடுகளை அவர்கள் இரகசியமாகவே வைத்துக்கொள்ள வேண்டியிருந்தது.

அவ்வப்போது ரோமானியச் சக்கரவர்த்தியுடன் ஏதாவது சமரசம் பேசி, தமது மதவழக்கங்களைத் தொடருவதற்கு அனுமதி பெற்று வந்தார்கள். இப்போது மன்னரே கிருத்தவத்தை ஏற்று, மதம் மாறி விட்டபடியால், கிருத்தவம் ரோமின் ஆட்சி மதமாகிப் போனது.

அதாவது, ஆட்சிபுரியும் மதம், மன்னரை இனி வழிபடவேண்டாம், கர்த்தரை வழிபடுங்கள், இயேசுவின் பாதையில் செல்லுங்கள் என்று மன்னர் காஸ்டன்டைன் சொல்லி விட்டார்.

இது யூதர்களுக்கு சகிக்கமுடியாத தொரு விஷயம். மன்னரையேகூட வழிபட்டுவிடலாம், கிருத்தவத்தின் பாதையை எப்படி அவர்கள் ஏற்பார்கள்? ஒருங்கிணைந்து, இதற்கு எதிரான குரல் கொடுக்கவும் அவர்களால் முடியவில்லை. சரியான தலைவர்கள் யாரும் அவர்களிடையே அப்போது இல்லை. ஆகவே மனத்துக்குள் மட்டுமே புழுங்கினார்கள்.

மூன்றாவதும், மிக முக்கியமானதுமான பிரச்சினை, பிழைப்பு. ரோமானிய ஆளுகைக்கு உட்பட்டிருந்த அன்றைய பாலஸ்தீனில், கிருத்தவத்துக்கு மாறியவர்களின் வாழ்க்கைத் தரம் மிகவேகமாக உயரத்தொடங்கியது. அரசு வேலைகள் அவர்களுக்கு மிகச் சுலபமாகக் கிடைத்தன. மேலை நாடுகளுக்குச் சென்று கல்வி பயிலவும், தொழில் செய்யவும் சக்கரவர்த்தி ஏராளமான வாய்ப்புகளை உருவாக்கிக் கொடுத்தார். கிருத்தவத்துக்கு மாறுவோருக்கு அரசாங்கச் செலவில் நிலங்கள் கிடைத்தன. வீடுகள் வழங்கப்பட்டன. இதெல்லாம் மன்னர் தம் தனிப்பட்ட மகிழ்ச்சியைத் தெரிவிக்க மேற்கொண்ட முயற்சிகள்தாம்.

இந்தக் கிருத்தவப் புரட்சியில் அதிகம் பாதிக்கப்பட்டோர், யூதர்கள். அவர்களுக்கு ரோமானியப் பேரரசுக்குள் பிழைப்பதே பெரும்பாடு என்றாகிப் போனது. வாழ்க்கைத் தரம் உயர்வதற்காக மதம் மாறக்கூடாது என்று உறுதியாக இருந்த சிறுபான்மை யூதர்கள், வேறு வழியில்லாமல் தமது தாயகத்தைத் துறந்து வெளியே வசிக்கலாம் என்று முடிவுசெய்தார்கள்.

ஒருபெரும் கூட்டமாக அவர்கள் ஸ்பெயினுக்குப் போனார்கள். இன்னொரு கூட்டம் ரஷ்யாவுக்குப் போனது. வேறொரு குழு போலந்துக்குப் போனது. கொஞ்சப்பேர் ஜெர்மனிக்குப் போனார்கள். வடக்கு ஆபிரிக்காவின் சில தேசங்களுக்குப் போனார்கள். ரோமானியப் பேரரசுக்கு வெளியே எங்கெல்லாம் சாத்தியமோ, அங்கெல்லாம் போனார்கள்.



புராண காலத்தில், எகிப்தில் அடிமைகளாக வசித்துக்கொண்டிருந்த யூதர்களை மீட்டுக் கொண்டுவரக் கடவுள் மோசஸ் என்னும் தூதரை அனுப்பினாரோ. அதேபோல ஒரு தூதன் மீண்டும் வருவான், தங்களை மீண்டும் ஜெருசலேமின் மடியில் கொண்டு வந்து சேர்ப்பான் என்கிற ஒரு நம்பிக்கை அவர்களிடம் இருந்தது. கண்ணீருடன் அவர்கள் தம் தாய் மண்ணைத் துறந்து, ரோமானிய எல்லையைக் கடந்தார்கள்.

சரித்திரத்தில், பல்வேறு கால கட்டங்களில் பல்வேறு காரணங்களுக்குப் பாலஸ்தீனிலிருந்து யூதர்கள் வெளியேறியிருக்கிறார்கள். அவற்றுள் இதுமிக முக்கியமானதொரு கட்டம். கிருத்தவம் போல, இஸ்லாம் போல, யூதமதத்தில் 'பரவல்' என்கிற ஓர் அம்சம் கிடையாது. யூத மதத்தில், மதமாற்றம், என்கிற ஓர் அம்சம் கிடையாது. யூத மதத்தில், மதமாற்றம் என்கிற விஷயம் அறவே கிடையாது. யாரும் யூத மதத்துக்கு மாறவேண்டும் என்று அவர்கள் கேட்கமாட்டார்கள். அதேபோல், யூத மதத்திலிருந்து வெளியேறி, பிறமதங்களைத் தழுவுவோர் எண்ணிக்கையைக் குறைக்கவும் பாடுபடுவார்கள்.

அப்படியிருக்க, எகிப்து, சிரியா, ஜோர்டன், பாலஸ்தீன், லிபியா, ஈரான், ஈராக் போன்ற தேசங்களில் மட்டுமே இருந்த யூதர்கள் எப்படிப் பிற்காலத்தில் ஐரோப்பிய நாடுகளில் பரவினார்கள். ஒவ்வொரு நாட்டில் இருந்தும் ஓடஓட விரட்டப்பட்டார்கள் என்கிற சந்தேகம் எழலாம்.

இந்தச் சம்பவம்தான் அவற்றின் தொடக்கப்புள்ளி. ரோமானியப் பேரரசின் அதிகார எல்லைக்கு வெளியே போய்விடவேண்டும் என்றுதான் முதல்முதலாக அவர்கள் புறப்பட்டது. அவர்களை யாரும் வெளியேற்றவில்லை. அவர்களாகவே தான் வெளியேறினார்கள். அப்படி தேசத்தை விட்டுவெளியேறியவர்களைத் தடுக்காததுதான் ரோமானிய ஆட்சியாளர்களின் பங்கு.

நிம்மதியான வாழ்வை உத்தேசித்து இப்படி இடம்பெயர்ந்த யூதர்கள், குடியேறிய நாடுகளிலும் தனித் தீவுகளாகவே வசிக்கத் தொடங்கினார்கள். அதாவது, அந்தந்த நாட்டு மக்களுடன் அவர்கள் கலக்கவில்லை. மாறாக, ஒவ்வொரு நாட்டுக்குப் போகும் யூதர்களும் தனிக் காலனிகளை ஏற்படுத்திக்கொண்டு யூதக் குடும்பங்களாகவே சேர்ந்து வசிக்கத் தொடங்கினார்கள்.

ஸ்பெயினில் இருந்த ஒலிவ் தோட்டங்களில் அவர்களுக்கு வேலை கிடைத்தது. வைன் தயாரிப்பில் அவர்கள் ஈடுபட்டார்கள். பிறதேசங்களுக்குப் போன யூதர்கள், நெசவுத் தொழிலும் ஆடை வியாபாரத்திலும் அதிக கவனம்செலுத்தினார்கள். இத்தாலியில் அவர்கள் பேக்கரிப் பொருட்கள் தயாரித்து விற்பதைப் பிரதான தொழிலாகக் கொண்டார்கள். இன்னும் சிலர் சிறிய அளவில் வர்த்தகக் கப்பல்கள் வாங்கி, வியாபாரம் செய்யத் தொடங்கினார்கள். ஷிப்பிங் ஏஜெண்டுகளாகவும் பலர் பணியில் அமர்ந்தார்கள்.

இடமும் தொழிலும் மாறினாலும் அவர்கள்தம் பழக்கவழங்கங்களையோ, வாழ்க்கை முறையையோ மாற்றிக்கொள்ளவில்லை. எங்கு போனாலும் சுலபத்தில் அடையாளம் கண்டுகொள்ளும் விதமாகவே இருந்தது அவர்களது நடவடிக்கைகள். பார்த்தாலே சொல்லிவிடலாம் இவர்கள் யூதர்கள்.

தமது அடையாளங்களை விட்டுக் கொடுக்க யூதர்கள் ஒருபோதும்-சம்மதித்ததில்லை என்பதுதான் மிக முக்கியமான விஷயம். அவர்களது மிகப்பெரிய பலம் அதுதான்.

அதுவேதான் பிற்காலத்தில் மாபெரும் பலவீனமாகவும் ஆகிப்போனது.

கி.பி. நான்காம் நூற்றாண்டைப் பிரதி நிதித்துவப்படுத்தும் விதமாக ஒரே ஒரு விஷயத்தைக் குறிப்பிட வேண்டும் என்றால், ஒட்டுமொத்த சரித்திர ஆசிரியர்களும் சுட்டிக் காட்டுவது, கிருத்தவத்தின் பரவலைத்தான். இயேசுவின் மரணத்தை அடுத்து ஆரம்பமான இயக்கம் அது. இன்றுவரையிலும் தொடர்ந்துகொண்டிருக்கும் ஒரு நடவடிக்கையே என்றபோதும், நான்காம் நூற்றாண்டில் அதன்வீச்சு, கற்பனைக்கு அப்பாற்பட்டதாக இருந்தது.

மத்திய கிழக்கிலும் ஐரோப்பாவிலும் நன்கு பரவி, வேரூன்ற ஆரம்பித்துவிட்டிருந்தது அது. கான்ஸ்டன்டைனை அடுத்து வந்த ரோமானிய ஆட்சியாளர்களும் கிருத்தவத்தின் வளர்ச்சிக்கான என்னவேண்டுமானாலும் செய்யத் தயாராக இருந்ததால், கிருத்தவர்கள் ஒரு பொற்காலத்துக்குள் நுழைகிற உணர்வில் திளைத்திருந்தார்கள்.

இந்நிலையில் பாலஸ்தீன நிலப்பரப்பில் வாழ்ந்து கொண்டிருந்த கிருத்தவர்கள், ஜெருசலேமையும் அதன்சுற்றுப் புறப்பகுதிகளையும் முழுவதுமாகக் கிருத்தவப் பூமியாகக் காட்டும் முடிவில், கண்ணில்பட்ட இடங்களிலெல்லாம் தங்கள் தேவாலயங்களை எழுப்ப ஆரம்பித்தார்கள். இதனால் ஒரு பக்கம் ரோமானிச் சக்கரவர்த்தியையும் சந்தேஷப்படுத்திய மாதிரி ஆகும். இன்னொரு பக்கம், புனித பூமியான ஜெருசலேமும் கிருத்தவர்களின் நகரமாகவே காலப்போக்கில் அங்கீகரிக்கப் பட்டுவிடும். பெரும்பாலான யூதர்கள் ஜெருசலேமின் சுற்றுப் புறங்களிலிருந்து வெளியேறிவிட்ட நிலையில் இதற்குப் பெரிய தடைகளும் வராது என்று அவர்கள் கருதினார்கள்.

(தொடரும்...)

# பேர்முடா துலங்காத மர்மம்

"கடைசியாக திசைகாட்டும் கருவி எப்போது இயங்கியது என்பது ஞாபகம் இருக்கிறதா?"

"ஆம் கடைசியாக பகாமாஸ் தீவின் மேல் சிக்கனல் ஷோவால்ஸ் பகுதி வான்பரப்பில் வைத்து விமானத்தை வடக்கு நோக்கித் திருப்பினேன். அப்போது திசைகாட்டும் கருவி சரியாக இயங்கியது."

"அதன் பின்னர் இயங்கவில்லையா?"

"இல்லை".

அவர்களால் கூறும் காரணத்தின்படி, பேர்முடா முக்கோணப் பகுதியில், கடலுக்கு மேலே ஒருவகையான மின்காந்த அலைகளினால் (electromagnetic waves) உருவாக்கப்படும் சக்தி இயங்குகிறது. இந்த காந்தசக்தி அலைகள் எப்போதும் இருப்பதில்லை.

காலநிலை சடுதியாக மாறும்போது, மின்காந்த அலைகள் வானில் ஒன்றுடன் ஒன்று மோதும் சந்தர்ப்பங்களில் மாத்திரமே இந்த அதீத சக்தி, கடலின் மேல் உள்ள வானில் உருவாக்கப்படுகின்றது.

இவர்கள் குறிப்பிடும் சக்தி என்ன செய்யுமென்றால், விண்வெளியில் சில சுருள்களை ஏற்படுத்தும். Space wraps அல்லது time wraps என்று இதை அழைக்கிறார்கள். இந்த சுருள்கள் அல்லது wraps ஏற்படும்போது, அது தோன்றும் பகுதியில் உள்ள அனைவரும் அதற்குள் சிக்கி கொள்கிறார்கள். அதாவது, கண்களுக்கு தென்படாத ஒரு கூண்டுக்குள் அடைபட்டுக் கொள்கிறார்கள்.

இந்தச் சுருளில் அடைபட்டுக் கொள்பவர்கள், வெளியே எங்கேயும் போய்விடுவதில்லை. நீங்களும் நாங்களும் இருக்கும் இதே பூமியின் பிரபஞ்ச எல்லைக்கு உள்ளேயே இருக்கிறார்கள். ஆனால், மற்றுமோர் பரிமாணத்தில் (another dimension) இருப்பார்கள். அல்லது மற்றுமோர் 'காலத்தில்' இருப்பார்கள்.

இதை இன்னுமோர் விதமாக சொன்னால், பேர்முடா முக்கோணத்தில் இருந்து மாயமாக மறைந்து போகும் ஆட்களும், கப்பல், விமானம் போன்ற சாதனங்களும் இங்கேதான் இருக்கின்றன. ஆனால் எங்களது கண்களில் படாத பரிமாணம் ஒன்றில் இருக்கின்றன.

இவர்கள் சிக்கிக் கொண்ட பரிமாணம், கடந்த காலமாகவும் இருக்கலாம். எதிர்காலமாகவும் இருக்கலாம் என்கிறார்கள் சில விஞ்ஞானிகள். அதாவது மறைந்து போனவர்களில் சிலர் கடந்த நூற்றாண்டுக்கும் போயிருக்கலாம், இனி வரப் போகும் நூற்றாண்டுக்கும் போயிருக்கலாம்.

ஏற்கனவே கூறியிருந்தோம், இதை நம்புவது கடினம் என்று. ஆனால், இந்த தியரியில் பல ஆராய்ச்சிகள் செய்யப் பட்டிருக்கின்றன. விஞ்ஞானிகள் மட்டத்தில் பலரால் இந்த தியரி ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றது. Time warp களை அடிப்படையாக வைத்து, பல சயின்ஸ் அல்லது பிக்ஷன்களும் எழுதப்பட்டிருக்கின்றன.

இந்த காரணத்தை விட்டால், பேர்முடா முக்கோணத்தின் மர்ம மறைவுகளுக்கு வேறு எந்தவித காரணத்தையும் யாராலும் சொல்ல முடியவில்லை இன்றுவரை.

உலகின் தீர்வு காணப்படாத மர்மங்களில் ஒன்றாகவே இதுவரை இருந்து வருகின்றது. பேர்முடா முக்கோணத்தில் நடைபெற்ற ஒரேயொரு சம்பவத்தை மாத்திரம் கொடுத்திருக்கிறோம். ஆனால் இதுவரை நடைபெற்ற மாய மறைவுகள் நூற்றுக்கு மேற்பட்டவை. அத்தனையிலும் மறைந்தவை விமானங்கள், அல்லது கப்பல்கள்.

பேர்முடா தீவு கண்டுபிடிக்கப்பட்ட காலத்திலேயே (1515ஆம் ஆண்டு) அதை 'பேய் தீவு' என்று கூறியதாகத் தெரிகின்றது. சேகஷ்பியரின் The Tempest நாடகத்தில்கூட பேர்முடாவுக்கு ஒரு வகையான மர்ம வடிவமே கொடுக்கப் பட்டடிருக்கிறது.

பேர்முடா முக்கோணத்தில் நடைபெறும் மறைவுகளையும், அங்கே பொதிந்திருக்கும் மர்மத்தையும் கண்டுபிடிக்கவென்று அனுப்பிவைக்கப்பட்ட ஆராய்ச்சிக் குழுக்களும், மாயமாக மறைந்துபோன சம்பவங்களும் நடைபெற்றிருக்கின்றன. வட அமெரிக்காவுக்கு வெளியேயுள்ள நாடுகளின் கப்பல்களும், இந்த மர்ம இடத்திலிருந்து மறைந்திருக்கின்றன.

1950ஆம் ஆண்டில் இருந்து, 1954ஆம் ஆண்டு வரையிலான 4 ஆண்டுகளில் இங்கிருந்து, ஒன்பது கப்பல்கள் மாயமாக மறைந்திருக்கின்றன. ஒன்பதில் இரண்டு கப்பல்கள் ஜப்பானியக் கப்பல்கள். ஜப்பானிய அரசும் சொந்தமாக விசாரணை எல்லாம் செய்து பார்த்தது. விடை கிடைக்கவில்லை.

• 1955ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இந்தக் கடற்பகுதியை 'அபாயப் பிரதேசம்' என்று ஜப்பானிய அரசு அதிகாரபூர்வமாக அறிவித்தது.

அத்துடன் நிற்கவில்லை அவர்கள். கையோ மாறு-5 (Kaiyo Maru-5) என்ற நவீன வசதிகள் உடைய கப்பலில் விஞ்ஞானிகள் குழு ஒன்றை இந்தக் கடல் பகுதிக்கு அனுப்பியது ஜப்பானிய அரசு. மர்மங்களைக் கண்டுபிடிக்க அனுப்பப்பட்ட இந்த ஜப்பானிய விஞ்ஞானிகள் விசேட பயிற்சி பெற்றவர்கள். இந்த கப்பலில் சென்ற ஜப்பானிய விஞ்ஞானிகள் பேர்முடா முக்கோணத்தின மர்மங்களைக் கண்டு பிடித்தார்களா?

இல்லை.

கையோ மாறு-5 கப்பலே, பேர்முடா முக்கோணத்தின் கடற்பகுதியில் மாயமாக மறைந்து போனது. அதிலிருந்த பயிற்சி பெற்ற விஞ்ஞானிகள் ஒருவரது உடலோ, சிறிய உடைமையோ கூட கிடைக்கவில்லை. கப்பலின் ஒரு சிறு பலகைகூட தேடியும் கிடைக்கவில்லை.

இப்போது, ஜப்பானியர்களும், பிலிப்பைன்ஸ்காரர்களும் இந்தக் கடல் பகுதியை பிசாசுக் கடல் என்கிறார்கள்.

மர்மம் தொடர்கிறது இன்றுவரை!

*(முற்றும்)*

# ஈழம் பற்றிப் பேசுவோரை நம்பி தமிழர்கள் மேலும் இழந்துவிடக்கூடாது

## துக்ளக் சஞ்சிகையின் ஆசிரியர் தலையங்கத்திலிருந்து



> இலங்கைத் தமிழர்களுக்கு சிங்களவர்களுடன் சம உரிமை பெற்றுத்தருவதில், இந்திய அரசுக்கு பொறுப்பு உண்டு. இராஜரீக நடவடிக்கைகளினாலும் தொடர்ந்து தருகின்ற உந்துதலினாலும் வர்த்தக சலுகைகள், கூட்டமைப்பு, தீர்மான உதவிகள் போன்றவற்றினாலும் இந்திய அரசு, இலங்கை அரசை இவ்விஷயத்தில் நியாயமான பாதைக்குத் திருப்புவதில் முனையவேண்டும்.

இலங்கைத் தமிழர்களுக்கு கணிசமான அளவில் திருப்தி தருகிற வகையில் ஒரு அரசியல் தீர்வு காணப்படுவதைத் தடுத்துவிட தமிழகத்தில் நடக்கின்ற சில நிகழ்ச்சிகள் போதும். தினந்தோறும் நடக்கின்ற "கொலைகார ராஜபக்ஷ..." பேச்சுக்கள் அவ்வப்போது நடக்கிற கொடுங்கோலன் ராஜபக்ஷ கொடும்பாவி எரிப்பு சில சமயங்களில் பத்திரிகைகளில் பிரசுரமாகின்ற "இலங்கையைப் பிளந்து ஈழத்தை உருவாக்குவதே தீர்வு" என்று தீர்ப்பளிக்கின்ற கட்டுரைகள், திடீர் உண்ணாவிரதங்கள் இவை போதாதென்று டெசோ ஊர்வலம் அதைத் தொடர்ந்து மாவட்டம் தோறும் டெசோ எலும்புக்கூடு நடனம், மத்திய அரசுக்கு மிரட்டல்கள். என்று – இலங்கை அரசின் பிடிவாதம் தளர்ந்துவிடாமல் பார்த்துக்கொள்ள, இங்கு பெரும் முயற்சிகள் நடந்த வண்ணம் இருக்கின்றன.

இப்படிப்பட்ட சூழ்நிலையில், தமிழகத்தில் சில தேவாலயங்களுக்கு யாத்திரையாக இலங்கையிலிருந்து வந்தவர்கள், 'நாம் தமிழர்' இயக்கத்தினரால் தாக்கப்பட்டிருக்கின்றனர். இலங்கையிலிருந்து வந்த யாத்திரிகர்களில் பலர் தமிழர்கள் என்பது பற்றி 'நாம் தமிழர்' கவலைப்படவில்லை. யாத்திரிகர்களுக்குத் தரப்பட்டிருந்த பொலிஸ் பாதுகாப்பையும் மீறி இந்த வெறித்தனம் நடந்திருக்கின்றது.

தாக்கப்பட்டவர்களில் தமிழர் யாரும் இல்லையென்றே ஒரு பேச்சுக்காக வைத்துக் கொண்டால் கூட, இந்த வன்முறை கண்டிக்கத் தக்கதே. சிங்களவர் மீது எப்படியாவது விரோதத்தை வளர்த்துவிடுவது – என்று இந்த மாதிரி அமைப்புக்களும், சில தனிநபர் சுயநிர்ணய தமிழ்த்தலைவர்களும் முனைந்திருக்கின்றனர். இவர்களுடைய வன்முறைப் பேச்சுக்களும் மொழித்துவேஷப் போஸ்டர்களும் பிரிவினைவாத கோஷங்களும் இலங்கைத் தமிழர்களுக்கான நீதியைத் தடுக்கும். இரு நாடுகளுக்கிடையேயான உறவைக் கெடுக்கும். அது மட்டுமன்றி தமிழகத்திலும் கூட பிரிவினைவாதமும் மொழி வெறியும் மீண்டும் தலைதூக்க வழிசெய்துவிடும்.

பல வருடங்களாக நடந்துவந்த புலி – அரசு மோதல்களின் போது வெளியேறி அயல்நாடுகளில் குடியேறிவிட்ட இலங்கைத் தமிழர்கள் பலர் இலங்கையில் தமிழர் பிரச்சினை தீர்வதை விரும்பவில்லை. ஏனென்றால் நம் நாட்டில் பங்களாதேஷ் விடுதலை பெற்ற பின் அங்கிருந்து இங்குவந்த அகதிகள் திரும்பிச் செல்லவேண்டும் என்று கோருவது போல, சில நாடுகளில், குரல்கள் எழலாம். "உங்கள் நாட்டில் நீங்கள்பட்ட அவதியின் காரணமாக இங்கு வந்தீர்கள். இப்போது உங்கள் நாட்டில்தான் அமைதி திரும்பிவிட்டதே! ஆகையால் நீங்கள் திரும்பிச் செல்லுங்கள்" என்று சில நாடுகளில் சில அமைப்புக்கள் கூறத் தொடங்கலாம்.

இதைவிட முக்கியமாக இப்போது, "ஈழம் பெறுவதற்கான போர், அதற்கான ஆயத்தங்கள் செய்ய நிதி தேவை" என்றோ – இலங்கையில் தமிழர்கள் மிக மோசமான நிலையில் இருப்பதால், அவர்களுக்கு உதவ நிதி தேவை என்றோ அல்லது இம்மாதிரி வேறு காரணங்களைக் கூறியோ அயல்நாடுகள் சிலவற்றில் இலங்கைத் தமிழ் முக்கியஸ்தர்கள் பணவசூல் நடத்துகின்றார்கள். இது மிரட்டல் மூலமாகவும் நடக்கின்றது. பணத்திற்குப் பணம் ஆதிக்கத்திற்கு ஆதிக்கம். இது தொடரவேண்டும் என்றால் இலங்கையில் அமைதி திரும்பிவிட்டதாக யாரும் ஒப்புக் கொண்டுவிடக்கூடாது. ஆகையால், இலங்கையில் இன்றும் தமிழர்கள் வேட்டையாடப்படுகின்றார்கள் என்று அயல் நாட்டு அமைப்புக்கள் முன்புகாட்ட, அயல்நாடுகளுக்குச் சென்று, ஆதிக்கம் புரிந்து வசதியாக வாழ்கிற இலங்கைத் தமிழர்கள் முயல்கிறார்கள்.

இந்த ஈழ பிஸ்னஸ் தொடர்வதற்காக, அவர்கள் வசூல் செய்கின்ற நிதியில் ஒரு பங்கு, இதற்கான பிரச்சாரத்திற்காகச் செலவிடப்படுகின்றது. அந்த நிதி உதவி எங்கெங்கே செலவாகின்றது. யார் யாருக்கு பிரச்சார சம்பளம் கொடுக்கப்படுகின்றது என்பதெல்லாம், இலங்கை அரசு ஆராயவேண்டிய விஷயங்கள். ஆனால், இப்படி நடக்கிற பிரச்சாரத்தின் காரணமாக, இன்றும் இலங்கையில் தமிழர்கள் துன்புறுத்தப் படுகின்றார்கள் என்பதை நாம் நம்பிவிடக்கூடாது.

தமிழர்கள் பிரச்சினை தீரவில்லை என்பது உண்மை, அதைத் தீர்ப்பதில் இலங்கை அரசு இன்னமும் முனைப்பு காட்டவேண்டும் என்பது நியாயம், ஆனால், தமிழர்களை இன்றும் இலங்கை விரட்டுகின்றது என்பது உண்மையல்ல.

காஷ்மீர் முஸ்லிம்களுக்காக நாங்கள் போராடுவோம் என்று கூறிக்கொண்டு, பல அட்டூழியங்களை செய்துவருகின்ற பாகிஸ்தானியர்களின் செயலுக்கும் தமிழகத்தில் சிலரால் பேசப்படுகின்ற 'தொப்புள் கொடி நியாயம்' பொருந்துமா?

இதைப் பார்ப்பது போல தான் இலங்கை விவகாரத்தையும் நாம் பார்க்க வேண்டும். நமக்கு ஒரு அளவுகோல், இலங்கைக்கு வேறொரு அளவுகோல் என்பது நேர்மையான அணுகுமுறை அல்ல.

விடுதலைப் புலிகளினால் அமைக்கப்பட்ட தமிழ்த் தேசிய அமைப்பு கூட பிரிவினையைக் கைவிட்டுவிட்டது. அப்படியிருக்க, இங்கே சிலர் இன்னமும் இலங்கையைப் பிளக்கவேண்டும் என்று கோருவது, இலங்கைத் தமிழர்களுக்குத் தருகின்ற தொல்லையைத் தவிர வேறொன்றும் இல்லை.

"சீன நட்புக்கு கை நீட்டுகின்ற இலங்கையுடன் நமக்கு ஏன் நட்பு?" என்ற கேள்வி ஒன்று இப்போது ஒலிக்க ஆரம்பித்திருக்கின்றது. சீனாவும் இலங்கையும் நெருங்குவதற்குப் பாலம் அமைத்துக் கொடுத்ததே இந்தியாதான் என்பது நம் கருத்து. அது இப்போது இலங்கைக்கு வசதியாகப் போய்விட்டது. இந்தியாவைக் காட்டி சீனாவிடமும் சீனாவைக் காட்டி இந்தியாவிடமும் உதவி பெறுவதற்கு இந்த நிலை இலங்கைக்கு உதவுகின்றது.

இலங்கைக்கு மிகவும் தேவைப்பட்ட போது இராணுவ உதவிகளையும் ஆயுத விநியோகத்தையும் செய்ய மத்திய அரசு தயங்கியது. தமிழகத்தில் என்ன நடக்குமோ என்ற அநாவசியமான அச்சம் மத்திய அரசுக்கு வந்ததால், இலங்கைக்குச் செய்திருக்கக்கூடிய சில உதவிகளை இந்திய அரசு செய்யவில்லை. அந்த நேரத்தில் சீனா உள்ளே நுழைந்தது. இதற்கு இலங்கையைப் பழிப்பதினால் என்ன பயன்?

நமக்கு இலங்கையுடன் வர்த்தக உறவு விரிவாக உள்ளது. தமிழகத்திற்கே கூட இலங்கையின் சந்தை பயன்படுகின்றது. மோட்டார் வாகனங்களிலிருந்து துணிமணிகள் வரை பல பொருட்கள் தமிழகத்திலிருந்து இலங்கைக்குச் செல்கின்றன.

ஐ.நா. சபையில் இலங்கைக்கு எதிராக வந்த தீர்மானத்தை ஆதரித்து இந்திய அரசு வாக்களித்தது ஒரு பெரும் தவறு. அத்தீர்மானத்தை இந்தியா எதிர்த்திருந்தால் இரு நாடுகளின் உறவு வலுப்பெறுவதற்கு அது உதவியிருக்கும். இப்போது தமிழக அரசு, இலங்கையிலிருந்து வந்த கால்பந்து ஆட்டக்காரர்களைத் திருப்பி அனுப்பியதும் தவறு. இது தமிழர் பிரச்சினையைத் தீர்க்க உதவக்கூடிய செயலல்ல. இரு நாடுகளுக்கிடையே கலாசார, விளையாட்டுப் பந்தய உறவுகள் தொடர்ந்து இருந்து வருகின்றன. அது கெடுவது, நல்லது அல்ல. இதை இலங்கைத் தமிழர்களே விரும்பவில்லை என்பது செய்திகளிலிருந்து தெரிகின்றது.

இலங்கைத் தமிழர்கள் எனும்போது ஒரு உண்மை நினைவில் வைக்கத் தக்கது. கொழும்பில் வாழ்கின்ற இந்திய வம்சாவளித் தமிழர்களுக்கும், மலையகத் தமிழர்களுக்கும் – வடப்புறத் தமிழர்களுடன் நல்லுறவு இல்லை. கிழக்குத் தமிழர்கள்கூட இப்போது வடக்குத் தமிழர்களை முழுமையாக ஏற்பதில்லை. இப்படிப் பல வித்தியாசங்களைக் கொண்ட தமிழர்களில் வடக்குத் தமிழர்களை மட்டுமே மனதில் கொண்டு தமிழகத்தில் போராட்டங்கள், திடீர் உண்ணாவிரதங்கள், வீராவேஷ பேச்சுக்கள் எல்லாம் நடக்கின்றன. இலங்கையில், கொழும்பு தமிழர்களும் மலையகத் தமிழர்களும் – இலங்கை அரசில் இடம்பெற்று வருகின்றார்கள். அவர்கள் எல்லாம் தமிழர்கள் இல்லையா? அவர்களது அமைதியைக் கெடுக்கின்ற வகையில், இங்கு இலங்கை அரசை விமர்சனம் செய்வது விவேகம்தானா?

இன்றோ வடக்குத் தமிழர்கள்கூட, பிரிவினைக் கோஷத்தைக் கைவிட்டு 'சம உரிமை' கோரிக்கையைத்தான் வலியுறுத்துகின்றார்கள். அவர்களுடைய அந்த கோரிக்கைக்கு உதவுவதே இந்திய அரசின் கடமை. இதை நட்பு மூலமாகச் செய்யமுடியுமே தவிர, பகைமையினால் சாதிக்கமுடியாது.

"தமிழர்களை இரண்டாம்தர குடிமக்களாக நடத்தியதால், வடக்கிலும் கிழக்கிலும் தீவிரவாதத்தை தோற்றுவிக்க உதவியது நாங்கள்தான்" என்ற உண்மையை உணர்ந்து இனி தமிழர்களிடையே நம்பிக்கையை வளர்க்க இலங்கை அரசு முனையவேண்டும்.

அரசுக்கும் புலிகளுக்கும் இடையே நடந்த மோதலினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு, குடிபெயர்ந்தவர்கள் மீண்டும் தங்கள் சொந்த இடங்களுக்குப் போய்ச் சேருவதற்கு விரைவான ஏற்பாடுகள், தமிழ்மொழிக்கு, சிங்கள மொழிக்குச் சமமான அந்தஸ்து, படிப்பிலிருந்து வேலைவாய்ப்பு வரை சிங்களவர்களுக்குச் சமமாக தமிழர்களுக்கும் உரிமைகள் இந்தியாவில் உள்ளது போல் சமஷ்டி (பெடரல்) அரசியல் அமைப்பு ராஜீவ் – ஜெயவர்த்தன ஒப்பந்தம் அமுல்படுத்துவது போன்றவற்றை இலங்கை அரசு முனைந்து விரைவில் செய்துமுடிக்கவேண்டும்.

இலங்கையில் வாழ்கின்ற வடக்கு கிழக்கு தமிழர்களும் பிரிவினைவாதம் பேசுகிறவர்களைப் புறக்கணித்து சிங்களவர்களுடன் சம உரிமை பெற்று வாழ்வில் திருப்தி காணவேண்டும். தமிழகத்தில் உள்ள சில, வாக்கு இல்லாத தலைவர்கள், தங்களுக்கு 'ஈழம்' பெற்றுத் தந்துவிடுவார்கள் என்கின்ற எண்ணத்தை இலங்கைத் தமிழர்கள் வளர்த்துக் கொள்ளக்கூடாது. அந்த மாதிரி பேசுபவர்களுக்கு தமிழகத்திலேயே ஆதரவு கிடையாது என்பதை வடக்குத் தமிழர்கள் உணரவேண்டும்.

முன்பு, ஈராக் மீது அமெரிக்கா படையெடுத்தபோது சில நாடுகள் அமெரிக்காவை எதிர்த்து வீராவேசமாகக் குரல் கொடுத்தன. இந்த எதிர்ப்பினால் அமெரிக்கப்படைகள் போர் நிறுத்தம் செய்துவிடும் என்று நம்பிய சதாம் உசேன், சூரத்தனம் காட்டி தனது முடிவை எய்தினார். இப்படி வெளியிலிருந்து எந்தப் பாதிப்பும் இல்லாமல் 'தர்மக்கூச்சல்' போடுகிறவர்களை நம்பி நாசம் அடைந்த சதாம் உசேன் போல், இலங்கைத் தமிழர்கள் நடந்து கொள்ளக்கூடாது.

தமிழகத்திலிருந்து ஈழம் பற்றி வாய் கிழிய பேசுகிறவர்களுக்கு அதனால் நஷ்டம் எதுவும் இல்லை. ஆனால் இலங்கைத் தமிழர்களுக்கு அது தீமை செய்யும். இதை உணர்ந்து வடக்கில் வாழ்கின்ற தமிழர்களும் சமஉரிமை கோருகின்ற, பிரிவினை கோஷத்தையும், வன்முறையையும் நாடாத தலைவர்களுக்கும் அமைப்புக்களுக்கும் ஆதரவளித்து அமைதியை நாடவேண்டும்.

இலங்கைத் தமிழர்களுக்கு சிங்களவர்களுடன் சம உரிமை பெற்றுத்தருவதில், இந்திய அரசுக்கு பொறுப்பு உண்டு. இராஜரீக நடவடிக்கைகளினாலும் தொடர்ந்து தருகின்ற உந்துதலினாலும் வர்த்தக சலுகைகள், கூட்டமைப்பு, தீர்மான உதவிகள் போன்றவற்றினாலும் இந்திய அரசு, இலங்கை அரசை இவ்விஷயத்தில் நியாயமான பாதைக்குத் திருப்புவதில் முனையவேண்டும்.

தமிழகமும் இதற்கு உதவியாக இருக்கவேண்டும். தமிழகத்தில் சிங்கள விரோதத்தையும் இலங்கை அரசின் மீதான வெறுப்பையும் வளர்த்து வருகின்ற துவேஷ மற்றும் பிரிவினைவாத பிரச்சாரங்களை அடக்கவேண்டும். இது எதிர்காலத் தமிழகத்திற்கே கூட நல்லது. இல்லாவிட்டால் இங்கேயும்கூட ஒரு வன்முறை நிறைந்த பிரிவினைவாதப் பிரச்சாரத்திற்கான விதை ஊன்றப்பட்டுவிடக்கூடிய ஆபத்து உண்டு.

# மு.கா.வின் இணக்க அரசியல் தமிழ் - முஸ்லிம் உறவைப் பாதிக்குமா?

"முஸ்லிம் காங்கிரஸ் தலைமை எடுத்த முடிவானது முஸ்லிம் காங்கிரஸ் என்ற உடம்புக்கு உள்நோயோ, வெளி நோயோ வருவதை தடுத்துள்ளது என்று குறிப்பிடலாம். இதனை இன்னுமொரு வார்த்தையில் குறிப்பிடு வதென்றால் ஒரு வைத்தியர் நோயாளிக்கு ஏற்பட்டிருக்கும் நோயைக் கண்டுபிடித்து அந்த நோய் உடம்பைத் தாக்காதவாறு நோய் எதிர்ப்பு மருந்தை பயன்படுத்துவது போல் முஸ்லிம் காங்கிரஸின் தலைமை ஒரு வைத்தியராக இருந்து தனது இயக்கத்திற்கு உள்ளேயும், வெளியேயும் ஏற்படயிருந்த நோயை தடுத்துள்ளது என்று குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும்"

முஸ்லிம் காங்கிரஸ் அரசாங்கத்துடன் சேர்ந்து ஆட்சியமைக்குமா? தமிழ் தேசிய கூட்டமைப்புடன் சேர்ந்து ஆட்சியமைக்குமா? தமிழ் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்துடன் சேர்ந்து ஆட்சியமைக்குமா? அல்லது தேசிய அரசு கிழக்கு மாகாண சபையில் ஏற்படுத்தப் படுமா? என்ற வாதப்பிரதிவாதங்கள் கிழக்கு மாகாண சபையில் ஆட்சியமைப்பது தொடர்பாக கடந்த ஒரு வார காலமாக ஊடகங்களிலும் அரசியல் வட்டாரத்திலும் சூடாக விவாதிக்கப்பட்ட ஒரு கருப்பொருளாக மாறியிருந்தது. இந்த வாத, விவாதத்திற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைமை கடந்த திங்கள் இரவு அரசாங்கத்துடன் இணக்கப்பாட்டுடன் ஆட்சியமைப்பது என்ற முடிவுடன் முற்றுப்புள்ளி வைத்தது.

முஸ்லிம் காங்கிரஸ், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினரான நஜீப் ஏ மஜீத்தை இரண்டரை வருடங்களுக்கு முதலமைச்சராக சிபாரிசு செய்து இரண்டு மாகாண அமைச்சுக் கள் மற்றும் முஸ்லிம் சமூகம் சார்ந்த உடன்படிக் கைகளைச் செய்து அரசாங்கத்துடன் இணைந்து கிழக்கு மாகாண சபையில் ஆட்சியமைக்க எடுத்த முடிவுகள் தொடர்பான கதையாடல்கள் தற்போது சிறுபான்மை அரசியல் தளத்தில் மீண்டும் கருப்பொருளாக இடம்பெறுவதை நாம் அவதானிக்கலாம். அரசியல் தளத்தில் இடம்பெறும் இந்த கதையாடல்களை நாம் அவதானிப்போமாயின்.

முஸ்லிம் காங்கிரஸ் அரசாங்கத்துடன் இணைந்தது தவறு, முஸ்லிம் மக்கள் அரசாங்கத்துடன் இணைவதற்கு வாக்களிக்க வில்லை. அரசாங்கத்திற்கு எதிரான பிரச்சாரத்தை செய்தே முஸ்லிம் காங்கிரஸ் மக்களின் ஆணையைப் பெற்றது. எனவே, முஸ்லிம் காங்கிரஸ் அரசாங்கத்துடன் இணைந்து ஆட்சியமைத்தமை முஸ்லிம் சமூகத்திற்கு செய்த துரோகம், சிதைந்து போயிருந்த தமிழ், முஸ்லிம் உறவை கட்டியெழுப்புவதற்கான சந்தர்ப்பத்தை முஸ்லிம் காங்கிரஸ் இல்லாமல் செய்துவிட்டது. இதனால் மீண்டும் தமிழ், முஸ்லிம் உறவுகள் பிளவுபட்டு முரண்படக்கூடும் என்ற அபாய அறிவிப்புக்கள் இன்று அரசியல் வட்டாரத்தில் குறிப்பாக தமிழ் தேசிய கூட்டமைப்பைச் சேர்ந்த அரசியல்வாதிகளால் முன்வைக்கப்படும் விமர்சனங்களாக காணப்படுகின்றன.

அதேபோன்று மாற்று அரசியல்வாதிகள் மற்றும் முஸ்லிம் புலமையாளர்களால் தமிழ், முஸ்லிம் மக்களுடையே ஏற்படயிருந்த சகவாழ்வை முஸ்லிம் காங்கிரஸ் இல்லாமல் செய்துவிட்டு தனது கொள்கை அரசியலையும் கைவிட்டுள்ளது என்ற கதையாடலும் சிறுபான்மை அரசியல்தளத்தில்

> "முஸ்லிம் காங்கிரஸ் அரசாங்கத்துடன் இணைந்து ஆட்சியமைத்தமை முஸ்லிம் சமூகத்திற்கு செய்த துரோகம், சிதைந்து போயிருந்த தமிழ் - முஸ்லிம் உறவை கட்டியெழுப்பு வதற்கான சந்தர்ப்பத்தை முஸ்லிம் காங்கிரஸ் இல்லாமல் செய்துவிட்டது.
>
> இதனால் மீண்டும் தமிழ், முஸ்லிம் உறவுகள் பிளவுபட்டு முரண்படக்கூடும் என்ற அபாய அறிவிப்புக்கள் இன்று அரசியல் வட்டாரத்தில் குறிப்பாக தமிழ் தேசிய கூட்டமைப்பைச் சேர்ந்த அரசியல்வாதிகளால் முன்வைக் கப்படும் விமர்சனங்களாக காணப்படுகின்றன."

இடம்பெற்றுவருவதை நாம் அவதானிக்கலாம்.

இரு வாரங்களுக்கு முன்னர் எழுதிய கட்டுரையான "முதலமைச்சர் என்ற பதவி முஸ்லிம் உம்மாவின் பிரச்சினைக்கு மருந்தாக அமையாது" என்ற தலைப்பிலான கட்டுரையில் முஸ்லிம் காங்கிரஸ் எடுக்கவேண்டிய முடிவு பற்றி ஒரு சிறிய பார்வையைச் செலுத்தியிருந்தேன். அந்த கட்டுரையின் பரப்பிலிருந்து முஸ்லிம் காங்கிரஸின் முடிவு அமைந்துள்ளது என்பதை வாசகர்கள் புரிந்து கொண்டிருப்பார்கள். ( அந்தக் கட்டுரை தொடர்பாக தமிழ் சகோதரர்கள் மின்னஞ்சல் ஊடாக தங்களது கருத்துக்களை தெரிவித்திருந்தார்கள் அவர்களுக்கு எனது நன்றிகள் ) இதனை ஏன் இங்கு மீண்டும் சுட்டிக்காட்டுகிறேன் என்றால் சமகால அரசியல், யதார்த்த அரசியல் மற்றும் தாம் சார்ந்த சமூகத்தின் இருப்பை ஆழப்படுத்துவதற்கான அணுகுமுறைகள் என்பனவற்றைக்கொண்டு ஒரு சிறுபான்மை இனம் தனது அரசியல் முடிவுகளை எடுப்பது என்பது அரசியல் சாணக்கியமாகும். இவ்வாறு எடுக்கப்படும் முடிவானது இலகுவான, சடுதியான முடிவாக அமையாது. புலதரப்பட்ட கலந்துரையாடல்கள் மற்றும் பேச்சுவார்த்தைகளின் பின்புதான் இவ்வாறான முடிவுகளை எட்டமுடியும்.

ஒரு ஆளுமை மிக்க தலைமைத்துவத்தை பரிசீலிக்கும் அரசியல் காய்நகர்த்தலாக கூட நாம் இதனை கணிக்க முடியும். முஸ்லிம் காங்கிரஸ் தலைமை இந்த முடிவு எடுக்கப்படுவதற்கு முன்தான் இரு கொள்ளி எறும்பின் நிலையில் உள்ளதாக குறிப்பிட்டிருந்ததையும் நாம் இங்கு கவனிக்கத்தக்கது.

முஸ்லிம் காங்கிரஸின் தலைமை அரசாங்கத்திற்கு எதிரான பிரச்சாரம் செய்தது என்பதை நாம் மறுக்கமுடியாது. தேர்தல் மேடைகளில் முஸ்லிம் காங்கிரஸின் தலைமை யால் முஸ்லிம் சமூகத்தின் மீது அரசாங்கம் மேற்கொண்டு வரும் பண்பாட்டு, சமூக, சமயரீதியான தாங்கங்களை எதிர்த்து காட்டமாக அரசாங்கத்தை விமர்சித்த விடயங்கள் என்பன மறைவான விடயங்கள் அல்ல ஒரு பலம்பொருந்திய அரசாங்கத்தின் ஆட்சியில் கூட்டாக இருந்து கொண்டு அந்த அரசாங்கத்தையே காட்டமாக விமர்சிப்பது என்பதும் அதனை அரசாங்கம் பொறுத்துக் கொண்டது என்பதும் சாதாரண விடயமல்ல. அதேநேரம் அமைச்சு பதவி துறப்பு, மாற்று கட்சிக்கான ஆதரவு என்ற விடயங்கள் கட்சிக்கு உள்ளயே இருந்து மேற்கொள்ளப்பட்டதும் அதனையும் உடைத்தெறிந்து இணக்கப்பாட்டு அரசியலின் மூலம் முஸ்லிம் காங்கிரஸ் இன்ற இயக்கம் தேர்தலுக்கு முன்பு இருந்தது போல் சிதைவடையாமல் தேர்தலுக்கு பின்பும் பாதுகாத்தது என்பது முஸ்லிம் காங்கிரஸின் தலைமையின் சாதனையாககூட கருதமுடியும்.

எனவே, அரசாங்கத்துக்கு எதிரான பிரச்சாரங்களை முஸ்லிம் காங்கிரஸ் முன்னெடுத்திருந்தாலும் தேர்தல் முடிவுகளை வைத்து ஆட்சியமைப்பது தொடர்பில் அதன் சாதக, பாதகங்களைக் கொண்டே தங்களது ஆதரவை வழங்குவோம் என்ற வார்த்தைகளை முஸ்லிம் காங்கிரஸின் தலைமை கூறத் தவற வில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

அதேபோன்று, தமிழ் தேசிய கூட்டமைப்பு முதலமைச்சர் உட்பட ஏனைய அமைச்சுக் களில் மூன்றைக்கூட முஸ்லிம் காங்கிரஸுக்கு வழங்கத் தயாராக இருந்ததோடு வடக்கு மாகாணசபையில் போனஸ் ஆசனங்களை வழங்குவதாகவும் குறிப்பிட்டிருந்தது. இந்த இடத்தில் பதவிக்கு சோரம் போகக்கூடிய அதிகப்படியான வாய்ப்புக்கள் இருந்தும் முஸ்லிம் காங்கிரஸ் அதனை அடைய விரும்பவில்லை. மாறாக தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு நன்றியைத் தெரிவித்து தங்களது சமூகத்தின் சமகால அரசியலை விளக்கியதுடன் சகவாழ்வு அரசியல் என்பது தமிழ், முஸ்லிம் மக்களுக்கிடையில் பெருத்த தூரத்தில் இல்லை என்பதை எடுத்துக்காட்டி முஸ்லிம் காங்கிரஸ் தனது நியாயங்களை தமிழ் தேசிய கூட்டமைப்புடன் விளக்கியுள்ளது. இந்த விடயங்களை இருசாராரும் மக்கள் மயப்படுத்தும் செயன்முறை பாங்கில் ஒரு புதிய பாதையை திறந்துவிட வேண்டும்.

மூன்றாம் உலக நாடுகளில் கொள்கை, கோட்பாடுகளை போட்டுக்கொண்டு அரசியல் செய்வது என்பது எந்தக் கட்சிக்கும் உசிதமான விடயங்களாக இருக்கப் போவதில்லை. சில விடயங்களில் கொள்கை, தர்மங்களை மீறி சந்தர்ப்ப அரசியல் செய்ய வேண்டிய தேவை இன்று ஏற்படடுள்ளது. உதாரணமாகப் குறிப்பிடுவ தென்றால் இன்று முஸ்லிம் காங்கிரஸில் இருக்கும் பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள் அல்லது கட்சியின் உயர்பீட உறுப்பினர்களில் எத்தனை பேர் கட்சியின் யாப்பை வாசித்து புரிந்து கொண்டு செயற்படுகின்றார்கள்.

(22 ஆம் பக்கம் பார்க்க...)

நன்றி: இணையம்

# மறக்கப்பட்டு வரும் மதங்கள் இனசன்ட் ஒப் முஸ்லிம் ஒரு பார்வை

- பிரகஸ்பதி -

இலங்கையில் யாரெல்லாம் கண்டனம் தெரிவிக்க முடியுமோ அவர்களெல்லாம் கண்டனம் தெரிவித்து விட்டனர் என்று சொல்லும் அளவுக்கு கண்டனங்கள் வந்து கொண்டிருக்கின்றன. அதேநேரம் நாட்டின் பல பிரதேசங்கள் ஸ்தம்பிக்கும்வகையில் ஆர்ப்பாட்டங்களும் போராட்டங்களும் நடத்தவும் பட்டுக் கொண்டிருக்கின்றன.

அந்தவகையில் இந்த வாரத்தில் உலகெங்கும் இஸ்லாமியர்கள் வாழும் நாடுகளில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இவ்வாறான குழப்பங்கள் குறித்து இந்த வாரத்தில் ஆராய இருக்கிறோம்.

அரசியல் குழப்பங்கள், மாகாண சபை அமைப்பு மற்றும் அதன் தில்லானாக்கள் நிறைவடைந்து விடாத நிலையில், இப்போது பல்வேறு பிரச்சினைகளும் எழாமலில்லை. இந்த நிலையில், அமெரிக்காவில் வெளியான இனசன்ட் ஒப் முஸ்லிம்ஸ் என்கிற படம் பெரியளவான குழப்பகரமான நிலையை உலகளவில் ஏற்படுத்தியிருக்கிறது. அதில் இலங்கை மக்களும் அல்லற்படுகிறார்கள். இந்தப் போராட்டங்கள் இதுவரை பல உயிர்களைப் பலி கொண்டும் இருக்கிறது.

உலகளவில் முஸ்லிம் மக்கள் வாழும் நாடுகளில் போராட்டங்கள் நடைபெறுகின்ற அதேவேளையில் பாகிஸ்தான் அமைச்சர் ஒருவர் இந்த இனசன்ட் ஒப் முஸ்லிம் படத்தின் இயக்குநரைக் கொலை செய்பவர்களுக்கு ஒரு இலட்சம் அமெரிக்க டொலர் கொடுக்கப்படும் என அறிக்கை விடுத்துள்ளார். அதனை உடனடியாகவே பாக் பிரதமரின் ஊடகப் பேச்சாளர் கண்டித்தும் இருக்கிறார்.

இந்த நிலையில், இந்த மாத நடுப்பகுதி முதல் ஆரம்பமான இஸ்லாத்தை அவமதிக் கும் வீடியோப் பிரச்சினை தொடர்பில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அறிக்கை ஒன்றை விடுத்த புத்தசாசன, சமய விவகார அமைச்சு தனது கண்டனத்தையும் தெரிவித்துள்ளது.

அதில், அரசியலமைப்பில், மதச் சுதந்திரம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மத உணர்வுகளை புண்படுத்துவதற்கு எந்த தனிநபரோ, குழுவோ அனுமதியை கொண்டிருக்கவில்லை. 'இந்த வீடியோவை தயாரித்தவர்கள், அதை வாபஸ் பெறவேண்டும் என நாம் கோருகி றோம். எந்த மதத்தையும் அவமதிப்பதை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

அதேநேரம், இஸ்லாத்துக்கு எதிரான அமெரிக்க திரைப்படம் குறித்து கிழக்கு மாகாண சபை அமைப்பது தொடர்பான பிரச்சினைகள் ஓரளவுக்கு நிறைவு பெற்றதை அடுத்து சனிக்கிழமை சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார பிரதியமைச்சர் ஹிஸ் புல்லாஹ் கண்டனத்தை வெளியிட்டிருந்தார்.

அவரது கண்டனத்தில், மேற்கத்தேய நாடுகளின் இஸ்லாம் மதத்திற்கும் இஸ்லா மியர்களுக்கும் எதிராக இதுபோன்ற தொடர்ச்சி யான காழ்ப்புணர்ச்சிகளை விஷமிகள் மேற் கொண்டு வருவதை முஸ்லிம்களாகிய நாம் இனியும் பொறுத்திருந்து சகிக்க முடியாது.

இத்தகைய இழிநிலையை – திரைப்படத் தின் மூலம் தயாரித்த இத்திரைப்படத்தின் தயாரிப்பாளர், இத்திரைப்படத்தை வெளியீடு செய்ய உதவிய அனுசரணையாளர்கள் மற்றும் இத்திரைப்படம் காட்சியினை ஒளிபரப்பிய ஊடகங்கள் இவை அனைத்துக்கும் எதிரான சட்ட நடவடிக்கை மேற்கொள்வதோடு இத்தகையவர்களை சட்டத்தின் முன் நிறுத்தி பகிரங்கமாக தண்டிக்கப்பட வேண்டும்.

அத்துடன், இத்தகையோர்களுக்கு வழங்கும் தண்டனைகள் இனிவரும் காலங்களில் இஸ்லாத்துக்கும் இஸ்லாமி யர்களுக்கும் எதிராக சதித் திட்டங்களை மேற்கொள்ள காத்திருக்கும் அனைவருக்கும் இது ஒரு சாட்டை அடியாக அமையும் என்பதுடன் இவ்வாறான ஈனச்செயல்களில் ஈடுபட்டோர்கள் உடன் தண்டிக்கப்படாத விடத்து தொடர்ந்தும் உலக முஸ்லிம்களின் ஆக்ரோஷமான போராட்டங்கள் ஓயப் போவதில்லை எனத் தெரிவித்துள்ளார்.

அதேநேரம், முஹம்மது நபியை அவமதிக்கும் அமெரிக்க திரைப்படத்திற்கு பிரதி அமைச்சர் அதாஉல்லா நாடாளு மன்றத்தில் விடுத்த கண்டனத்தில், இறைத் தூதர் முஹம்மத் நபி (ஸல்) அவர்களையும் இஸ்லாத்தையும் அவமதித்து வெளியிடப்பட்ட குறுந் திரைப்படத்திற்கும் அதன் காரணகர்த்தா வான அமெரிக்காவுக்கும் எதிரான கண்டனத் தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முஹம்மத் நபி (ஸல்) அவர் களை அவதூறு செய்யும் திரைப்படம் வெளியிடப்பட்டதற்கு இன்று முழு உலக முஸ்லிம்களுமே கிளர்ந்தெழுந்துள்ளனர். அமெரிக்கா உலகின் எந்த நாட்டினையும் விட்டுவைக்கவில்லை. உலகிலுள்ள அரேபிய நாடுகளையும் அமெரிக்கா சிதைத்து வருகின்றது. அதேபோன்றே எமது நாட்டையும் சிதைப்பதற்கு முனைந்திருக்கின்றார்கள். அதற்கும் உடந்தையாக செயற்படும் முகவர்களும் எமது நாட்டில் இல்லாமலில்லை. இன்று இலங்கையை மனித உரிமை மீறல் தொடர்பான போலியான குற்றச்சாட்டு களுக்கு உள்ளாக்கி ஜெனீவா வரை கொண்டு சென்றதும் இதே அமெரிக்கர் கள்தான். இவர்கள் உலகின் சண்டியர்களாக செயற்பட்டுக்கொண்டு நாடுகளுக்கும் இனங்களுக்கும் இடையில் பிரச்சினையை தோற்றுவித்து இஸ்லாத்தையும் அழிக்க முனையும் கீழ்த்தரமான செயற்பாடுகளுக்கு எனது வன்மையான கண்டனத்தை தெரிவிக்கின்றேன் எனத் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், முஹம்மது நபி (ஸல்) அலைஹிவஸ்ஸலம் அவர்களை இழிவு படுத்தும் வகையில் அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட திரைப்படத்திற்கு எதிராக கிழக்கில் கடந்த வெள்ளிக்கிழமை ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறை, கல்முனை, பாலமுனை, நிந்தவூர், நாச்சி மடு ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளதுடன், அமெரிக்க ஜனாதிபதியின் உருவப்படங் களையும் ரயர்களையும் எரித்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான் குடியிலும் ஹர்த்தால் அனுஸ்டிக்கப்படு வதுடன், நகரிலுள்ள கடைகள், வங்கிகள், அலுவலகங்கள், பாடசாலைகள் உட்பட தனியார் அரசாங்க நிறுவனங்கள் அனைத் தும் மூடப்பட்டுள்ளன. திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியா உலமா சபையின் ஏற்பாட்டில் எதிர்ப்பு ஆர்ப் பாட்ட ஊர்வலமொன்று நடத்தப்பட்டது. பிராதன பள்ளிவாசல்களில் இருந்து ஆரம்பமாகி கிராமக்கோடு மைதானத்தை அடைந்து அங்கு பொதுக்கூட்டமும் விஷேட துஆப்பரத்தனையும் இடம் பெற்றன. ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்ட இந்த ஊர்வலத்தின் இறுதியில் அமெரிக்காவுக்கு எதிரான கோஷங்களோடு அமெரிக்கா ஜனாதி பதியின் கொடும்பாவியும் எரிக்கப்பட்டது.

இக் குறும்படத்திற்கு எதிர்ப்பு தெரி வித்து ஜும்மாத் தொழுகைக்குப்பின் கல்முனையில் உள்ள நான்கு ஜும்மா பள்ளிவாசல்களின் நம்பிக்கையாளர் கள் மற்றும் உலமாக்களின் ஏற்பாட்டில் நடைபெற்ற மாபெரும் பேரணி கல்முனை பெரிய பள்ளிவாசலில் இருந்து ஆரம்பமாகி கல்முனை நகர் வரை சென்றதுடன் கல் முனை பிரதேச செயலாளரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

(22 ஆம் பக்கம் பார்க்க...)

# நல்லிணக்க ஆணைக்குழு

# அறிக்கையின் முக்கிய பகுதிகள்

கற்றுக் கொண்ட பாடங்களும் நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பில் பல்வேறு வியாக்கியானங்கள் பேசப்படுகின்றன.

பல அரசியல் தலைவர்கள் உட்பட மக்கள் பிரதிநிதிகளும் அந்த அறிக்கையை முழுமையாகப் படிக்கவில்லை. ஆனாலும் இவ் அறிக்கை தொடர்பில் மாறுபட்ட கருத்துக்களை கூறி வருகின்றனர்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையானது இலங்கையில் இனங்களுக்கிடையிலான முரண்பாடுகளின் தோற்றத்தையும் அது தூண்டிவிடப்பட்ட காரணிகளையும் ஆராய்கின்றது.

இன முரண்பாட்டை தீர்த்துக் கொள்ள என்னென்ன விடயங்களை சரிசெய்து கொள்ள வேண்டும், எதை தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்பதையிட்டு பல பரிந்துரைகளைச் செய்துள்ளது.

நல்லிணக்க ஆணைக்குழு சுயாதீனமாக செயற்பட்டதா என்பதும், இன முரண்பாட்டின் வேர்களையும் அதன் கருத்தாக்கலையும், இன்னும் ஆழமாகவும், தெளிவாகவும் ஆராயவில்லை என்ற விமர்சனங்களும் இருக்கவே செய்கின்றது.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் ஏற்கக் கூடிய நல்ல அம்சங்கள் உள்ளன.

அவற்றை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக இனமுரண்பாட்டை தீர்த்துக் கொள்ளலாம், நியாயமான தீர்வு நோக்கிச் செல்லவும், முடியுமென்று நம்பலாம். ஆகவே முதலில் அறிக்கையை முழுமையாகத் தெரிந்து கொள்வது அவசியமாகும்.

முரசு வாசகர்களுக்காக அறிக்கையின் சுருக்கப் பகுதி தரப்படுகிறது.

**9.262** அரசாங்கம் தன்னுடைய அபிவிருத்திப் பங்காளிகளுடன் செய்முறைகளை இலங்கையிலும் வெளிநாட்டிலும் கட்டியெழுப்புவது அவசியமாகும். மேலும், சுயமாகச் செயற்படக்கூடிய - வன்னியில் வாழும் எதிர்காலத்தைக் குறிக்கோளாகக்கொண்ட சமூகத்திற்கு திறந்தமனதுடனான நடவடிக்கைகளின்மூலம் உதவிசெய்து நிலையான நல்லிணக்கப்பாட்டை சமூக உறவில் ஏற்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இது விடயத்தில் இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்தவர்கள் இலங்கை அரசாங்கத்திற்கு தங்கள் ஆதரவை நல்கி, எமது நாட்டின் அபிவிருத்திப் பங்காளிகளுடன் இணைந்து வீடமைத்தல், பாடசாலைகளை அமைத்தல், சுகாதார வசதிகளைச் செய்துகொடுத்தல், வாழ்வாதார வசதிகளை செய்துகொடுத்தல்மூலம் ஒத்துழைப்பை வழங்க முடியும்.

**9.263** அரசாங்கம் பலவித செயற்பாடுகளைக்கொண்ட செயலணியொன்றை ஏற்படுத்த வேண்டும். இதில் ஜனாதிபதி செயலகம், வெளிவிவகார அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு, தனியார் துறை, கல்விமான்கள் ஆகியோரை உள்ளடக்கக்கூடிய வகையில் பிரதிநிதிகளை இணைத்துக் கொண்டு, வெளிநாட்டிலுள்ள இலங்கைச் சமூகத்திடமிருந்து இதுவரையில் பெற்றுக் கொள்ளாத நன்மைகளைப் பெறுவதுடன் இலங்கைக்கு எதிரான, இங்கிருந்து புலம்பெயர்ந்த குழுக்களின் சந்தேகங்களையும் நிவ‌ர்த்திசெய்து, அரசாங்கத்துடனும் அதன் ஏனைய பங்களிப்பு அமைப்புகளுடனும் நல்லிணக்கப்பாட்டு நடைமுறையில் இணைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று ஆணைக்குழு சிபார்சு செய்கின்றது. இத்தகைய முழுமையான அணுகுமுறையொன்றை அவசரமாக மேற்கொள்ளாவிட்டால், தற்போது வெளிநாட்டில் இலங்கைக்கு எதிரான சூழ்நிலையை வளர்த்துக்கொண்டிருக்கும் சில குழுக்களினால் உண்மையான முயற்சிகளுக்கு பாதகம் ஏற்படுவதற்கான வாய்ப்புண்டு. இது இலங்கையில் நல்லெண்ணத்துடன் நல்லிணக்கப்பாட்டை ஏற்படுத்த முயற்சி செய்வோருக்கும் சாதகமாக அமையாது.

### மதங்களுக்கிடையிலான நடவடிக்கைகள் - நல்லிணக்கப்பாட்டுக்கு மதங்களின் பங்களிப்பு

**9.264** ஆணைக்குழுவின்முன் கருத்துக்களைத் தெரிவித்த பல மதங்களைச் சார்ந்த பிரதிநிதிகள் இலங்கை பௌத்தமதம், இந்துமதம், இஸ்லாம், கிறிஸ்தவம் ஆகிய உலகத்தின் நான்கு மதங்களையும்கொண்ட ஒரு வலுவான சம்பிரதாயத்தைக் கொண்டிருக்கிறது என்ற கருத்தை வலியுறுத்தினார்கள்.

**9.265** நீண்டகால யுத்தத்தின் பின்னர் குறுகிய காலத்தில் இந்த நல்லிணக்கப்பாட்டை அடைவது இலகுவான செயல் அல்ல என்றும் அவர்கள் தெரிவித்தனர். எனவே, நல்லிணக்கப்பாடு நீண்டகாலம் கட்டியெழுப்பவேண்டிய ஒரு நடைமுறைச் செயற்பாடாக அமையவேண்டும். அமைப்புகள் ரீதியிலான அணுகுமுறையின்மூலம் நல்லிணக்கப்பாட்டை, சமூகத்தில் ஏற்படுத்துவதற்காக, பிரச்சினைகளைச் சமநிலைப்படுத்தி அவை விஸ்வரூபம் எடுப்பதற்கு முன்னர் சாதிக்க வேண்டிய நிலைப்பாடு இன்று எழுந்துள்ளது.

**9.266** இனம்தெரியாத கும்பல்களினால் மதவழிபாட்டுத் தலங்கள் சேதப்படுத்தப்பட்டன என்ற சமீபத்திய தகவல்கள் குறித்து ஆணைக்குழு கவலை கொண்டது.

**9.267** இத்தகைய வன்முறைகள் தொடர்ந்தால் அது நல்லிணக்கப்பாட்டு நடைமுறைக்கு எதிராகப் போய்விடும். இத்தகைய வன்முறைகளைத் தடுப்பதற்கு கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். இத்தகைய சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபட்ட சம்பவங்கள் குறித்து விசாரணை செய்யவோ, சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக வழக்கு தொடரவோ சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அமைப்புகள் தவறியிருப்பது குறித்து ஆணைக்குழு கவலை கொண்டுள்ளது. எனவே, அரசாங்கம் இத்தகைய வன்முறைகளை முழுமையாகக் கட்டுப்படுத்துவதற்கு தன்னாலான சகல நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும். இவ்வாறு நடவடிக்கை எடுத்தால் பாதிக்கப்பட்ட குழுக்கள் மத்தியில் தங்களுக்கும் பாதுகாப்பு இருக்கிறது என்ற நம்பிக்கை உணர்வு வலுப்பெறும்.

**9.268** எனவே, சகல மதத் தலைவர்களும் ஐக்கியமாக தலைமைத்துவத்தை வழங்கி சகல மாவட்டங்களிலும் நம்பிக்கைக் கொண்டுள்ள மக்களுக்கு நல்லறிவையும் மற்றும் புரிந்துணர்வையும் ஏற்படுத்தி, இந்த யுத்தம் முடிவடைந்துள்ள காலகட்டத்தில் சகிப்புத்தன்மையுடன் பரஸ்பரம் மற்றவர்களையும் உங்களுடன் இணைத்துக்கொண்டு செயற்படுவதற்கு வழியமைத்துக் கொடுக்கவேண்டும். மதங்களுக்கிடையில் இருந்துவரும் ஒற்றுமையைச் சுட்டிக்காட்டி இந்தக் கண்ணோக்குடன் ஐக்கியமாகச் செயற்படுவதற்கு அவர்களின் பங்களிப்புகளைப் பெற வேண்டும்.

**9.269** இது விடயத்தில் பலவித மத நம்பிக்கைகளைக் கொண்டுள்ள அனைத்துக் குழுக்களும், இனங்களுக்கிடையே நல்லிணக்கப்பாட்டை மதங்களுக்கிடையேயும் ஏற்படுத்துவதற்கு வழியமைக்கக் கூடிய வகையில் திட்டமிட்டு இவ்விதம் ஐக்கியத்தையும் ஒருமைப்பாட்டுடன் செயற்படும் நடவடிக்கைகளையும் நிறைவேற்றுவது அவசியமாகுமென ஆணைக்குழு வலியுறுத்த விரும்புகின்றது.

**9.270** ஆணைக்குழுவின்முன் சாட்சியமளித்த பலதரப்பட்ட மத நம்பிக்கை மற்றும் நம்பிக்கையைக் கொண்டவர்கள் மற்றும் மதங்களின் பிரதிநிதிகள் அளித்த சாட்சியத்தில் அனைவருமே ஒரேவிதமான கருத்தை வலியுறுத்தியமை குறிப்பிடத்தக்கது. இனங்கள் அல்லது மதங்களுக்கிடையில் பதற்றநிலை அல்லது பகைமை உணர்வு முரண்பாட்டு நிலையை ஏற்படுத்தாத வகையில் இத்தகைய பிரச்சினைகளைப் பயன்தரக்கூடிய வகையில் தடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதன் அவசியம் இந்தப் பிரதிநிதிகளால் வலியுறுத்தப்பட்டது. சிலர் சட்டத்தையும், ஒழுங்கையும் அவமதித்து உதாசீனம்செய்து நல்லிணக்கப்பாட்டுக்கும் சமாதானத்தை கட்டியெழுப்பும் முயற்சிகளுக்கும் தீங்கிழைக்கும் வகையில் செயற்படலாகாது என்றும் தெரிவித்துள்ளது. பல்வேறு மதங்களின் மீதும் நம்பிக்கையுடைய குழுக்களை ஒரு அமைப்பாக உருவாக்கி, அதன்மூலம் பிரச்சினைகள் ஏற்படுவது குறித்து முன்கூட்டியே எச்சரிக்கை செய்யும் ஒரு அமைப்பாக அதனைச் செயற்படுத்தி, பிரச்சினைகளை ஆரம்ப கட்டத்திலேயே தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் ஆணைக்குழு சிபார்சு செய்கின்றது.

### கலை மற்றும் கலாசாரம்

மொழியியல் மற்றும் கலாசார ஈர்ப்புக்களை நல்லிணக்கப்பாட்டை ஊக்குவிக்கும் கருவிகளாகப் பயன்படுத்தல்

**9.271** ஆணைக்குழுவின்முன் சாட்சியமளித்தவர்கள் மொழியியல் மற்றும் கலாசார பொதுத் தன்மைகள் மற்றும் ஈர்ப்புக்கள் இலங்கையை அடையாளம் காட்டும்போது ஏற்படுத்த வேண்டிய சாதனங்கள் என்று வலியுறுத்தினார்கள். அரசாங்கம் மற்றும் பொதுமக்களும் உருவாக்கக் கலைகளை ஊக்குவித்து அதன்மூலம் சமூகத்திற்கு நன்மை ஏற்படுத்தத் தவறிவிட்ட விடயத்தை இவர்கள் உதாரணமாக எடுத்துக் காட்டினார்கள். சமூகங்களிடையே புரிந்துணர்வை ஏற்படுத்துவதற்கு கலைத்துறை பெருமளவு பங்களிப்பை அளிக்குமென்ற உண்மையையும் உணர்ந்து கொள்ளத் தவறிவிட்டதாக அங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

**9.272** ஆணைக்குழுவின்முன் சாட்சியமளித்த இன்னுமொருசாரார் தேசிய நல்லிணக்கப்பாட்டில் கலாசார ஒற்றுமைகளையும் இணைத்துக்கொள்ள வேண்டியதன் அவசியத்தையும் உணர்த்தினார்கள். சிங்கள, தமிழ் கலாசாரங் கள் வலுவான அடித்தளத்தை கொண்டிருப்பதாகவும், எனவே, கலை, நாடகம், இசைத்துறையின்மூலம் "1956இல் ஏற்பட்டது போன்ற" கலாசார மறுமலர்ச்சியை ஏற்படுத்த வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்கள்.

**9.273** அதி வணக்கத்துக்குரிய மதத்தலைவர்கள், கலைஞர்கள் மற்றும் சரியாக சிந்தித்துச் செயலாற்றக்கூடிய நாட்டின் பிரஜைகள் ஆகியோர் ஒன்றிணைந்து செயற்படுவது நல்லிணக்கப்பாடு மற்றும் சமாதானத்தை கட்டியெழுப்பும் நடைமுறைக்கு ஒரு நல்ல சகுனமாக அமைந்திருப்பது குறித்து ஆணைக்குழு மகிழ்ச்சி தெரிவிக்கின்றது. சகல தரப்பையும் சார்ந்த அரசியல்வாதிகளும், இவ்விதம் ஒரு நோக்கத்தின்கீழ் ஓர் அமைப்பாக ஒன்றிணைந்து செயற்பட்டு புரிந்துணர்வின்மூலமான தலைமைத்துவத்தை வழங்கினால் இந்த நடைமுறை வெற்றியடைவது திண்ணம்.

**9.274** மொழியியல் மற்றும் கலாசார ஈர்ப்புக்களைக் கூடுதலாக சகல சமூகங்களும் கடைப்பிடித்தலான சிறந்தமுறையில் நல்லிணக்கப்பாட்டை நடைமுறைப்படுத்துவதற்கான வலுவான ஆயுதமாக அமையுமென்று ஆணைக்குழு கருதுகின்றது. இதற்கு அரசாங்கம் அதன் அரசகொள்கை மற்றும் நிகழ்ச்சித்திட்டத்தில் ஆகக்கூடிய முன்னுரிமை அளிப்பது அவசியமாகும்.

**9.275** பிரதான இலக்கியப் படைப்புகளை மொழிபெயர்த்து வெளியிடுவதற்கு விசேட கவனம் செலுத்துவது அவசியமாகும். தமிழ் படைப்புக்களை சிங்களத்திலும் அதுபோன்று சிங்கள படைப்புக்களை தமிழிலும் மொழிபெயர்ப்பது அவசியமாகும். இத்தகைய படைப்புகளை பாடசாலை பிள்ளைகள் மற்றும் இளைஞர்கள் மத்தியில் பகிர்ந்தளிப்பதன்மூலம் ஒருவர் மற்றவரின் கலாசாரங்களை உணர்வுபூர்வமாக புரிந்து கொள்வதற்கு ஒரு சிறந்த வாய்ப்பை அளிப்பதற்கும் அதன்மூலம் நல்லுறவை பேணிப்பாதுகாக்கவும் வழிவகுக்கும்.

**9.276** பொதுவான மற்றும் பரஸ்பர புரிந்துணர்வை இரு சமூகங்களிடையே ஏற்படுத்துகின்ற திரைப்படம், தொலைக்காட்சி மற்றும் மேடை நாடக தயாரிப்புகளை ஊக்குவிப்பதற்கும் குறிப்பாக இளம் சந்ததியினருக்கு நன்மையடையக் கூடிய வகையில் பயன்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

**9.277** தேசிய கீதத்தை ஒரேமெட்டுடன் இரு மொழிகளில் இசைக்கும் நடைமுறையை தொடர்ந்தும் நிலைத்திருக்கச் செய்வதற்கு ஆதரவளித்தல் அவசியமாகும். இந்த நடைமுறையில் ஏதாவது மாற்றங்கள் செய்யப்பட்டால் சிலர் மத்தியில் எரிச்சலை உண்டாக்கி அது யுத்தத்திற்குப் பின்னர் நல்லிணக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்கு பாதகமாகவும் அமையலாம்.

### மக்களுக்கும் மக்களுக்கும் இடையிலான தொடர்புகள்

**9.278** ஆணைக்குழுவின் அமர்வுகளின் போதும் அதன் வெளியக விஜயங்களின்போதும் சகல இனமக்களினாலும் மக்களுக்கும் மக்களுக்கும் இடையிலான தொடர்புகளை ஊக்குவிப்பதன்மூலம் புரிந்துணர்வு, இணக்கப்பாடு, நல்லிணக்கப்பாட்டை மேம்படுத்த முடியுமென்ற கருத்து வலியுறுத்தப்பட்டது. இந்தக் கருத்தை ஆணைக்குழு வலுவாக அங்கீகரிக்கிறது. நேருக்குநேர் சந்தித்துப் பேசுவதன்மூலம் இணக்கப்பாட்டை கட்டியெழுப்புவதுடன் நல்லுறவுக்கும் ஊக்கமளிக்கலாம்.

**9.279** குறிப்பாக இந்த யுத்தத்தினால் இளைஞர்கள் அதிகம் பாதிக்கபட்டிருப்பதனால் இது விடயத்தில் இளைஞர்கள் விசேட பங்களிப்பை, அதிகம் அளிக்கக் கூடியதாக இருக்கும். சகல சமூகங்களைச் சேர்ந்த இளைஞர்கள் இந்த யுத்தத்தினாலும் அதன் பக்கவிளைவுகளினாலும் பெரிதும் பாதிப்பிற்குள்ளாகியிருக்கிறார்கள். இந்த யுத்தம் நடந்து கொண்டிருந்தபோது இளைஞர்களைச் சந்தித்து மற்றவர்களின் உணர்வுகளைப் புரிந்துகொள்வதற்கான வாய்ப்புகள் கிடைக்கவில்லை. அவர்கள் இரத்தக்களரியை மாத்திரமே பார்த்திருக்கிறார்கள்.

**9.280** இது விடயமாக அரசாங்கமும் சிவில் சமூகக் குழுக்களும் மேற்கொண்ட நடவடிக்கைகள், குறிப்பாக இளைஞர் விவகார அமைச்சு மேற்கொண்டுள்ள "இளைஞர் பாராளுமன்ற" செயற்திட்டங்களும் மற்றும் "பனந்தோப்பிலிருந்து தென்னந்தோப்புவரை" என்ற இளைஞர் பரிமாற்றத் திட்டமும் நல்ல வெற்றியடைந்திருப்பது குறித்து ஆணைக்குழு மகிழ்ச்சி அடைகிறது.

**9.281** இத்தகைய முயற்சிகளுக்கு ஊக்கமளித்து சகல அரசாங்க அமைச்சுக்களும் அவர்களின்கீழ் செயற்படும் அமைப்புக்களும் தத்தமது அமைச்சுக்களின் கீழ் இதுபோன்ற புத்தாக்க நிகழ்ச்சிகளை மேற்கொள்வதை தங்கள் கடமையாக ஏற்றுச் செயற்பட வேண்டுமென்று ஆணைக்குழு சிபார்சு செய்கிறது. இத்தகைய முயற்சிகளை சிவில், சமூக குழுக்களின் ஒத்துழைப்புடன் மேற்கொண்டு இவ்விதம் மாணவர், இளைஞர் பறிமாற்ற நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ஆதரவளித்து அதனை மேலும் விரிவடையச் செய்யவேண்டும். ஆயினும், இதுகுறித்து மிகவும் அவதானத்தையும் மேற்கொள்ள வேண்டும் இவை கலாசார மற்றும் மொழி உணர்வுகளைத் தூண்டக்கூடியது என்பதனால், ஓரிடத்திற்கு வரும் சமூகமும் அவர்களை வரவேற்கும் சமூகமும் இதனைக் கவனமாகக் கையாள வேண்டுமென்று ஆணைக்குழு கருதுகின்றது.

### அரசியல் கருத்தொருமைப் பாட்டுக்கான தேவை

**9.282** அரசியல் கருத்தொருமைப்பாடு இல்லாமையே இலங்கையில் நல்லிணக்கப்பாட்டுக்கு பிரதான முட்டுக்கட்டையாக இருந்து வருகின்றது. பல தரப்பட்ட கட்சிகளின் அணுகுமுறை தேசிய பிரச்சினைகளில் மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றன. இதில் அதிகாரப் பரவலாக்கல் போன்றவை இருக்கின்றன.

**9.283** கடந்த நான்கு அல்லது ஐந்து தசாப்தங்களாக ஒரு சமூகத்தின் மீது இன்னொரு சமூகம் "வெறுப் படையக் கூடிய உரைகள்" ஆற்றப்பட்டிருப்பதை அவதானிக்கும் ஆணைக்குழு, இது இனங்களுக்கிடையே இணக்கப் பாடின்மையை ஏற்படுத்துவதற்கு பிரதான காரணியாக அமைந்திருக்கிறதென்று சுட்டிக்காட்டுகிறது. ஒருவருடைய இனம், மதம், கலாசாரம் தொடர்பாக வெறுப்படையக்கூடிய உரைகளை நிகழ்த்தும்போது நாட்டில் இனங்கள், மற்றும் மதங்களுக்கிடையிலான பதற்றநிலை தோன்றி ஒற்றுமையின்மை ஏற்படுகின்றது. இத்தகைய செயற்பாடுகளை மேற்கொள்பவர்களுக்கு எதிராக கடுமையான தண்டனையைப் பெற்றுக்கொடுப்பதற்கான சட்டங்களை அரசாங்கம் இயற்ற வேண்டும். அத்துடன் சட்டம் இது விடயத்தில் கடுமையாக அமுலாக்கப்படவும் வேண்டும்.

**9.284** நல்லிணக்கப்பாட்டை நடைமுறைப்படுத்தும்போது நாட்டில் யுத்தத்தினால் ஏற்பட்ட பாதிப்புப்பற்றிய முழு விபரங்களும் அனைவருக்கும் தெரிந்திருக்க வேண்டும். அரசியல் தலைவர்கள், சிவில் சமூகம், சிங்கள மற்றும் தமிழ்ச் சமூகங்கள் தவறு செய்தமைக்கு வருந்துவது அவசியமாகும். தெற்கிலுள்ள இரண்டு பிரதான கட்சிகளைச் சேர்ந்த அரசியல் தலைவர்கள் தேசிய நன்மைக்காக தங்களுக்கிடையில் பொதுவான கருத்தொருமைப்பாட்டினை ஏற்படுத்திக்கொண்டு தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு தீர்வைப் பெற்றுக்கொடுத்திருந்தால் இந்த யுத்தத்தைத் தவிர்த்துக் கொண்டிருக்கலாம். இதுபோன்று தமிழ் அரசியல் தலைவர்களும் இந்த யுத்தம் ஏற்பட்டமைக்கு சரிசமமான பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும். தமிழ்த் தலைவர்கள் ஆயுதரீதியிலான இயக்கத்திற்கு, பிரிவினைவாதத்திற்குத் துணைபோகாமல் இருந்திருந்தால் எல்.ரி.ரி.ஈ. பயன்படுத்திய வன்முறைகள், பயங்கரவாத செயற்பாடுகள் சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் ஏற்பட்டதை தவிர்த்திருக்கலாம். அத்துடன், தமிழ்த் தலைவர்கள் எல்.ரி.ரி.ஈ.யின் கொடுமைகளை பயமின்றி எதிர்ப்பதற்கும் தவறிவிட்டார்கள். நடந்த இந்த நிகழ்வுகள்பற்றி ஒவ்வொரு தரப்பினரும் வருந்துதல் எந்தவொரு தரப்பிற்கும் இலகுவான செயலல்ல. இந்த சகல தரப்பினரும் நன்னெறியுடன் தங்கள் செயற்பாடுகளை தாங்களே மதிப்பீடுசெய்து பார்த்து மனித பேரழிவுபற்றி சிந்திக்கும்போது, இந்த வேதனை உணர்வு அவர்கள் மனதில் தோன்ற இடமுண்டு. மன்னிப்பளிக்கும் குணம், அன்பு, கருணை ஆகிய நற்பண்புகள் இருந்தால் மாத்திரமே நல்லிணக்கப்பாட்டு விதைகள் துளிர்விட முடியும். சகல தலைவர்களும் மற்ற தரப்பினருக்கு பணிவுடன் கரங்களைநீட்டி கூட்டாக இந்த யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட அப்பாவி பிரஜைகளுக்கு தங்கள் மன்னிப்பைத் தெரிவிக்க வேண்டும். இரு தரப்பிலுமுள்ள அரசியல் தல்லவர்கள் கூட்டாகத் தவறிழைத்த காரணத்தினால் தான் இந்த யுத்தம் ஏற்படுவதை அவர்களால் தவிர்க்க முடியாமல் போய் விட்டது. மதத் தலைவர்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புகள் இந்த மக்களின் வேதனை வடுக்களை குணப்படுத்தக்கூடிய வகையில் பெரும்தாக்கத்தை ஏற்படுத்தி நல்லிணக்கப்பாட்டு செயற்பாட்டை முழுமையாக நடைமுறைப்படுத்த முன்வர வேண்டும்.

**9.285** தேசியத்தினத்தன்று புறம்பான நிகழ்வொன்றை ஒழுங்கு செய்து, ஒருமைப்பாட்டையும் மற்றவர்களின் உள்ளங்களையும் உணர்வுபூர்வமாகப் புரிந்து கொள்வதன்மூலமும் இந்த வேதனைக்குரிய யுத்த வடுக்களை நீக்கவும் தங்களின் கூட்டுப்பொறுப்பின் மூலம் இன்னுமொரு தடவை இத்தகைய இரத்தக்களரி நாட்டில் ஏற்படாதவாறு உத்தரவாதம் அளிக்கக்கூடிய வகையிலும் முன்மாதிரியாக செயற்பட வேண்டுமென்று ஆணைக்குழு சிபார்சு செய்கிறது. ஆணைக்குழுவின்முன் பலரும் தெரிவித்த கருத்துக்களை அடிப்படையாகக்கொண்டு தேசிய தினமான ஒரு முக்கியத்துவம் வாய்ந்த நினைவுத்தினத்தில் அதிஉயர் அரசியல் மட்டத்தில் நாடு முழுவதற்கும் தேசிய ரீதியில் நல்லிணக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்குத் தேவையான உந்து சக்தியை அது வலுப்படுத்தும்.

*[முற்றும்]*

## அத்தியாயம் 09

பிரதான அவதானிப்புகள் மற்றும் சிபாரிசுகள்

| பிரிவு | | பந்தி இலக்கங்கள் |
|---|---|---|
| அத்தியாயம் 2 | யுத்த நிறுத்த உடன்படிக்கை | 9.1 - 9.3 |
| அத்தியாயம் 4 | சர்வதேச மனிதாபிமான சட்ட விவகாரங்கள் | 9.4 - 9.41 |
| அத்தியாயம் 5 | மனித உரிமைகள் | 9.42 - 9.120 |
| அத்தியாயம் 6 | காணி: திரும்பிச் செல்லுதல் மற்றும் மீள் குடியேற்றம் | 9.121 - 9.152 |
| அத்தியாயம் 7 | உரிமையாளரிடம் திருப்பிக் கொடுத்தல் - நஷ்டஈட்டு நிவாரணம் | 9.153 - 9.166 |
| அத்தியாயம் 8 | நல்லிணக்கப்பாடு | |
| | யுத்தம் முடிவடைந்த பின்னர் ஏற்படும் நல்லிணக்கப்பாடு தொடர்பான விடயங்களினால் ஏற்படும் தாக்கம் | 9.167 - 9.172 |
| | நல்லிணக்கப்பாடு | 9.173 - 9.285 |



# பாப்பா முரசு

இப்பகுதிக்கு சிறுவர்கள், மாணவர்களிடம் இருந்து தரமான ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது.

## வாரம் ஒரு திருக்குறள்



### ஈகை

ஆற்றுவார் ஆற்றல் பசி ஆற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின்.

தவ வலிமை உடையவரின் வலிமை பசியைப் பொறுத்துக் கொள்ளலாகும்: அதுவும் அப்பசியை உணவு கொடுத்து மாற்றுகின்றவரின் ஆற்றலுக்குப் பிறப்பட்டதாகும். குறள்:225

## விடுகதைகள்

1. அனைவருக்கும் அடங்காதவன், ஆதவனுக்கு அடங்கினான் - அவன் யார்?
2. அன்றாடம் மலரும், அனைவரையும் கவரும் - அது என்ன?
3. ஆளேறும் குதிரைக்கு அங்கமெல்லாம் கண்ணு - அது என்ன?
4. ஓடையிலே ஓடாத நீர், ஒருவரும் குடிக்காத நீர் - அது என்ன?
5. தொட்டால் மணக்கும், குடித்தால் புளிக்கும் - அது என்ன?
6. அடுப்பில் காய்க்கும் பூ, வெடித்து குதிக்கும் பூ - அது என்ன?
7. காய்க்காத காய், பழுக்காத காய் - அது என்ன?

## விடைகள் :

1. குளிர்.
2. கோலம்.
3. நாடாக் கட்டில.
4. கண்ணீர்.
5. எலுமிச்சம் பழம்.
6. பாப்கார்ன்.
7. பொரிவிளங்காய்.

# பிடிவாதம்



ஆர்.கார்த்திக்

ரேவதி நன்றாகப் படிக்கும் மாணவி. பிறர் தன்னிடம் ஒப்படைக்கும் வேலைகளை கச்சிதமாக செய்து முடிக்கும் திறமையான சிறுமி. பெரியவர்கள் முதல் சிறியவர்கள் வரை அனைவரிடமும் அன்பாகவும், பணிவாகவும் நடந்து கொள்வாள்.

ஆனால் ரேவதியின் பிடிவாத குணம் மட்டும் யாருக்கும் பிடிக்கவில்லை. ரேவதியின் அம்மா, அப்பாவிற்கு அவளது பிடிவாதம் பெரிய தலைவலியாக இருந்தது. உடை, பொம்மை, பரிசுப் பொருள் எது கேட்டாலும் உடனே வாங்கித் தர வேண்டும். இல்லாவிட்டால் வீட்டையே போர்க்களம் போல ஆக்கிவிடுவாள்.

நாளைய தினம் ரேவதியின் பிறந்தநாள். வெகு நாட்களாகக் கேட்டுக் கொண்டிருந்த விலை உயர்ந்த கைக்கடிகாரத்தை அன்றே வாங்கித் தர வேண்டும் என்று அடம் பிடித்தாள்.

ரேவதியின் அம்மாவும், அப்பாவும் தங்கள் சூழ்நிலையைக் கூறி, அடுத்த மாதம் வாங்கித் தருகிறேன் என்றனர். அதெல்லாம் எனக்குத் தெரியாது. நான் பள்ளிக்கூடத்திற்கு சென்றுவிட்டு வீட்டிற்கு வரும்போது நான் கேட்ட கைக்கடிகாரம் இங்கே இருக்கனும். இல்லாவிட்டால் நடப்பதே வேறு' என்று கட்டளையிடுவதுபோல் கூறிவிட்டுச் சென்றாள். ரேவதியின் பெற்றோர் என்ன செய்வதென்று தெரியாமல் விழித்தனர்.

மாலையில் பள்ளி முடிந்ததும் ரேவதி வீட்டிற்கு வந்து கொண்டிருந்தாள். அப்போது மழை பெய்ய ஆரம்பித்தது. உடனே அருகில் இருந்த ஒரு குடிசை ஓரத்தில் ஒதுங்கி நின்றாள். அப்பொழுது அந்த வீட்டிற்குள் இருந்து வந்த சத்தத்தைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள்.

"அப்பா உங்க கால் ரொம்ப அடிபட்டிருக்கு. இருந்தும் ஏன் லீவு எடுக்காம வேலைக்குப் போறீங்க?" என்றாள்.

"நீதான், எல்லாரும் டூர் போறாங்க... என்னை அனுப்ப மாட்டீங்களான்னு கேட்டே இல்ல. நான் லீவு போடாம வேலைக்குப் போனாத்தான் உனக்கு டூர் போக பணம் தர முடியும்" என்றார்.

"இல்லேப்பா நான் டூர் போகலை. அடுத்தவாட்டி போய்க்கிறேன். நீங்க உங்க காலைப் பார்த்துக்கோங்கப்பா" என்றாள் அந்த வீட்டுச் சிறுமி.

'இல்லைங்க, நீங்க ரெஸ்ட் எடுங்க, அவள் டூர் போகட்டும். பண்ணைக்காரர் தோட்டத்திலே வேலைக்கு ஆள் கூப்பிட்டிருக்காங்க. நான் ஒரு வாரம் வேலைக்குப்போறேன். கிடைக்கிற பணத்துல அவளுக்கு டூர் போகவும், உங்க காலுக்கு வைத்தியம் பார்க்கவும் சரியாக இருக்கும்" என்றாள் அந்த சிறுமியின் அம்மா.

இதை பார்த்துக் கொண்டிருந்த ரேவதி ஆச்சரியப்பட்டாள். ஒரு சிறுமி தன் அப்பாவின் கஷ்டத்தைப் புரிந்து கொண்டு விட்டுக் கொடுக்கிறாள். ஒரு அம்மா, தன் குழந்தைக்காகவும், கணவருக்காகவும் வேலைக்குப் போகிறேன் என்கிறார். ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுப்பதால் அவர்கள் குடிசையில் வாழ்ந்தாலும் சந்தோஷமாக வாழ்கிறார்கள். இனி நாமும் அம்மா, அப்பாவுக்கு தொந்தரவு கொடுக்கக்கூடாது' என்று எண்ணினாள்.

ரேவதி வீட்டிற்குச் சென்றதும் அவளது பெற்றோர் என்ன சொல்லப்போகிறாளோ என்று தயங்கிக் கொண்டிருந்தனர். "ரேவதி..." என்று அவர்கள் வாயெடுக்க, "அப்பா கைக்கடிகாரம் இப்போ இல்லைன்னா அடுத்த பொறந்த நாளைக்கு வாங்கிக்கலாம்" என்று கூறியவளைப் பார்த்து வியப்படைந்தனர் அவளது பெற்றோர்.

தனது பிடிவாத குணத்தை அழித்த மகிழ்ச்சியோடு பிறந்த நாளைக் கொண்டாடினாள் ரேவதி.

## விநோத உலகம்



### சிங்கக்குட்டிகளை வளர்க்கும் நாய்!



அமெரிக்காவில் உள்ள கன்சாஸ் நகரில் சபாரி விலங்கியல் பூங்கா உள்ளது. இங்குள்ள சிங்கம் பிரசவத்திற்கு பிறகு தனது 3 குட்டிகளை புறக்கணித்து விட்டது. இந்த குட்டிகளை அங்குள்ள பெண் வேட்டை நாய் ஒன்று தத்து எடுத்து பராமரிக்கிறது. இதை அங்குள்ள மக்கள் ஆச்சரியமாக பார்த்துச்செல்கிறார்கள்.

### பாரில் திருடிய நரி!



இத்தாலியில் அப்ருஸ்சோ தேசிய விலங்கியல் பூங்கா உள்ளது. இதன்அருகே ஒரு மதுபான விடுதி இருக்கிறது. ஒரு நாள் இரவில் அதிக கூட்டமாக இருந்த நேரத்தில் ஒரு காட்டு நரி அங்கு புகுந்தது. அங்கிருந்தவர்கள் இதைப்பார்த்து அதிர்ச்சியில் உறைந்து போய் இருக்கும் போது, அந்த நரி யாரையும் சட்டை செய்யாமல் நேரடியாக அங்கிருந்த உணவு மேசைக்கு சென்று ரொட்டித்துண்டுகளை கவ்வியபடி வெளியேறியது.


## தகவல் களஞ்சியம்

- இரும்பு, நிக்கல், கோபால்ட், தாமிரம் மற்றும் பிளாட்டினம் கலந்த கலவை எமக்கு எனப்படும்.
- ஈயம், செம்பு, வெள்ளி, தங்கம், பித்தளை சேர்ந்த கலவை பஞ்சலோகம் எனப்படும்.
- பித்தளை, வெண்கலம், மணிவெண்கலம், ஜெர்மன் வெள்ளி கலந்தது தான் தாமிரம்.
- ஈபில் கோபுரத்தைக் கட்டிமுடிக்க 7 ஆயிரத்து 500 டன் இரும்பும், எக்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது.
- உலகிலேயே மிகப்பெரிய பூங்காவான எல்லோஸ்டோன் நேஷனல் பூங்கா (அமெரிக்கா) 1872ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது.
- மலேசியாவின் தலைநகரம் கோலாலம்பூர்.
- அனகொண்டா பாம்பு பிரேசில் பகுதியில் அதிகமாக காணப்படுகிறது.





## வெட்டி ஒட்டுங்கள்



## அறிந்துகொள்ளுங்கள்

- டேபர்மேன், ஜெர்மன் செப்பர்டு, அல்சேசியன் என ஒரு சில நாய்களைத் தான் உங்களுக்குத் தெரிந்திருக்கும். ஆனால் உலகில் சுமார் 200 வகை நாய்கள் உள்ளன என்பதை நீங்கள் அறிவீர்களா?



- இந்தியாவில் முதல் மகளிர் காவல் நிலையம் கேரள மாநிலம் கோழிக்கோடு நகரில் உருவாக்கப்பட்டது.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசு தரும் எண்ணம்



போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.

மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு புத்தகமொன்று பரிசாகக் காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 09.10.2012

வர்ணம் தீட்டும் போட்டி இல.960
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:167,
யாழ்ப்பாணம்.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 958

பரிசுக்குரியவர்:
M/F.சன்ஹா, யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரி,
477, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்

பாராட்டுக்குரியவர்கள்

01. ரா.உஷாந்தினி, யா/சோமஸ்கந்தக் கல்லூரி, புத்தூர்.
02. க.தீபன், நீர்வேலி வடக்கு, பன்னாலை, யாழ்ப்பாணம்.
03. எம். கஜீபா, தர்ஹாநகர்.
04. ஏ.வினோதினி, பூவரசங்குளம், வவுனியா.
05. எம்.எவ்.பாகிஸா. புத்தளம்.
06. மு. கனோஜன், புலோலி தெற்கு, புலோலி.
07. ஆர். ஜெனீபர், கொழும்பு.
08. ம. மயூரிகா, கடற்கரை வீதி, நீர்கொழும்பு.

# கொள்ளை ராணி பூலான்தேவி

## திருப்பங்கள் நிறைந்த பூலானின் வாழ்க்கை வரலாறு



**எல்லோருக்கும் - அவள் பயங்கரக் கொள்ளைக்காரி, படு பயங்கரக் கொலைகாரி என்றுதான் தெரியும். அவள் அதுவும் ஒரு பெண் - ஏன் அப்படி மாறினாள் என்று எத்தனை பேருக்குத் தெரியும்? பூ ஒன்று புயலான கதை. ஏற்கனவே முரசில் புரட்டப்பட்ட இப்பக்கங் கள், வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் புரட்டப்படுகின்றன.**

**124**

**படகில்** இருந்து கண்களில் திரையிட்ட கண்ணீருடன் பார்த்துக் கொண்டிருந்த பிக்குவுக்கு புயல் ஒன்று அசைந்து போவது போல இருந்தது.

பிக்குவைப் பிரிந்திருந்ததால் கனத்த மனதோடு தன் வாழ்க்கையின் அடுத் த அத்தியாயம் நோக்கி பூலான் நடந்துகொண்டிருந்தாள்.

பூலானின் நெருங்கிய உறவினரான மன்னு குடிசையில் படுத்துக் கிடந்து வானொலி கேட்டுக் கொண்டிருந்தான். அவனது மனைவியும் பிள்ளைகளும் வெளியூர் சென்றிருந்தனர்.

மன்னுவுக்குத் தூக்கம் வரவில்லை. படுக்கையில் புரண்டு கொண்டிருந்தான். குடிசைக்கதவு தட்டுப்படுவது போல இருந்தது.

அவனுக்கு எழுந்துசென்று பார்க்க அலுப்பாக இருந்தது. மரக்குச்சி ஏதாவது கதவில்பட்டு உராய்கிறதாக்கும் என்று நினைத்தான்.

தொடர்ந்தும் மெதுவாகக் கதவில் தட்டப்படும் சத்தம் கேட்டது. போர்வையைச் சுரட்டிப் போட்டுவிட்டு எழுந்து கதவருகே சென்று, "யாரது?"என்றான்.

மறுபக்கத்தில் மெல்லிய குரலில் "நான்தான் மன்னு கதவைத் திற!"என்றது. 'பெண் குரலாக இருக்கிறதே !" ஆச்சரியப்பட்டுக் கொண்டு கதவைத்திறந்தான். உள்ளே வந்தாள் பூலான்.

மன்னுவுக்க உடனே அடையாளம் தெரியவில்லை.விழிகளை அகட்டிக்கொண்டு பூலானை மேலும் கீழும் பார்த்தான்.

அலைச்சலும், தொடர் பட்டினியும் பூலானை அடையாளமே தெரியாதளவுக்கு மாற்றிவிட்டன. அதுமவிர அவன் பூலானை கடைசியாகப் பார்த்தே பல ஆண்டுகள் ஆகிவிட்டன.

மன்னு கடைசியாக அவளைப் பார்த்தபோது பூலான் சிறுமியாக இருந்தாள். மிட்டாய் வாங்கிக் கொடுத்திருக்கிறான்.

கன்னத்தில் கிள்ளியிருக்கிறான். "பெரியவளானதும் என்னைக் கல்யாணம் பண்ணுவியா?"என்று விளையாட்டாகக் கேட்டிருக்கிறான்.

பின்னர் பூலானைப் பற்றிஅவன் அறிந்த செய்திகளால் அவளுக்காக கவலைப்பட்டிருக்கிறான் பூலான் கொள்ளைக் கூட்டத்தில் சேர்ந்த பின்னர் அறிந்த செய்திகளால் ஆச்சரியப்பட்டிருக்கிறான்.

மன்னுவுக்கும் கெள்ளைக் கோஷ்டிகள் சிலவற்றுடன் தொடர்புகள் இருக்கின்றன. ஓரளவோடு மட்டும் தொடர்புகளை நிறுத்திக்கொள்வான்.

"என்னைத் தெரியவில்லையா? நான்தான் பூலான்தேவி." என்றாள் பலவீனமான குரலில்.

மன்னுவின் கண்கள் ஆச்சரியத்தால் மேலும் விரிந்தன. வாஞ்சையோடு பூலானை அணைத்துக்கொண்டான்.ஆதரவாகக் கன்னத்தில் முத்தமிட்டான்.

பூலானால் நிற்கமுடியவில்லை. இதுவரை பல்லைக் கடித்துக் கொண்டு பசியையும், அலைச்சலையும் பொறுத்துக் கொண்டாள்.

இனிமேல் கால்களுக்கு சத்தியில்லை. உடம்பு ஒத்துழையாமை செய்தது. அப்படியே தரையில் அமர்ந்துகொண்டாள்.

> **"கொள்ளைக் கோஷ்டியை விட்டுவிலகி இனிமேல் வேறு வாழ்க்கையை அமைத்துக்கொள்ளும்படி மன்னு யோசனை கூறினான். முடியவே முடியாது என்று விட்டாள். பூலான் வேறு ஒரு வாழ்க்கையை அமைத்துக் கொண்டாலும் பொலிசாரோ, ஸ்ரீராமோ அவளை விட்டுவைக்கப் போவதில்லை என்பதை மன்னுவும் புரிந்துகொண்டதால், பூலானுக்கு உதவ முன்வந்தான். தானும் மல்லாவும் பாபாவுடன் சேரத் திட்டமிட்டிருந்ததை மன்னுவிடம் கூறினாள் பூலான்."**



"குடிக்கத் தண்ணிகொடு மன்னு: சாப்பிட என்ன வைத்திருக்கிறாய்? கொலைப்பட்டினி" என்றாள்.

மன்னு தண்ணீர் கொடுத்தான். மீதியிருந்த சப்பாத்திகளைச் சாப்பிடக் கொடுத்து விட்டு, அவளையே கவலையுடன் பார்த்துக்கொண்டிருந்தான்.

மளமளவென்று சப்பாத்திகளைப் பிய்த்து உள்ளே தள்ளினாள் பூலான். சாப்பிட்ட பின்னர் வயிறுமுட்ட தண்ணீர் குடித்தாள். போன உயிர் திரும்பி வந்தது போல திருப்தியாக. நிறைவாக இருந்தது.

"வீட்டில் யாருமில்லையா? என்றாள் பூலான். "ஊருக்குப் போயிருக்கிறார்கள்; வருவதற்கு ஒரு வாரமாகும்" என்றான்.

இதுவரை அடக்கி வைத்திருந்த சோகம் பீறிட்டுக்கொண்டுவர குலுங்கிக் குலுங்கி அழத் தொடங்கிவிட்டாள் பூலான். "என் தெய்வத்தைக் கொன்றுவிட்டார்கள் மன்னு.கொன்றுவிட்டார்கள்"என்றாள் அழுதுகொண்டே.

மன்னுவும் மல்லா இறந்ததைப் பற்றி அறிந்தே இருந்தான். மல்லாவை பூலான் காதலித்தாள் என்பதைப் பூலான் சொல்லித்தான் தெரிந்துகொண்டான்.

தன் மனதில் இருந்த பாரத்தையெல்லாம் இறக்கிவைக்க ஆள் கிடைத்ததே என்று அவனிடம் கொட்டித் தீர்த்தாள் பூலான்.

கொள்ளைக் கோஷ்டியை விட்டுவிலகி இனிமேல் வேறு வாழ்க்கையை அமைத்துக் கொள்ளும்படி மன்னு யோசனை கூறினான். முடியவே முடியாது என்று விட்டாள்.

பூலான் வேறு ஒரு வாழ்க்கையை அமைத்துக் கொண்டாலும் பொலிசாரோ, ஸ்ரீராமோ அவளை விட்டுவைக்கப் போவதில்லை என்பதை மன்னுவும் புரிந்துகொண்டதால், பூலானுக்கு உதவ முன்வந்தான்.

தானும் மல்லாவும் பாபாவுடன் சேரத் திட்டமிட்டிருந்ததை மன்னுவிடம் கூறினாள் பூலான்.

பாபா என்று அழைக்கப்பட்ட மஸ்தக்கு வீமின் குழுவுடன் மன்னுவுக்குத் தொடர்பு இருந்தது. அதனால் பாபாவைப் பற்றிக் கூறியதும் மன்னுவின் முகம் மலர்ந்தது.

"எனக்கு பாபாவைத் தெரியும். நான் முதலில் சென்று பேசிப் பார்க்கிறேன். உன்னை அவர்கள் சேர்த்தக் கொள்ள சம்மதித்தால், நானே உன்னை அழைத்துச் செல்கிறேன்!" என்றான் மன்னு.

மறுநாள் பூலானுக்குத் தேவையான உணவை ஏற்பாடுசெய்து கொடுத்துவிட்டு, அவளைத் தன் வீட்டுக்குள் வைத்து வெளிப்புறமாகப் பார்த்தால் வீடு பூட்டியிருக்கிறது என்று நினைத்துக் கொள்ளட்டும் என்றே அப்படிச் செய்தான்.

"நான் வந்து குரல் கொடுத்தால் தவிர வேறு யார் வந்து கூப்பிட்டாலும் தலையைக் காட்டாதே!"என்று சொல்லிவிட்டுப் போனான் மன்னு.

கான்பூருக்குச் சென்று பாபாவைச் சந்தித்த மன்னு பூலான் பற்றி கூறினான். பாபா உடனடியாக பதில் எதுவும் கூறவில்லை. "செய்தி அனுப்புகிறேன். இப்போது நீ போகலாம்," என்று கூறிவிட்டார்.

மன்னுவுக்கு ஏமாற்றமாகிவிட்டது. தொங்கிய முகத்துடன் திரும்பிச் சென்றான். அன்றிரவே வீடு திரும்பிய மன்னு பூலானிடம் தன் ஏமாற்றத்தைச் சொல்லவில்லை.

"தகவல் வரும்வரை காத்திருக்கச் சொன்னார் பாபா. நிச்சயம் உன்னை தன் கூட்டத்தில் சேர்த்துக் கொள்வார்."என்று சொல்லிவிட்டான்.

ஐந்து நாட்கள் பூலான் மன்னுவின் குடிசைக்குள்ளேயே அடைந்து கிடந்தாள். வெளியே நடமாடினால் யாராவது கண்டுவிடுவார்கள்.

நாகினா என்ற அந்தக் கிராமத்தின் மீது எப்போதும் ஒரு கண் வைத்திருந்தார்கள் பொலிசார்.திடீர் திடீர் என்று சோதனை நடத்துவார்கள்.

பூலான் அங்கிருக்கும்வரை பொலிசார் வந்துவிடக் கூடாதே என்று உள்ளூரப் பயந்து கொண்டு இருந்தான் மன்னு. ஆனாலும் அதனை வெளிக்காட்டாமல். பூலானை பத்திரமாகக் கவனித்துக் கொண்டான்.

மன்னு அடிக்கடி வெளியேபோய் பாபாவின் ஆட்களுடன் தொடர்பு கொள்ள முயன்று கொண்டிருந்தான்.

பூலானுக்கு முதலில் இருந்த நம்பிக்கை சற்றுக் குறையத் தொடங்கியது. மல்லாவுடன் சென்றுமுதன் முதலாக பாபாவைச் சந்தித்த போது. பெண்களை நம்பி நம்மோடு வைத்திருக்கக் கூடாது!"என்று பாபா கூறியதை நினைத்துப் பார்த்தபோது, நம்பிக்கை மேலும் சரிந்தது.

**திருப்பங்கள் தொடரும்...**

---

## மருத்துவம்

விக்கல் என்ற விசயம் சிலருக்கு அச்சத்தை ஏற்படுத்தும். அதுவும் குழந்தைகளுக்கு விக்கல் எடுத்தால் ஏதாவது தூசியையோ, சிறு நூலினையோ தலையை சுற்றி உச்சந்தலையில் வைப்பார்கள். அதெல்லாம் மூடநம்பிக்கை என்று கூறும் நிபுணர்கள் விக்கல் ஏற்படுவதற்கான காரணத்தையும், அதை நீக்குவதற்கான வழிமுறைகளையும் கூறியுள்ளனர்.

நாம் சுவாசிக்கும் போது மார்புத்தசைகள் விரிகின்றன. மார்புக்கும் வயிற்றுக்கும் இடையில் சுவாசப்பைகளை ஒட்டி உள்ள உதரவிதானமும் விரிகிறது. உடனே, தொண்டையில் உள்ள குரல் நாண்கள் திறக்கின்றன. இப்போது மார்புக்குள் காற்றின் அழுத்தம் குறைகிறது. அதேநேரம் மார்புக்குள் காற்று எளிதில் செல்ல அதிக இடம் கிடைக்கிறது. இதனால், நாம் சுவாசிக்கும் காற்று, திறந்த குரல் நாண்கள் வழியாக தங்கு தடையின்றி சுவாசப்பைகளுக்குள் நுழைந்து விடுகிறது. இது இயல்பாக நிகழும் சுவாச நிகழ்வு. சில நேரங்களில் குரல் நாண்கள் சரியாகத் திறப்பதில்லை. அந்த மாதிரி நேரங்களில் நாம் சுவாசிக்கும் காற்று தொண்டையில் உள்ள குறுகிய இடைவெளி வழியாக சுவாசப்பைகளுக்குள் நுழைய வேண்டியிருக்கிறது. அப்போது அந்தக் காற்று, தடைபடும்போது தொண்டையில் 'விக்..' என்று ஒரு வினோத ஒலியை எழுப்புகிறது. இதுதான் 'விக்கல்'.

### ரிலாக்ஸ் செய்யுங்கள்



விக்கலால் அவதிப்படும் குழந்தையை ரிலாக்ஸ் ஆக தட்டிக்கொடுக்கலாம். பசியினால் சில குழந்தைகளுக்கு விக்கல் எடுக்கலாம். திடீர் விக்கல்களை நிறுத்த சிறிதளவு தண்ணீர் கொடுக்கலாம். இது விக்கலை நிறுத்த உதவும்.

# விக்கலும் விரட்டப்பட வேண்டும்

பால் புகட்டும் போது விக்கல் எடுத்தால் குழந்தைகளுக்கு பால் கொடுப்பதை நிறுத்தி விடவும். இல்லை எனில், அது மூச்சுத்திணறலை ஏற்படுத்திவிடும். சின்னக் குழந்தைகள் உறங்கிக் கொண்டிருக்கும் போது விக்கல் எடுக்கும். அப்போது தேனை நாக்கில் தடவி வைக்கலாம். அரோமா தெரபியின் மூலம் விக்கலை நிறுத்தலாம். சிறிதளவு எண்ணெயை எடுத்து ரிசுவில் தடவி அதனை குழந்தைகளின் நெஞ்சில் வைக்கலாம்.

பள்ளிக்குச் செல்லும் குழந்தையாக இருந்தால் ஒரு காகிதப்பையை எடுத்துக்கொண்டு, மூக்கு, வாய் இரண்டும் உள்ளே இருக்குமாறு இறுக்கிப் பிடித்துக்கொள்ளச் சொல்லுங்கள். இப்போது மூச்சை உள் இழுத்து, அந்தக் காகிதப்பைக்குள் மூச்சை விடச் சொல்லுங்கள். பிறகு அந்தக் காற்றையே மீண்டும் சுவாசிக்கச் சொல்லுங்கள். இவ்வாறு 20 முறை செய்தால் படிப்படியாக ரத்தத்தில் கரியமில வாயுவின் அளவு அதிகரித்து, பிராணவாயுவின் அளவு குறையும். அப்போது விக்கல் நின்று விடும்.

### மனநோய் விக்கல்

சிலருக்கு மனநோய் காரணமாகவும் விக்கல் வரும். இதற்கு 'ஹிஸ்டிரிக்கல் விக்கல்' என்று பெயர். பொதுவாக பள்ளிக்கு அல்லது தேர்வுக்குப் பயப்படும் குழந்தைகளுக்கு இந்த வகை விக்கல் வரும். இதில் கவனிக்கப்பட வேண்டிய விடயம் என்னவெனில், இந்த விக்கல் உள்ள குழந்தைகள் தூங்கினால் விக்கல் நின்று விடும். கண் விழித்ததும் விக்கல் தொடங்கிவிடும். இவையெல்லாம் சாதாரண காரணங்கள். இதனால் அவ்வளவாக பாதிப்பு ஏற்படுவதில்லை.அடிப்படை நோய் எதுவும் இல்லாமல் ஒருவருக்கு விக்கல் உண்டானால், அதை நிறுத்துவது எளிது. அவருடைய ரத்தத்தில் கரியமில வாயுவின் அளவை அதிகரித்தால் விக்கல் நின்றுவிடும்.

சிலருக்குத் தண்ணீர் குடித்தால், விக்கல் நின்றுவிடும். ஆரஞ்சுப் பழச்சாறு குடித்தால் விக்கல் நிற்கும். ஏதேனும் ஒரு வகையில் தும்மலை உண்டாக்கினால் விக்கல் நிற்கும். குழந்தைகளுக்குக் 'கிரைப் வாட்டர்' கொடுத்தால் விக்கல் நிற்கும். விக்கல் எடுப்பது இயல்பானது, சாதாரணமானதுதான். அதை நினைத்து அச்சம் கொள்ளவேண்டாம். என்கின்றனர் நிபுணர்கள்.

### அதிக விக்கல் ஆபத்து

ஒருவருக்கு இரண்டு மூன்று நாள்களுக்கு மேல் அதாவது 48 மணிநேரத்திற்கு மேல் விக்கல் தொடருமானால், அது ஆபத்தான அறிகுறி என்று எடுத்துக் கொள்ள வேண்டும். எடுத்துக்காட்டாக, சிறுநீரகம் பழுதாகி இரத்தத்தில் யூரியா அளவு அதிகரிக்கும்போது விக்கல் வரும். இது போல் உதரவிதானத்தில் நோய்த்தொற்று, இரைப்பைப் புண், இரைப்பைப் புற்றுநோய், கல்லீரல் கோளாறு, நுரையீரல் நோய்த்தொற்று, குடலடைப்பு, மூளைக்காய்ச்சல், சர்க்கரை நோய் முற்றிய நிலை, மாரடைப்பு போன்ற காரணங்களாலும் விக்கல் வரும். எனவே அதிக விக்கலை நிறுத்த மருத்துவரை அணுகவேண்டும்.



# சமுத்திரகனியின் செய்தி

சமுத்திரகனி படம் என்றாலே அதில் ஒரு செய்தி இருக்கும் என எதிர்பார்ப்பு இருக்கிறது. 'உன்னைச் சரணடைந்தேன்' படத்தில் என் நண்பர்களிடம் இருந்து என்னைக் காப்பாற்று. "என் எதிரி-களை நான் பார்த்துக்கொள்கிறேன். நாடோடிகள் படத்தில் நண்பனின் நண்பன் எனக்கும் நண்பன், போராளி படத்தில் மனிதன் சமூக வாழ்க்கையை மேற் கொண்டுவிட்ட மிருகம் என கருத்தாழம் மிக்க செய்திகளைச் சொல்லியிருப்பார்.

இப்போது ஜெயம் ரவி, அமலா பால் நடிக்க 'நிமிர்ந்து நில்' படத்தினை தற்போது இயக்கி வருகிறார். 'நிமிர்ந்து நில்' படத்தில் என்ன செய்தி சொல்லப் போகிறார்? உலகம் எப்படி ஆகணுமோ, அப்படியே நீ மாறிடுனு காந்தி சொன்னார். அதையே கொஞ்சம் மாத்தி "உன்னை நீ சரி செஞ்சுக்கோ. உலகம் தானா சரியாயிடும் என்று சொல்லியிருக்கிறார்.

நல்லவன் தொடர்ந்து சமூகத்துல எப்படிக் கற்பழிக்கப் படுகிறான்னு சொல்லியிருக்கோம். ராமகிருஷ்ணா மிஷன்ல படிச்சு தினமும் பிரேயர் பண்ணி ஒழுக்கமா இருக்குற ஒரு ஹீரோ. உலகத்துல இருக்குற எல்லா நல்ல விஷயங்களையும் கத்துக்கிட்டு வளர்ந்த நாயகனின் கதையைத்தான் தனது வேகமான திரைக்கதை மூலமாக சொல்லப் போறோம். நேர்மையா இருக்குற யாரும் நிமிர்ந்து நிக்கலாம்னு உத்வேகம் கொடுக்குற படம்" என்று அடித்து சொல்கிறார் சமுத்திரகனி.

# அஜீத்தின் அடுத்த படம் டிசம்பரில் !

சிறுத்தை சிவா இயக்க இருக்கும் புதிய படத்தில் நடிக்க இருக்கிறார் அஜீத். விஜய வாஹினி நிறுவனம் இப்படத்தினை தயாரிக்க இருக்கிறது.

நடிகர் அஜீத், சிவாவிற்கு போன் செய்து கதையை மாற்றும்படி கூறியதாக வெளியாகி தகவல்களை மறுத்திருக்கும் சிவா மேலும் கூறியதாவது, "படத்தின் கதைக்கு இறுதி வடிவம் கொடுத்து வருகிறேன். அஜீத் இதுவரை எனக்கு போன் எதுவும் செய்யவில்லை. அஜீத் போன்ற ஒரு பெரிய நடிகரை வைத்துக்கொண்டு எந்த மாதிரி கதையை வேண்டுமானாலும் செய்யலாம். இப்படத்தில் இதுவரை நீங்கள் பார்க்காத அஜீத்தை பார்க்கலாம். அஜீத்திற்கே இந்த கேரக்டர் புதிதாக இருக்கும்.

படத்தின் நாயகியாக அனுஷ்காவை ஒப்பந்தம் செய்யலாம் என்று இருக்கிறோம். படப்பிடிப்பு டிசம்பர் மாதம் தொடங்க இருக்கிறது. அதற்குள் அனுஷ்கா ஒப்பந்தம் ஆகியிருக்கும் படங்களில் நடித்து முடித்து விடுவார் என்று நம்புகிறேன்." என்று தெரிவித்து இருக்கிறார்.





# இந்தி த

# சீனா
# பறக்
# படக்

ஷங்கர்
மீண்டும் இ
இருக்கும்
இரண்டா
சீனாவில்
பெற இ
எமி ஜ
பி.சி.ஸ்ரீ
60 டு
குழு
செ
இ
ட

# கொடுத்து வைத்த நாயகன்

ஆர்யாவிற்கு நாயகியாக யார் நடித்தாலும் அவரோடு கிசுகிசுக்கப்படுவது ஒன்றும் புதிது அல்ல. 'உள்ளம் கேட்குமே' படத்தில் ஆரம்பித்தது, தற்போது நடித்து வரும் விஷ்ணுவர்தன் படம் வரை இது தொடர்கிறது.

இரண்டாம் உலகம் படத்தில் ஆர்யாவோடு நடித்த அனுஷ்காவும் அதில் இருந்து தப்பவில்லை. படப்பிடிப்பிற்காக ஜோர்ஜியா நாட்டிற்கு சென்றவந்த பிறகு, அனுஷ்கா புராணம்தான் பாடி வருகிறார் ஆர்யா.

ஆர்யாவின் நெருக்கமான வட்டத்தினர் கூறும் தகவல் புதிதாயிருக்கிறது. இப்போது ஆர்யா தினமும் யோகா செய்து வருகிறாராம். ஆர்யாவிற்கு யோகா கற்றுக் கொடுத்ததே அனுஷ்காதானாம்.

ஆர்யா சென்னை திரும்பியபின், தற்போது விஷ்ணுவர்தன் இயக்கத்தில் நடக்கும் படப்பிடிப்பில் மும்முரமாக ஈடுபட்டு வருகிறார். அப்படத்தில் ஆர்யாவிற்கு ஜோடி டாப்ஸி. படப்பிடிப்பிற்கு டாப்ஸியை தினமும் அறையில் இருந்து கூட்டிக்கொண்டு வருவது, படப்பிடிப்பு முடிந்தவுடன் கொண்டு போய்விடுவது எல்லாமே ஆர்யாதான்.

ஷங்கரின்
டச் இருக்
விக்ரமின்
பாத்திரம்
அனைவலை
அந்தளவிற
சிரத்தை எ
இப்பட
சில பாடல்
'ஐ' படத்தி
படப்பிடிப்பி
ஒரு சண்ை
தகவல்.

# விஸ்வரூபத்தின் புதிய

கமல் இயக்கத்தில் வெளியாக இருந்த விஸ்வரூபம் திரைப்படம் ஜனவரி 2013க்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. இந்திய திரையுலகில் உருவாகி இருக்கும் பிரமாண்ட தயாரிப்பு விஸ்வரூபம். ஒக்டோபர் 12ஆம் திகதி விஸ்வரூபம் வெளியீடு என்று செய்திகள் வெளிவந்தன. இப்படத்துடன் சூர்யாவின் மாற்றான் மோத இருக்கிறது என்று செய்திகள் களைகட்டின.

இந்நிலையில் விஸ்வரூபம் படத்தை 2013இற்கு ஒத்தி வைத்திருக்கிறார்கள். விஸ்வரூபம் படத்தின் ஒலியை Auro 3D என்ற தொழில்நுட்பத்தில் உருவாக்கி வருகிறார் கமல். Wilfried Van Baelen என்பவர் இப்பணியில் உதவிசெய்வதற்காக வந்திருக்கிறார். இதுவரை George Lucasd; 'Red Tail' என்கிற திரைப்படம் மட்டுமே Auro 3D வெ வெளிவந்திருக்கிறது.

விஸ்வரூபம் படத்தில் நிறைய சண்டைக்காட்சிகள் இருப்பதால் இ தொழில்நுட்பத்தினை தேர்வுசெய் இருக்கிறாராம் கமல்.

கமல் சென்னையில் 20 திை உரிமையாளர்களிடம் பேசி இந்த தொழில்நுட்பத்தினை அமுல்படுத் இருக்கிறாராம். ஒலியில் புதுப்பா இருக்கிறது விஸ்வரூபம்!

## மிழ் படம்!

மிர்ச்சி சிவா, திஷா பாண்டே நடிப்பில் அமுதன் இயக்கத்தில் வெளியானது 'தமிழ் படம்'. இப்படத்தில் தமிழில் வெளிவந்த பல படங்களின் காட்சிகளை கிண்டல்செய்து திரைக்கதை அமைத்து இருந்தனர்.

தமிழில் இப்படம் பெரும் வரவேற்பை பெற்றது. அதைப் பார்த்து, இப்படத்தின் தெலுங்கு உரிமையை வாங்கி அல்லரி நரேஷ் நடிப்பில் Sudigaadu என்ற தலைப்பில் அங்குள்ள படங்களை கிண்டல் செய்து திரைக்கதை அமைத்து இருந்தனர். அப்படம் அங்கு நல்ல வரவேற்பைப் பெற்றது.

இரண்டு மொழிகளிலும் பெரும் வரவேற்பை பெற்று இருப்பதால், தற்போது இந்தியிலும் இப்படத்தினை ரீமேக் செய்ய திட்டமிட்டு இருக்கிறார்கள். இப்படத்திற்கு 'Filmy Picture' என்று தலைப்பிட்டு இருக்கிறார்கள். விரைவில் இப்படத்தின் படப்பிடிப்பு துவங்க இருக்கிறது.





## விற்கு
## கிறது
## தமு

விக்ரம்
ணைந்து
ஐ' படத்தின்
கட்டப் படப்பிடிப்பு
45 நாட்கள் நடை
க்கிறது. விக்ரம்,
க்சன், ஷங்கர்,
ாம் உள்ளிட்ட
ர் கொண்ட
சீனாவுக்கு
ல திட்டமிட்டு
க்கிறார்கள்.
40 கோடியில்
மாண்டமாக உருவா-
ம் இப்படத்தில்,
தையமைப்பின்படி
னாவில் நடப்பதாக
ாட்சிகள்
இருப்பதால்,
ீனாவில் 45
நாட்கள்
டப்பிடிப்பு
நடைபெற
இருக்கிறது.
'ஐ' ஒரு
அரசியல் படம்
என்று செய்திகள்
வெளி
வந்தன.
'ஐ' அரசியல்
படம்
கிடையாதாம்.
முழுக்க முழுக்க
அக்ஷன் கலந்த
கெமர்ஷியல்
படமாம்
'ஐ'. ஆனால்
அதில்

ாம்.

நியன் படத்தினை விட அதிகமாக
ம் ஆச்சரியப்படுத்துமாம்.
விக்ரம் 'ஐ' படத்திற்காக பெரும்
த்திருக்கிறாராம்.
திற்கு இசையமைக்கும் ஏ.ஆர்.ரஹ்மான்
ளை முடித்து கொடுத்து இருக்கிறாராம்.
காக 41 நாட்கள் நடைபெற்ற முதற்கட்ட
ஷங்கர் முடித்து இருப்பது ஒரு பாடல்,
க்காட்சி மட்டுமே என்பது கொசுறு

## ஈதை

ழில்நுட்பத்தில்
ஹலிகொப்டர்
ங்கு
கூறி
போட

## உதயநிதியைக் கவர்ந்த சுந்தரபாண்டியன்

சசிகுமார் தயாரித்து, நடித்து வெளிவந்த 'சுந்தரபாண்டியன்' திரைப்படம் மக்களிடையே பெரும் வரவேற்பை பெற்று இருக்கிறது. புதுமுக இயக்குநர் எஸ்.ஆர். பிரபாகரன் இப்படத்தினை இயக்கி இருந்தார்.

'சுந்தரபாண்டியன்' படத்தினைப் பார்த்த உதயநிதி ஸ்டாலின் தனது டிவிட்டர் இணையத்தில், "சுந்தரபாண்டியன் அருமையான படம். ஜாலியா ரசிச்சுப் பார்த்தேன். குடும்பத்தோடு பார்க்க வேண்டிய படம்," என்று தெரிவித்து இருந்தார். அத்துடன் நின்றுவிடாது, அடுத்த நாள் இயக்குநர் பிரபாகரனை அழைத்து பாராட்டிவிட்டு தனது தயாரிப்பில் அடுத்த படத்தினை இயக்க ஒப்பந்தம்செய்து இருக்கிறார்.



தனது இரண்டாவது படமே பெரிய நிறுவனமான 'ரெட் ஜெயண்ட்' நிறுவனத்திற்கு இயக்க இருப்பதால் பெரும் சந்தோஷத்தில் இருக்கிறார் பிரபாகரன். உதயநிதிதான் நடிப்பதற்கு பல்வேறு இயக்குநர்களிடம் கதைக் கேட்டுவருகிறார். பிரபாகரன் இயக்க இருக்கும் படத்தில் உதயநிதியே நாயகனாக நடிக்கலாம் என்று பேச்சுக்கள் நிலவுகின்றன.



## சிம்புவின் தத்துவம்



காதல் என்றால் சிம்புவிற்கு அல்வா சாப்பிடுவது மாதிரி. வல்லவன் பட சமயத்தில் நாயகியாக நடித்த நயன்தாராவுடன் காதல் என்று செய்திகள் வெளியாகின. வல்லவன் படம் வெளியான சமயத்தில், இருவரும் நெருக்கமாக இருக்கும் படங்கள் இணை யத்தினை ஆட் கொண்டன. அதன்பின்னர் இருவரும் பிரிந்துவிட்டனர் என்ற செய்திகள் நிலவின.

பின்னர் நயனும் பிரபுதேவாவும் திருமணம் செய்ய இருக்கிறார்கள் என்று தகவல்கள் வெளிவந்தது. ஆனால், என்ன காரணத்தினாலோ இருவரும் பிரிந்து தற்போது அவரவர் படங்களில் கவனம் செலுத்த ஆரம்பித்துவிட்டனர்.

இந்நிலையில், நண்பர்கள் தினத்தன்று சிம்புவும், நயனும் ஹைதராபாத்தில் சந்தித்து தங்களது நட்பை புதுப்பித்து கொண்டார்கள். இருவரும் ஒன்றாக எடுத்துகொண்ட புகைப்படத்தினை சிம்பு வெளியிட்டார். தற்போது சிம்பு தனது இணையத்தில் "உனக்குனு ஒருத்திய அந்த ஆண்டவன் முடிவு பண்ணிட்டான், அதனாலதான் அதுக்கு முன்னாடி வந்தவ எல்லாரையும் உன்கிட்ட இருந்து எடுத்துட்டான்!" என்று கூறியிருக்கிறார்.

# தேன் கிண்ணம்

## அந்த நாட்களில்



சின்னச் சின்ன ஆசைகளுடன்
சிறகடிக்கும் வயதினிலே
பள்ளிக்கு நானுமே
பாங்காயே சென்றிடுவேன்

பென்சில் பிடித்து கொப்பியிலே
பெரிய படம் வரைந்திடுவேன்
கண்மணி ரீச்சர் சொல்லும்
கதைகளை கேட்டிடுவேன்

செல்லச் சண்டைகளை
தினமும் போட்டிடுவேன்
மெல்ல மெல்ல நடை பயின்று
பல்கலைகள் பயின்றிடுவேன்

கவலைகள் எனக்கில்லை
கள்ளங்கடமற்ற குழந்தை நான்
மனசில் வஞ்சகம் இல்லாததால்
மகிழ்வுதானே என் சொந்தம்.

**ஆஷா, யாழ்ப்பாணம்.**

## நீ வருவாய் என...

இரு விழிகள் இருந்தும் உன்னை
கண்டு கொள்ள முடியவில்லை.
இரு கால்கள் இருந்தும் உன்னை
காணவர முடியவில்லை.
இரு கைகள் இருந்தும் உன்னை
அணைத்துக்கொள்ள முடியவில்லை.
என் ஒரு இதயத்தையும் தந்து விட்டு
இதயம் இல்லாத
பாழடைந்த வீட்டைப் போல்
தவம் போல் கிடக்கின்றேன்.
நீ வருவாய் என....



**மன்னார் - A.G. நிஸாரா**

## ஈழத்துக் கவிஞர்கள்

### பெண்ணியா

இலங்கைத் தமிழ்க் கவிதைப் பரப்பில் குறிப்பிடத்தக்க பெண் கவிஞர் பெண்ணியா, காத்தான்குடியைச் சேர்ந்த இவர் 1990 ஆம் ஆண்டுகளில் பத்திரிகைகளில் தொடர்ச்சியாக கவிதைகளை எழுதியவர்.

இக்கவிதைகள் 2006 ஆம் ஆண்டுகளில் 'என் கவிதைக்கு எதிர்த்தல் என்று தலைப்பு வை' என்ற தலைப்பில் ஊடறு (சுவிஸ்) வெளியீட்டுத் தொகுப்பாக வெளிவந்தன.

நீண்ட இடைவெளியின் பின் கடந்த சில ஆண்டுகளில் இவர் எழுதிய கவிதைகள் சிறகு நுனி வெளியீடாக 'இரு நதியின் நாள்' என்ற தலைப்பில் 2008 இல் வெளிவந்தன.

பெண் வாழ்வில் உண்மையான நெருக்கடிகளை அதன் பச்சையான உக்கிரத்துடன் வெளிப்படுத்தும் இவரது கவிதைகள் இலங்கை, தமிழ்நாடு, ஐரோப்பா, கனடாவிலிருந்து வெளிவரும் இதழ்கள், பத்திரிகைகள் இணையத் தளங்களில் பிரசுரமாகின்றன.

தமிழில் வெளிவந்த முக்கிய பெண் கவிதைத் தொகுப்புகளான 'உயிர்வெளி பெயல் மணக்கும் பொழுது மை' ஆகிவற்றிலும் வேறாகி நின்றவெளி தொகுப்பிலும் இவரது கவிதைகள் இடம் பெற்றுள்ளன.

**இவரது கவிதையொன்று**

### திருடப்படுதல்

நெஞ்சும் வயிறும் பற்றி எரிந்தது
எனக்கு விருப்பமானவனின்
காதலை
இன்னொருத்தி திருடியதைப் போலிருந்தது
விருப்பமற்றவனின் முகத்தை
முத்தமிட்டதைப் போலிருந்தது
என் செல்ல நாய்க்குட்டியை
யாரோ கொன்றதைப் போல்...
என் குளிப்பறையை
யாரோ உற்றுப் பார்ப்பதைப்போல்
உள்ளாடைகளை சலவைக்காரன்
துணிகளோடு எடுத்துச்சென்றதைப்போல்
ஒவ்வொரு நிமிடமும்
நிகழ்ந்து கொண்டேயிருக்கிறது
அந்தரங்க வாழ்வின் மீது
அத்தனை விருப்பமின்மைகளும்.

வேலணையூர் தாஸ்

## துயர் யாதெனில்...

ஆயிரம் இரவுகள் கோர்த்து வைத்த
நினைவுகளை மூட்டை கட்டி
சேமித்து வைத்திருக்கிறேன்
இரசித்து இரசித்து அவளுக்கேயென்று.

எழுதிய கவிதைகளெல்லாம்
என்னை ஏளனம் செய்கின்றன.

வலிகளைப் பெயர்த்து
விழிகளை உயர்த்தி நிற்கையில்
கண்கள் உருட்டும் கண்ணீரின்
அர்த்தம் யாருக்குப் புரியும்?
இந்த இளமனசுதான் அதை அறியும்.

கண்கொத்தும் கவலையும்
உதடுகள் உருட்டும் உண்மையும்
உருக்கத்தை வருடியே - ஊருக்கு
ஒப்பாரி வைக்கத் தயாராகி விட்டன.

நெஞ்சில் நினைவ்களை
சேர்த்தே தீட்டியவள் நெஞ்சில்
முகாரிகளை மூட்டி விட்டாள்
உள்ளத்தையும் பூட்டிக்கொண்டாள்.

பொட்டல் பூமியில் புதைந்து
கிடக்கிறது என் உடல்.
உயிரை ஈர்த்துக்கொண்டதுவோ
மற்றோர் உடல்.

அவளிடம் ஈர்ப்பு சக்தி
கொஞ்சம் அதிகமாய்த்தான் இருக்கிறது.



**கிண்ணியா இஜாஸ்.**

## நாதியற்ற பிணம்



வாலிபம் கட்டித் தந்த
இளமை சாம்ராஜ்ஜியத்தில்,
இவன் ஒரு
தனிக்காட்டு ராஜா!

குட்டிய கைகள்,
குற்றமாகத் தெரிந்தது!
தட்டித் தடம் காட்டியவர்கள்,
தப்பானவர்களாகத் தெரிந்தார்கள்.

கையிருப்புகளை
கரைப்பதற்கு ஒரு கூட்டம்,
பொய்ப் புகழ்பாடி
போதை ஏற்றுவதற்கு
ஒரு கூட்டம்!

தள்ளப்பட வேண்டிய சங்கதிகளை
தைரியமாய் தலையில்
கட்டுவதற்கு
கள்ளமனம் கொண்ட
கபடக் கூட்டம்!

கொண்டதே
கோலம்,
கண்டதே
காட்சி!

யாருக்கு குறுக்கிடாத
அவன் வாழ்க்கை,
சொல்லாமல் கொள்ளாமலே
சோரம் போய்க்கொண்டிருந்தது!

ஒரு யுகம் தவறியவனுக்கே
பலயுகம்
தண்டனை, தரும் காலம்
அவனையும் தண்டித்தது!

நோயில் வீழ்ந்தான்,
பாயில் படுத்தான்!
கொட்ட மடித்து வாழ்ந்த
குபேர ராஜா
நட்ட நடு வீதியில்
நாதியற்ற பிணமாகக்
கிடக்கிறான்!

**நா.ஜெயபாலன், பிபிலை**

## குட்டிப்...பெண்ணே...?



கைவிரல்களிடையே
பென்சிலும் நோட்டுமாய்
வளையல் ஓசை
குலுங்க .... குலுங்க.....
வலம் வரவேண்டியவள்....
வீட்டைப்பெருக்கி
பாத்திரம் தேய்க்கும்
பால் மணம் மாறாத... உன்
முகம் பார்க்கையிலே...?

பதறிப்போனேனடி...
குட்டிப் பெண்ணே..?

ஆனால்.... நீயோ...?
அழுக்கேறிய ஆடையுடன்
அழகாய் வேலை செய்கிறாய்...?

**யாழ்.அஞ்சனா.**

குணவீரசிங்கை ஆரிய மன்னன் அமரசிம்மனை ஓய்வெடுக்கச் சொன்னாலும் அவன் மனம் ஓய்வதாகத் தெரியவில்லை. அவன் மனம் முழுவதும் கடற்கொள்ளையர்கள் நால்வரையுமே சுற்றி வந்தது. அவர்களை அவன் விசாரணைக்கும் தோரணை யில் விசாரித்ததால் அவர்கள் தமது தலைவனையும் தமதுதிட்டத்தினையும் அமரசிம்மனிடம் தெரிவித்தார்கள். அமரசிம்மனின் அன்பினால் தாம் திருந்தி மனிதர்களாக்கப்பட்டுள்ளதை நினைத்து கரழயனுக்கும் அமர சிம்மனுக்குமுள்ள வித்தியாசத்தை கண்டு உளம்நெகிழ்ந்து போனார்கள் அந்தக் கொள்ளையர்கள்.

அத்தியாயம் 03

கலாபூஷணம்
கே.எஸ்.ஆனந்தன்.



# சிங்கை மைந்தன் அமரசிம்மன் (05)

**விசாலமான** ஓர் அறையில் அமரசிம்மன் கூறிய அறிவுரை களைக்கேட்டு கடற்கொள்ளை யர்கள் நால்வரும் அவன் காலடி யில் விழுந்து அழுதார்கள்.

"எசமான் இந்தக் கள்ளர்களை நம்பி யார் வேலை கொடுப்பார் கள்? வேறு வழியின்றித்தான் கரடியனின் ஆசை வார்த்தையில் அகப்பட்டோம்"என்றனர்.

"நீங்கள் சிறந்த மாலுமிகள் தானே?"

"உண்மைதான் பிரபு"

"ஏன் எங்கள் கடற்படையில் சேரக்கூடாது"

"பிரபு" என்று ஏககாலத்தில் மூவரும் பிரமிப்புடன் அவனைப் பார்த்தனர்.

"நான் உங்களை நம்புகின் றேன். எங்கள் போர்க்கலங்களில் நீங்கள் இணைந்து பணிபுரியுங் கள். ஆனால்...?"என்று அவர் களை ஊடுருவி நோக்கினான்.

"பிரபு! நீங்கள்தான் பார்த்தீர் களே. நாங்கள் கள்ளர்கள் தான். ஆனால் நம்பினோர்க்கு விசுவாசமாக இருப்போம் இது சத்தியம்"என்றனர்.

"காராளா! நான் அதற்காக கூறவில்லை. நீங்கள் வாழ்ந்தது காட்டுமிராண்டி வாழ்க்கை. நீங்கள் எங்களுடன் இணையும் போது சில கட்டுப்பாடுகளுக்குட் பட்டு நடக்க வேண்டும். வாரத் தில் ஒரு நாள் ஓய்வுண்டு. அன்று நீங்கள் சுதந்திரமாக இருக்கலாம். நான் சொல்வது புரிகிறதா?"

"எசமான்! இந்தக் கணம் முதல் உங்களுக்கு விசு வாசமாகவும், இந்த நாட்டுக்கு விசுவாசமாகவும், அரசருக்கும் அரச தர்மத்துக்கும் கட்டுப்பட்டு நடப்போம்" என்று உறுதிமொழி செய்துகொண்டனர்.

அவர்களது சிந்தனையைக் கலைப்பது போல அமரசிம்மன் நடுப்பாய்மரம் நோக்கி வந்து நின்று எல்லா வீரர்களையும் அழைத்தான். அவர்களோடு கொள்ளையர்கள் நால்வரும் சேர்ந்து கொண்டனர்.

" நான் சொல்வதைக் கவன மாகக் கேட்டுக்கொள்ளுங்கள். இன்னும் சில நாழிகையில் நாம் கரடியன் இருக்கும் தீவை நெருங்கப் போகின்றோம். இந்தக் கலத்தில் மட்டும் தீப்பந்தங்கள் எரியும். மற்ற இரு கலங்களும் இருள் சூழ்ந்திருக்கும். பின்னால் வரும் சிறு வள்ளங்களில் பஞ்சு மூட்டைகள் ஏற்றப்பட்டுள்ளன. எமது கலம் கரைக்குச் செல் லாது. மற்ற இரு கலங்க ளும் கரைக்குச் சமீபமாகச் சென்று வள்ளங்களைக் கட லில் மிதக்கவிட்டு மீண்டும் பின்நகர்ந்து கொள்ளும். தீப்பந்தங்களுடன் நிற்கும் எமது கலத்தை வணிக கலம் என்று எண்ணி கரடியன் தாக்குவதற்கு ஆயத்தமாகி வருவான். இடையில் வள்ளங் கள் மிதப்பதைப் பார்த்து அவன் கலம் தாமதிக்கும். அதே சமயம் எரிஅம்புகள் இங்கிருந்து பாயும். பஞ்சுப்பொதி ஏற்றிய வள்ளங்களில் தீப்பிடிக்கும். அவை காற்றுவாக்கில் கரடியன் கலத்தை நெருங்கி அசைய முடியாதபடி தடுத்துவிடும். திண- றுவான் கரடியன். இருளில் வரும் மற்றக்கலங்கள் கரடியன் கலத்தை இருபுறமும் சூழ்வதை அவன் எதிர்பாராது எம்மை மடக்கவே நினைப்பான். அதற்கிடையில் கரடியனின் கலம் பெரும் அழிவுக்குள்ளாகிவிடும். நமது கலம் அதற்குச் சமீபமாகச் செல்லும் பொழுது கடலில் தத்தளிக்கும் கொள்ளையர்களைக் கொல்லாமல் கைது செய்யுங்கள். இயன்றளவுக்குக் கொலையைத் தவிர்த்து உயிரோடு எல்லோரையும் பிடித்துவிடுங்கள். மற்ற இரு கலங்களுக்கும் ஏற்கனவே செய்தி அனுப்பிவிட்டேன். நீங்களும் ஏதாவது கூறவேண்டுமானால் தாராளமாகக் கூறலாம்." என்றான்.

"பிரபு ஒரு வார்த்தை. நான் ஏற்கெனவே கொள்ளையனாய் இருந்ததால் ஓர் விடயத்தைக் கூறவேண்டியவனாய். உள் ளேன்." என்றான் காராளன்.

"சொல் காராளா, என்ன விடயம்?"

"எங்கள் கலத்திலிருந்து எரியம்புகள் வீசப்படுவது போல கரடியன் கலத்திலும் எரியம்பு வீசுபவர்கள்."

"வீசட்டும். காற்று எங்கே வீசுகின்றது பார்த்தாயா? அவர்கள் வீசும் எரியம்பு நாங்கள் நிறுத்தி யுள்ள பஞ்சுப் பொதிகள் நிரம்பிய கலத்தில்தான் விழும். அவர்களே தங்களுக்குத் தீ மூட்டிக் கொள்வார்கள்."

"உண்மைதான் எசமான்"என்று அவன் கூறி முடிக்கவும்,, கரடியனு டைய தீவுக்குச் சமீபமாக போர்க் கலங்கள் நெருங்கிவிட்டிருந்தன.

"ஒரே ஒரு பாயைவிட்டு மற்றயவற்றை இறக்கிவிடுங்கள்" என்றான் அமரசிம்மன்.

"பிரபு, கரையில் உள்ளவர்கள் எமது கலத்தைப் பார்த்துவிட்டனர். தீப்பந்தங்களின் நடமாட்டத்தைப் பாருங்கள்" என்றான் காராளன்.

"காராளா உன் விழிகளில் தூரநோக்கு வில்லை பொருத்தியி ருக்கா?" என்று கேட்டுச் சிரித்தான் அமரசிம்மன்.

"ஏன் பிரபு?"

"இவ்வளவு தொலைவிலிருந்தே கரையில் நடப்பதை கவனித்து விட்டாயே?"என்று பாராட்டினான்.

"நாங்கள் பழகிய இட மில்லையா? பிரபு"

"உண்மைதான். இன்னும் ஒரு நாழிகைப் பொழுதுக்குள் கடலில் பெரிய திருவிழாவே நடைபெறப் போகின்றது" என்று கூறிச்சிரித்தான் அமரசிம்மன்.

அமரசிம்மன் எதிர்பார்த்தபடியே தான் சகலமும் நடந்தது. கரடிய- னுடைய கலத்தில் வள்ளங்களில் பற்றி தீ சுவாலையை விட்டுக் கிளம்பி சூழ்ந்து பிடித்தது. அதனை அணைக்கவும், அந்த வியூகத்தை உடைத்துக் கொண்டு வெளியேறவோ, பின்செல்லவோ முடியாதநிலை யில் திகைத்துவிட்டான் கரடியன். அவர்களின் கலத்தில் பாய்களை இறக்கு முன்பே எல்லா இடமும் தீப்பற்றிக்கொண்டு விட்டன. எப்பொழுதும் எதிரிக்கலங்களில் உள்ளோரைக் கலங்கடித்து வெறியாட்டம் ஆடிப் பழக்கப்பட்ட கரடியனுக்கு தன் கலத்தில் இப்படி ஓர் விபரீதம் நிகழும் என்று எதிர்பார்க்கவில்லை. பாய் மரங்கள் வெடித்துச் சிதறி விழுந்தன. கொள்ளைக்கார மாலு மிகள் வெறிக்கூச்சல் இட்டுப் பழக்கப்பட்டவர்கள் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள கதறிக் கொண்டே நீரில் குதித்தனர். இரு மருங்கிலும் போர்க்கலங்களை தீ ஒளியில் பார்த்ததும் வெறிக் கூச்சலிட்டான் கரடியன் அவனு டைய கூச்சலை யாரும் செவிமடுக்கவில்லை. தீக்காயங்க ளோடு உயிருக்கு மன்றாடிய கொள்ளையர்களை போர்க் கலங்களிருந்த மாலுமி கள் காப்பாற்றி தங்கள் கலங்களில் ஏற்றிக்கொண்டனர். ஆனால் கரடியன் தன் கலத்தைவிட்டு அசையவில்லை. கொழுந்துவிட்டெரியும் அக்கி னிக்கு நடுவே அஞ்சா மல் நின்றிருந்தான். அதே சமயம் அவ்விடத்தை நெருங் கிய அமரசிம்மன் தனது போர்க்கலத்தில் நின்று கரடிய னுக்கு அழைப்பு விடுத்தான்.

"கரடியா நீரில் குதித்து நீந்திவா. உன்னைக் கொல்ல மாட்டேன். உயிரைக் காப்பாற்றி நல்லவனாக வாழ்வைத் தொடங்க விருப்பம் இருந்தால் உடனடியாகக் கலத்தைவிட்டு நீரில் குதித்துவிடு"

மரணத்தின் பிடியில் சிக்கி விட்டோம் என்பதால் கரடியன் மருண்டான் இல்லை. யாருக்கும் பணிந்து வாழ்ந்து பழகாதவன். பயம் என்றால் என்னவென்றே அறியாதவன் மிக நிதானமா- கவே கூறினான்.

"அமரசிம்மா! சூழ்ச்சியால் கரடியனை வீழ்த்திவிட்டாயே. உன்னை பெரிய வீரன் என்று எல்லோரும் போற்றுகின்ற னரே நீ செய்தது தர்மவிரோத மில்லையா?"

"நீ மட்டும் நியாயமாய் நடந்திருந்தால் நேரே நான் உன்னுடன் போராடியிருப்பேன். என்னைக் கொல்ல சூழ்ச்சி செய்தாய். அதே முறையில் உன்னைப் பிடிக்க நான்வர வில்லை. உன்னுடன் இருக்கும் அப்பாவிக் கொள்ளையர்களைக் கொல்லாமல் பிடிப்பதற்காகவே இந்த வியூகம். நீ உண்மை யான வீரனாய் இருந்தால் என் கலத்துக்கு வா. நீயும் நானும் போரிடுவோம். நீ வென்றால் உன்னை விடுதலை செய்து நீ விரும்பும் இடத்துக்கு அனுப்பிவிடுகின்றேன். உன் வீரர்களை எனது கடற்படையில் சேர்க்கப் போகின்றேன். அவர் களே இனி வணிகர்களைப் பாதுகாக்கும் வீரர்களாக இருக்கப் போகின்றார்கள். நீ விரும்பினால் வரலாம். உனக்கு எந்தத் தீங்கும் நேராது காப்பாற்றுகின்றேன்" என்று கூறிக் கொண்டிருக்கும் போதுதான் அந்த அனர்த்தம் நடந்தது. (தொடரும்...)

**வெயிலின்** நிறம் மஞ்ச ளுக்கு மாறிக்கொண்டிருந்த ஒரு மாலை நேரம்.

திருமதி வாணி ஜெயராம் அவர்களின் வீட்டு வெளிச்சுவர் தனது நெற்றியில் 'மயூரப்பிரியா' என்று எழுதி வைத்திருக்கிறது.

மயூரம் என்றால் மயில் என்று பொருள்.

தன் வீட்டுக்கு மயில் என்று பெயர் வைத்திருக்கிறதே ஒரு குயில் என்று மனதுக்குள் ரசித்துக் கொள்கிறேன்.

திரு. ஜெயராம் அவர்களும், திருமதி வாணி ஜெயராம் அவர்களும் புன்னகை ராகம் பாடி வரவேற்கிறார்கள்.

அந்த வரவேற்பறையின் அமைதி சுமந்த அழகு, வெயிலோடு அழைத்து வந்த வெப்பத்தையெல்லாம் வெளியே அனுப்பிவிடுகிறது.

விருதுகளை எல்லாம் கண்ணாடிச் சுவர்களுக்குள் அடுக்கி வைத்திருக்கும் அழகு..

தனது கலையுலக வாழ்க்கையைத் தொடங்கி வைத்த அமரர் வசந்த்தேசாயின் படத்திற்கு மாலையிட்டு வைத்திருக்கும் மாண்பு...

சுவரில் வழியில் வர்ணக் கலவைக ளால் நதியின் திருப்பத்தில் நகரும் ஒரு படகு...

பளபளப்பாய் இருக்கிறது.

'உங்கள் வீட்டு அடுப்பைக் கூட யாரோ கொடுத்த விருதைப் போலல்லவா அழுக்குப் படாமல் வைத்திருக் கிறீர்கள்! சமைக்கிறீர்களா இல்லையா? என்று சந்தேகத்தோடு கேட்டேன்.

சிரிப்பை அடக்க முடியாமல், அன்று சமையல் நடந்தற்கான சாட்சிகளைக் காட்டினார்.

மாடி அறையில் ஒரு பெரிய சுவரோவியம் ஒட்டப்பட்டிருந்தது.

அது, ஒரு பெரிய வனாந்தரத்தை வரைந்து காட்டியிருந்தது.

அதைப் பார்த்த உடனே மனசு அதற்குள் ஓடி விழுந்து உட்கார்ந்து கொண்டது.

தாகூர் சொன்னதைச் சொன்னேன்.



# குயிலின் கூட்டில் கொஞ்ச நேரம்

கவிஞர் வைரமுத்து



அந்த அறையெங்கும் தூய்மைக்கு அங்குலம் அங்குலமாக அலங்காரம் செய்து வைத்திருக்கும் அந்தப் பாங்கு...

இவையெல்லாம் அந்தக் கோடை வேளையில் மனசுக்குள் மெல்லிய மல்லிகைக் காற்றாய் வீசின.

'உங்களுடைய மூலப்பெய ருக்கு ஏற்றவாறே வீட்டை வைத்திருக்கிறீர்கள்?என்று வியந்து போகிறேன். (அவருடைய மூலப்பெயர் கலைவாணி)

எனது பொய்யில்லாத புகழ்ச்சியை அவர் தனது புன்னகையால் அங்கீகரித்துக் கொள்கிறார்.

வீட்டைச் சுற்றிக் காட்டுகிறார்.

ஒவ்வோர் அறையிலும் தூய்மையும் அழகும் அரசோச்சுகின்றன.

அங்கே ஆடம்பரத்தின் விசுவருபமில்லை.

அழகு அடக்கமாக இருக்கிறது.

வீட்டை கட்டியதிலும் அதைக் கட்டிக் காப்பதிலும் உள்ள பெருமை தன் கணவரையே சாரும் என்று பெருமை 'நுரைக்கப் பேசுகிறார். திரு. ஜெயராம் அவர்களின் கலை உள்ளத்தை வணங்கி வாழ்த்துகிறேன்.

அவர்கள் வீட்டுச் சமை யலறைகூட அப்போதுதான் துடைத்து வைத்த அப்பிள் போலப்

'எந்த ஒரு ஓவியத்தைப் பார்த்தவுடன் நமக்கு அந்த இடத்திற்குப் போய் உட்கார வேண்டும் என்று தோன்றுகிறதோ அதுதான் சிறந்த ஓவியம்.

எனக்கு இப்போது இந்த ஓவியத்தில் இருக்கிற இந்த மரத்தடியில் உட்கார்ந்து கொண்டு எழுத வேண்டும் போலிருக்கிறது என்றேன். ஜெயராம் சிரித்தார்.

மீண்டும் வரவேற்பறைக்கு வந்து அமர்ந்தோம்.

**வாணி ஜெயராம்:** நேற்று சிலோன் ரேடியோவில் 'ஒரு இந்தியக் கனவு படத்தில் நீங்கள் எழுதிய 'என் பெயரே எனக்கு மறந்து போன பாட லைக் கேட்டேன்.

சமீபகாலத்துல ரசிக்கற மாதிரி வந்திருக்கும் பாடல்களில இதுவும் ஒன்று.

**நான்:** எனக்கும் ரொம்பப் பிடித்த பாட்டு அது. முதன் முதலில் புத்தகத்துக்குள்ளிலிருந்து எடுத்து இசையமைக்கப்பட்ட முதல் புதுக்கவிதைங்கற அந்தஸ்து" அந்தப் பாட்டுக்கு உண்டு. எம்.எஸ்.வி. ரொம்ப நல்லா இசையமைச்சிருக்கார். நீங்களும், எஸ்.பி.பியும் ரொம்ப அழகாப் பாடியிருக்கிறீங்க.

(தொடர்ச்சி 22 ஆம் பக்கம்)

பெண்கள் பக்கத்திற்குரிய தரமான ஆக்கங்கள் வாசகர்களிடமிருந்து வரவேற்கப் படுகின்றன



# லேடிஸ் ஸ்பெஷல்

## பட்டுச்சேலை பராமரிப்பு!



இரண்டாயிரத்து ஐநூறு வாங்கும் பட்டுப்புடவையாக இருந்தாலும் அதை புதுப்பெண் போல் பாதுகாத்து வைத்திருப்பார்கள். அதுவும் திருமண முகூர்த்த பட்டு என்றால் சொல்லவே வேண்டியதில்லை. முறையாக பராமரித்து வந்தால் பல ஆண்டுகளுக்கு உபயோகிக்க முடியும். விஷேசங்களுக்கு சென்று வந்தவுடன் பட்டு புடவையை களைந்து உடனே மடித்து வைக்க கூடாது. நிழலில் காற்றாட 2 அல்லது 3 மணி நேரம் உலரவிட்டு பின்பு அதனை கைகளால் அழுத்தி தேய்த்து மடித்து எடுத்து வைக்கவேண்டும்.

சாதாரண தண்ணீரால் மட்டும் அலசினால் போதுமானது. எக்காரணத்தை கொண்டும் பட்டுப்புடவையை சூரியஒளி படும்படி வைக்க கூடாது.

பட்டு புடவையின் மீது ஏதேனும் கறைபட்டால் உடனே தண்ணீர்விட்டு அலச வேண்டும்.

எண்ணெய் போன்ற கடினமான கறைகளாக இருந்தால் அந்த இடத்தில் விபூதியை போட்டு 5 முதல் 10 நிமிடங்கள் வரை வைத்து பின்பு தண்ணீர் விட்டு அலசவேண்டும்.

அடிக்கடி அயர்ன் செய்வதை தவிர்க்கவேண்டும், அயர்ன் செய்யும் பொழுதும் ஜரிகையை திருப்பிப்போட்டு அதன் மேல் லேசான துணி விரித்து அதன் பின்பு அயர்ன் செய்ய வேண்டும். நேரடியாக அயர்ன் செய்யக்கூடாது.

பட்டுப்புடவைகளை அட்டை பெட்டிகளிலோ, பிளாஸ்டிக் கவர்களிலோ வைப்பதை காட்டிலும் துணிப்பைகளில் வைத்தல் அதன் தன்மையை பாதுகாக்கும். வருடக்கணக்கில் பட்டுபுடவையை தண்ணீரில் நனைக்காமல் வைக்கக் கூடாது. பயன்படுத்தாமல் இருந்தாலும் 3 மாதத்திற்கு ஒரு முறையாவது தண்ணீரில் அலசி நிழலில் உலரவிட வேண்டும்.

## வலது குறைவின் தாக்கத்தில் பெண்ணியப் பார்வை!

(வாகரை வாணி)

வலது குறைவின் தாக்கமானது பெண்களை மட்டும் பாதிக்கின்ற ஒரு விடயமல்ல. மாறாக அது இரு பாலாரையும் பாதிப்புக்குள்ளாக்கும் காரணியாகும்.

இருப்பினும், வலது குறைவின் காரணமாக குடும்ப, சமூக, கல்வி, கலாசார, பொருளாதார நிலைகளில் அதன் அதிக அளவிலான தாக்கங்கள் பெண்களைப் பாதிப்புக்குள்ளாக்கி வருகின்றது. இவற்றிலுள்ள விழுமியங்கள் மற்றும் அதன் வடிவமைப்புக்கு ஏற்ப பல் வகைப்பட்ட வடிவங்களில் இது பெண்களைத் தாக்குகின்றது.

வலது குறைவு ஏற்படுவதற்கான காரணங்களில் ஆண் சிந்தனை போக்கிற்கும் முக்கிய பங்கு உள்ளது. உடல் ரீதியாகக் கூறவேண்டுமானால் ஆண்களிடம் காணப்படுகின்ற குரோமோசன்களில் உள்ள குறைபாடு, விந்துகளின் ஊடாகக் கடத்தப்படுகின்ற பரம்பரை மரபணு, பழக்கவழக்கங்களில் காணப்படுகின்ற மது, சிகரட், போதைவஸ்துப் பாவனையும் வலது குறைவு ஏற்படுவதற்கான ஒரு காரணமாக அமைந்து விட்டிருக்கின்றது என மருத்துவ அறிக்கைகள் சுட்டிக் காட்டுகின்றன.

அதே வேளையில், சமூகத்தில் காணப்படுகின்ற ஆண் நிலைச் சிந்தனை வெளிப்பாடாக வாகனங்களை வேகமாக செலுத்துவது மேலும் மதுப் பாவனையுடன் வாகனங்களை ஓட்டிச் செல்வது போன்றவற்றால் அதிக அளவிலான வீதிவிபத்துகள் ஏற்பட்டு விடுகின்றன.

இதனால் பலர் உடல் உறுப்புகளை இழந்து வலது குறைவு நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். அதே வேளை, குடும்ப வன்முறை, குழு வன்முறை என்பனவும் வலது குறைவு ஏற்படுவதற்குக் காரணங்களாய் அமைந்து விட்டிருக்கின்றன.

லாபத்தை மட்டும் நோக்காகக் கொண்ட போட்டிச் சந்தையில் காணப் படுகின்ற இரசாயனப் பாவனை மற்றும் அதன் பாவனை மூலம் நுகரப்படுகின்ற உணவும் வலது குறைவை ஏற்படுத்தி விடுகின்றது.

உள்நாட்டுப் போர்களின் போது பிரயோகிக்கப்படும் நச்சு வாயுக்கள் மற்றும் சகிக்க முடியாத பேரிரைச்சல், அதிர்ச்சி தரும் சத்தம் என்பனவும் கூடவே வலது குறைவில் பாரிய பங்கை வகிக்கின்றது.

மறு உற்பத்தி என்பது விரும்பியோ விரும்பாமலோ ஆண் பெண்ணின் இணைவுடன் நடைபெறுகின்ற ஒரு செயற்பாடாகும். ஆனால், சமூகத்தின் பார்வையில் வலது குறைவு ஏற்படுவதற்குப் பெண்களே காரணங்களாகவும் பொறுப்பானவர்களாகவும் பார்க்கப் படுகின்றனர்.

வலது குறைந்த குடும்பத்தைச் சேர்ந்த பெண்களை திருமணம் செய்ய முன்வருவதற்கு பல ஆண்கள் அஞ்சுகின்றனர். இதன் காரண-மாக வலது குறைந்த குடும்பத்தைச் சேர்ந்த வலது குறைந்த பெண்ணை அல்லது பெண்களை வெளியில் தலை காட்டாது தடுத்து வைத்து அவர்கள் வாழ்வதற்கான உரிமையை இழக்கச் செய்து விடுகின்றனர்.

சில குடும்பங்களில் வலது குறைந்த நபர் அவர் வாழ்வதற்கான சூழலை உருவாக்கிக் கொடுப்பதற்குப் பதிலாக அந்த நபர்கள் கொண்ட குடும்பங்களை முன்னோர் செய்த பாவம் எனக் கூறி ஒதுக்கி வைத்தும் விடுகின்றனர்.

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்...)

## தன்னம்பிக்கை

அழகு என்பது உடல் தொடர்புடையது மட்டுமல்ல அது உள்ளம் தொடர்புடையது. என்கின்றனர் வல்லுநர்கள். எங்கே தன்னம்பிக்கை அதிகரிக்கிறதோ அங்கே அழகு மிளிரும் என்பது அவர்களின் கூற்று. உள்ளத்தில் தன்னம்பிக்கை ஒளி உண்டானால் முகத்தில் பொலிவு கூடும் என்பது கருத்து.

அழகாய் இருக்க வேண்டும். அழகான தோற்றம் பெற வேண்டும் என எந்தப் பெண்ணும் விரும்புவது சகஜம். நாம் நேசிக்கும் ஒருவர். அல்லது ஒரு பொருள், அல்லது வேறு ஏதாவதாக இருக்கலாம். அது நம்மை விட்டு போகும் போது, அல்லது இல்லாமல் போகும் போது, நாம் அதற்காக ஏங்கும் நிலை ஏற்படலாம். ஆனால் நாம் எதை இழந்தாலும் அழகு எப்போதும் நம்மை விட்டு அகல்வதேயில்லை. அது எப்போதும் நம்மிடவே உள்ளது. ஆனால், நமக்குத்தான் வயதாகிவிட்டதே என எண்ணி அழகை நாம் பேணாத காரணத்தால் தான் அழகிழந்தவர்களாக நாம் நம்மை கருதுகிறோம்.

இழந்த அழகை பெற நாம் முதலில் நம்மீது நம்பிக்கையுள்ளவர்களாக இருக்க வேண்டும். நம்மைப் பற்றி உயர்வாக எண்ண வேண்டும். நாம் அழகானவர், இனிமையானவர் என எண்ணிக் கொள்வது அழகின் முதல் படியாகும். இது போன்ற மெல்லிய உணர்வுகள் கூட நமது முகத்தை அழகுபடுத்தும்.

அமைதியில்லாத உள்ளத்தில் அழகான மென்மையான எண்ணங்களுக்கிடமில்லை. எந்தப் பிரச்சினையையும் என்னால் எதிர்த்துப் போராட முடியும் என்ற தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ளுங்கள். அச்சம் விலகும் அந்த மனத்தைரியத்தில் ஒரு அமைதி மனதில் ஏற்படுவதை உங்களால் அறிந்துகொள்ள முடியும்.

மனத் தெளிவும், அமைதியுமான உள்ளமும் அழகின் முதல் படியாகும். திருப்தியான உள்ளம் அமைதியை ஏற்படுத்தும். எனவே மன அமைதியைத் தேட முயற்சி செய்யுங்கள். உங்களைப் பற்றி அழகான எண்ணங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள். நல்ல மென் உணர்வுகளை கொண்டிருங்கள். அதுவே உங்கள் முகத்திலும் உடலிலும் மாற்றங்களை ஏற்படுத்தும்.

## மரவள்ளிக் கிழங்கு வடை



### தேவையான பொருள்கள்:

மரவள்ளிக் கிழங்கு - 500 கிராம்
மிளகாய்தூள் 1 - ஸ்பூன்
வேர்க்கடலை பவுடர் - 50 கிராம்
உப்பு - தேவையான அளவு
பெருங்காயப் பொடி - அரை ஸ்பூன்
எண்ணெய் - 500 கிராம்

**செய்முறை:**

* மரவள்ளிக் கிழங்கைத் தோலுரித்து கழுவிவிட்டு துருவிக் கொள்ளவும்.
* அதில் மிளகாய்த் தூள், உப்பு, வேர்க்கடலை பொடி, பெருங்காயப் பொடி ஆகியவற்றைக் கலந்து காய்ந்த எண்ணெய்யில் வடைகளாகத் தட்டிப்போட்டு வெந்தவுடன் திருப்பிப் போட்டு எடுக்கவும்.
* தங்க நிறத்திற்கு வந்ததும் எடுக்கவும்.

## பரிசு 1000/- ரூபா. வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

பரிசுப் போட்டி இல :-335

கேள்வி : இழந்த அழகைப் பெற நாம் என்ன செய்ய வேண்டும்?

அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:-09.10.2012

விடையைப் கீழுள்ள கூப்பனில் எழுதி, தபாலட்டையில் அனுப்பி வைக்கவும். அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:

வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி,
பரிசுப் போட்டி இல : 335
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல - 167, யாழ்ப்பாணம்.

சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர்.

பரிசுப் போட்டி இல :- 333 இற்கான விடை :- கருவுற்ற குழந்தைக்குதண்டுவடத்தில் ஏற்படும்பாதிப்புக்களைத் தவிர்க்கும்.
பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி:- ம.அபர்ணா, கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

335

பெயர் : ..................
முகவரி : ..................
..................
தே.அ. அட்டை இல : ..................
விடை : ..................
..................
கையொப்பம் : ..................

## எது பெண் விடுதலை?

**ஆண்களிடம் சலனத்தை ஏற்படுத்தாமல் இருக்க பெண்கள் பர்தா அணிந்து இருப்பது அவசியம் என்று வலியுறுத்தப் படும் போதெல்லாம், இன்னும் எத்தனை காலத்திற்குத்தான் ஆண்கள் தம்மைத் திருத்திக் கொள்ளாமல் இப்படியே இருந்துக் கொண்டிருக்க, அதை மாற்ற கையாலாகாமல் நாம் இப்படி பெண்களுக்கு மட்டுமே கடிவாளங்கள் இட்டுக் கொண்டிருப்போம்?**

**பெண்ணியம்,** பெண் விடுதலை அல்லது பெண்கள் பெற வேண்டிய உரிமைகள் என்ற பெயரில் எவரொருவர் வலையுலகிலும், எழுத்துலகிலும் சில கருத்துக்களை முன் வைக்கும் போது நேரடியாகவும், மறைமுகமாகவும், சில கேள்விகள் எழுப்பப்பட்டுக்கொண்டுதான் இருக்கின்றன.

எது பெண்ணியம்? பெண்கள் பெற வேண்டிய உரிமைக-ளின் வரையறை என்ன? என்ன செய்தால்தான் அவர்களது இந்தக் கோரிக்கைகள் அடங்கும்? உண்மையிலேயே பெண்ணடிமைத் தனம் என்ற ஒன்று இருக்கிறதா? பெண்கள் அடிமைப் படுத்தப் பட்டதற்கு ஆண்கள்தான் காரணமா?



இவை ஒரு மாதிரிதான். இன்னும் இது போன்று எக்கச் சக்க கேள்விக் கணைகள் உடைப்பெடுத்த வாய்க்காலாய் பாய்ந்து வந்து விழுந்துக் கொண்டுதான் இருந்தன. இருக் கின்றன. இவை எல்லாவற்றுக்கும் ஏற்கனவே பதில் சொல்லி மாய்ந்து போனவர்களும் இருக்கத்தான் செய்கின்றனர்.

ஆனால் இங்கு நமது குடும்ப அமைப்புகளில் நாம் காலம் காலமாய் கேள்விகள் ஏதும் கேட்காமல் பின்பற்றிக் கொண்டு வரும் சில பல பழக்கங்களைப் பெண்ணியத்தினடிப் படையிலும், உடலியல் சார்ந்தும் கேள்விகளுக்குட்படுத்த வேண்டிய கட்டாயத்திலிருக்கின்றோம். ஏற்கெனவே எம்முன்னோர்களால் ஏற்படுத்தப்பட்ட திருமண அமைப்புகள் மற்றும் சடங்குகளின் நீட்சியாகக் கூட இதைக் கருதலாம்.

திருமணமானவுடன் பெண்களுக்கு மட்டும் அடையாளங்கள் வழங்குவது ஏன்? கழுத்தில் தாலி, நெற்றி வகிட்டில் குங்குமம், காலில் மெட்டி. கட்டியம் கட்டிக் கூறிட லாம்; இவையாவும் கல்யாணம் ஆன ஒரு குடும்பப் பெண்ணின் அடையாளங்கள் என்று. சரி இத்தகு அடையாளங்கள் காலம் காலமாய் பெண்க ளுக்கென்று, பெண்களுக்கு மட்டுமேயென்று ஏற்படுத்தி வைக்கப்பட்டு இருப்பதேன்?

(தொடரும்...)

மாறிவரும் கால மாற்றத்தில் அந்தரங்க உறவுகள் பற்றிய புரிதல் வக்கிரங்களைத் தடுக்கும் - ஒட்டி நின்று பார்த்து, ஆர்வ மிகுதியால் ஒழுக்கம் மீறாமல் தடுக்கும். ஆயினும் அதை வழங்குவதில் தினமுரசு என்றும் நாகரிகமான முறையையே கடைப்பிடிக்கும்.



## அந்தரங்கம்

# அந்த மூன்று நாட்கள்..... உறவுக்கு உகந்ததா?

**வேதனையை** ஆண்கள் புரிந்து கொள்வதில்லையென்று எத்தனையோ பேர்கள் குமுறுகிறார்கள். இது உண்மைதான். உடம்பு நன்றாக இருக்கும்போது வேலை வேலை என்று அலைந்துவிட்டு, மாதவிடாய் சமயத்தில் ரொம்ப தொந்தரவு பண்றாங்க! நாங்க பக்குவமாக எடுத்துச் சொன்னாலும் எரிஞ்சு விழறாங்க என்று பெரும்பாலான பெண்கள் புலம்புகிறார்கள்.

ஆண்கள் தங்களது ஆசையை தீர்த்துக் கொள்ளும் ஒரு வடிகாலாக பெண்களை உணர்ச்சியற்ற ஜடங்களாக நினைக்கிறார்கள். விலங்குகளைப் பொறுத்தவரை பெண் விலங்குகளுக்கு வரும் அந்த மாதிரியான சூழ்நிலையில் ஆண் மிருகங்கள் கிட்ட நெருங்குவதேயில்லை. அப்படியே நெருங்கினாலும் பெண் மிருகமானது ஒருவித எரிச்சலான கோபத்துடன் தனது எதிர்ப்பைக் காட்டும்.

அதேபோல் ஒரு பெண்ணால் தன் எதிர்ப்பை எந்தளவுக்கு காட்ட முடியும்? அப்படியே காட்டினாலும் வேண்டாப் பொண்டாட்டி நின்றாலும் குற்றம் நடந்தாலும் குற்றமென்று எதற்கெடுத்தாலும் பழிவாங்கும் மனப்பான்மையுடன் ஒரு எதிரியை விரட்டுவதைபோல் ஆண்கள் கோபத்தை காட்டுவார்கள். அது சில ஆண்களின் இயல்பு. அது தப்பு. ஆனால் தங்களது பிடிவாதத்தை காட்டி நேரடியான உறவை மேற்கொள்ளாமல், தங்களது ஆசையை தீர்த்து கொள்கிறார்கள். மாதவிடாய் சமயத்தில் உறவு வைத்துக் கொள்ளலாமா? என்று சிலருக்கு சந்தேகம் இருக்கின்றது. அதில் பெண்களுக்கு உண்மையாக விருப்பம் இருக்கிறதா? அல்லது கணவனின் நிர்ப்பந்தம் இருக்கிறதா? என்பதைத்தான் பார்க்கவேண்டும்.

கர்ப்பப்பையின் உட்புறச் சுவர்கள் பலவீனமாகவும் உதிரப் போக்காகவும் இருக்கும் பட்சத்தில் எளிதில் தொற்றுநோய்கள் தொற்றிக் கொள்ளும் அபாயம் இருக்கிறது. எனவே உடலுறவு வைத்துக்கொண்டால், அடுத்தடுத்து ஏற்படும் மாதவிடாய் சமயங்களில் அதிகமான இரத்தப்போக்கு, வலி, எரிச்சல் கர்ப்பப்பையில் கட்டி போன்ற அபாயங்கள் நிகழக்கூடும். பின்னர் நீங்கள் வைத்தியசாலைக்கு அலைந்தே களைத்துவிடுவீர்கள்.

இளம்பெண்கள் திருமணத்திற்கு முன்பு தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்வது எளிது. ஆனால் திருமணமான பின்புதான் திருமண வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்த நடைமுறை வாழ்க்கை, பதற்றம், கவலை, குடும்பப் பிரச்சினையோடு அந்த மூன்று நாட்களை கழிப்பது நரகவேதனை என்று கூறுகிறார்கள்.

அதேமாதிரி பலவீனமான இதயம், எதற்கெடுத்தாலும் கவலைப்பட்டு கொண்டிருப்பது, பதற்றம் இவற்றால் மாதவிடாய் நாட்கள் முன்னதாக வரும். சிலருக்கு உடலுறவு ஈடுபட்ட மறுநாளே உதிரப்போக்குடன் மூன்று நாட்கள் தொடங்கிவிடும்.

இதற்கு என்ன காரணம்? உடல் பலவீனம். கர்ப்பப்பை சுவர்கள் பலவீனமாக இருப்பது தான். அதை கவனிக்காமல் விட்டுவிடக்கூடாது. மகப்பேறு மருத்துவரிடம் மறைக்காமல் தனது பிரச்சினைகளை மனம்விட்டு சொல்லவேண்டும்.

**தாம்பத்திய** உறவிற்குப் பின்னர் பெண்களுக்கு தங்கள் கணவர்களின் மீது அதீத காதல் ஏற்படுகிறதாம். இதற்கு காரணம் ஒக்ஸிடோசின் ஹோர்மோன் செய்யும் மாயம்தான் என்கின்றனர் நிபுணர்கள்.

ஒக்ஸிடோசின் ஹோர்மோன் பொதுவாக சுகப்பிரசவ காலங்களிலும், தாம்பத்திய உறவின் போதும் அதிகமாக சுரக்குமாம்! அதுமட்டுமில்லாமல் 'தாம்பத்திய உறவுக்கு' அடிப்படையே இந்த ஒக்ஸிடோசின்தானாம்!

மனிதர்களின் பொதுவான உணர்வுகளான, 'அன்பு, நம்பிக்கை, பரிவு, தியாக



## கருச்சிதைவு சொல்லும் அறிகுறி

**கர்ப்பமாக** இருக்கும் பெண்களுக்கு, அவர்களுக்கு தெரியாமலேயே கருச்சிதைவு ஏற்பட்டுவிடும். இத்தகைய கருச்சிதைவு 20 வாரங்களில் நடைபெறும். ஆனால் ஒரு சிலருக்கு தொடர்ச்சியாக கருச்சிதைவு ஏற்படும். அதற்குக் காரணம், அவர்கள் பலவீனமாக இருப்பது, கவனக்குறைவுடன் நடந்து கொள்வது, கருமுட்டை சரியாக வளர்ச்சியடையாமல் இருப்பது போன்றவைகளே.

01. கர்ப்பமாக இருக்கும்போது அடிவயிற்றில் கடுமையான வலி ஏற்படும். அதிலும் ஒரு பக்கம் மட்டும் அதிகமான வலி ஏற்பட்டால், உடனே மருத்துவரை அணுகவேண்டும். அதுமட்டுமல்லாமல், சில நாட்கள் முதுகுவலியும் ஏற்படும். அதிலும் அந்த நேரத்தில் வரும் வயிற்றுவலி, மாதந்தோறும் ஏற்படும் மாதவிடாயின்போது ஏற்படும் வயிற்றுவலி போல் இருக்கும். இந்த நேரத்தில் உடனே மருத்துவரை அணுகிவிட வேண்டும்.

02. இரத்தப்போக்கு அதிகமாகவோ, குறைவாகவோ, விட்டுவிட்டோ, முதல் மூன்று மாதங்களில் ஏற்படுமாயின், அதுவும் கர்ப்பம் கலைந்துவிட்டது என்பதற்கான அறிகுறிகளே. இவ்வாறு அதிகளவு இரத்தப்போக்கு ஏற்படும்போது, உடனே மருத்துவரை அணுகி, கருப்பையை சுத்தம் செய்துவிட வேண்டும். இல்லையென்றால், கருப்பையில் இருந்து கருப்போல் உருவாகும் இரத்தக் கட்டிகள் முழுதும் வெளியேறாமல், கருப்பையில் நோயை ஏற்படுத்தி பாதிப்பை ஏற்படுத்தும். பின் அது தாயின் உடலுக்கே ஆபத்தை ஏற்படுத்தும், மேலும் மற்றொரு முறை கர்ப்பமாகும் வாய்ப்பும் இல்லாமல் போகும்.

03. கர்ப்பத்தின்போது பெண்கள் தங்கள் வயிற்றில் குழந்தை இருப்பதை ஓரளவு உணர முடியும். ஆனால் கர்ப்பம் கலைந்துவிட்டதென்றால், அந்த உணர்வு போய்விடுவதோடு, மார்பில் வலி மற்றும் அதிகப்படியான பசி போன்றவை ஏற்படும். அவை அனைத்து ஒவ்வொருவரின் உடல்நிலையைப் பொறுத்தது. ஆனால் இந்த மாதிரியான உணர்வு ஏற்பட்டாலும், உடனே மருத்துவரை அணுகவேண்டும்.

# உறவுக்குப் பின் பாசம் அதிகரிக்கிறதா?

உணர்வு', இப்படி பல வகையான உணர்வுகளின் ஒரு அழகான கலவைதான் காதல் என்கின்றனர் நிபுணர்கள். இந்த உணர்வுகளையும் கட்டுப்படுத்தக் கூடிய ஹோர்மோன்தான் இந்த ஒக்ஸிடோசின். எனவேதான் இதனை காதல் ஹோர்மோன் என்றும் அழைக்கின்றனர்.

மனிதர்களின் உடலில் எண்ணற்ற ஹோர்மோன்கள் சுரக்கின்றன. அதில் ஒக்ஸிடோசின் முக்கியத்துவம் வாய்ந்த ஹோர்மோனாக கருதப்படுகிறது. மூளையின் பின்புறத்தில் உள்ள பிட்யூட்டரி சுரப்பிதான் இந்த ஹோர்மோனை சுரக்கிறது. இதனால்தான் செக்ஸ் உணர்விற்கும் மூளைக்கும் தொடர்பு இருப்பதாக தெரிவிக்கின்றனர்.

இதனால்தான் தம்பதியர் ஒருவருக்கொருவர் அதிக ஈடுபாட்டுடன் செயற்பட முடிகிறது. ஒக்ஸிடோசின் ஹோர்மோன்தான் உச்சக்கட்டத்தின்போது அதிகமாக சுரக்கிறதாம். எனவேதான் தாம்பத்திய உறவு முடிந்த உடன் தங்கள் துணையின் மீது அதீத காதலும், அதிக பாசமும் ஏற்படுகிறது என்கின்றனர் உளவியலாளர்கள். தாம்பத்திய உறவுக்கு மட்டுமல்லாது கர்ப்பிணிகளின் சுகப்பிரசவத்திற்கும், ஒக்ஸிடோசின்தான் காரணமாகிறது. குழந்தைக்கும் தாய்க்கும் இடையேயான பிணைப்பை அதிகரிப்பதும் இந்த ஹோர்மோன்தான் என்கின்றனர் பிரபல மருத்துவர்கள்.



# காதலில் ஆறு வகை! அதில் நீங்கள் எந்த வகை?

காதல் இல்லாமல் இளமை இனிக்காது. காதலுடன் அவனும் அவளும் பார்க்கும் பார்வையில்தான் எத்தனை அர்த்தங்கள். பிடித்தமானவரை கவர்ந்து விடுவதற்காக இளமை செய்யும் லீலைகள்தான் எத்தனை எத்தனை? அப்படி, நீங்களும் காதல் வயப்பட்டிருக்கலாம். உங்கள் செயல்களை ஆய்வாளர்கள் பட்டியலிட்டு உங்கள் காதல் எத்தகையது என்பதை விவரிக்கிறார்கள் இங்கே.

### மன்மதக் காதல்

காதல் பாடல் பாடிக் கொண்டிருக்கிறீர்களா? அதிலும் உணர்ச்சி ஊட்டும் வரிகளை அழுத்தமாக உங்கள் உதடுகள் உச்சரிக்கிறதா? அப்படியெனில் உங்களுக்கு காதல் உணர்வுகள் அதிகம். காதல்வசப்பட்டிருக்கும் உங்களுக்குள் அதிக நெருக்கம் இருக்கும் என்று அர்த்தம். உங்கள் கட்டுக்கடங்காத விருப்பத்தை பூர்த்தி செய்வதற்காக காதலியின் விருப்பத்தை எதிர்பார்த்து பாடலாக பாடி அனுமதி கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள் என்று அர்த்தம்.

இந்த வகை ரொமான்டிக்கை ஆய்வாளர்கள் 'மன்மதன் காதல்' என்கிறார்கள். இந்த வகையில் உள்ள ஒரே ஒரு குறைபாடு காதலர் இருவரில் ஒருவரது ஆதிக்கம் அதிகமாக இருக்கும். ஆனாலும் உங்களுக்குள் நல்ல புரிதலும், மற்றவர் விருப்பத்துக்கு, அப்படியே இணங்கி விட்டுக்கொடுத்தலும் நிகழும். இப்படி தீவிர காதலுணர்வு கொண்ட காதலர்கள் மகிழ்ச்சியாகவும், கவர்ச்சியாகவும் தோன்றுவார்கள்.

### கவன ஈர்ப்பு காதல்

நீங்கள் காதலிக்கும் பெண்ணை தினமும் பார்க்கிறீர்கள். ஓரளவுதான் பழக்கம். ஆனால் நெருக்கமில்லை. மற்றவர்களோடு கூட்டத்தோடு கூட்டமாக மட்டுமே சந்திக்க முடிகிறது. அப்போது அவளை கவருவதற்காக, அவள் விரும்பும்படியாக அல்லது அவள் கேட்கும் படியாகப்பாடுவது, பேசுவது என்று கவனத்தை ஈர்க்க முயற்சி செய்கிறீர்களா? உங்கள் பேச்சை அவளும் ரசித்து புன்னகைக்கிறாள். ஆனால் பதில் எதுவும் சொல்வதில்லை. இப்படி இருக்கிறதா? உங்கள் நிலைமை. அதுதான் கவன ஈர்ப்புக் காதல்!

இது முழுமையான காதல் அல்ல. உங்களுக்குள் காதல் உணர்வுகள் நிரம்பி இருக்கிறது. ஆனால் அவளுக்குள் அதுபோன்ற உணர்வு நிறைய இருக்காது. நிலைமை இப்படி இருந்தாலும் இருவருமே ஒருவரையொருவர் ரசிப்பீர்கள். அவள் தனிமையில் சந்திப்பதையோ, நெருக்கத்தை அனுமதிப்பதையோ விரும்பமாட்டாள்.

### சேமிப்புக் காதல்

அவள் மீது அன்பு, அக்கறை, மரியாதை எல்லாமே இருக்கிறது. இளமையின் குறுகுறுப்பு இல்லாத பார்வையே பார்க்கிறீர்கள். பேசவும் செய்கிறீர்கள். அதில் உள்ளர்த்தமோ, இரகசியமோ எதுவுமில்லை. அவளும் அப்படியே பழகுகிறாள். இது எந்த வகை காதல்? என்றுதானே கேட்கிறீர்கள்.

இப்படிப்பட்ட காதலை, சேமிப்புக் காதல் என்று வகைப்படுத்துகிறார்கள். கிட்டத்தட்ட இது ஆழமான நட்புணர்வே. இருவரும் ஆழமான அன்பு வைத்திருப்பார்கள். காதல் உணர்வையும் புரிந்து வைத்திருப்பீர்கள். "காதலி கிடைத்தால் இவளைப்போல கிடைக்க வேண்டும்" என்று ஏங்கவும் செய்வீர்கள். ஆனால் அவளிடம் காதலைச் சொல்ல முடியாத, சொல்ல விரும்பாத அளவுக்கு நேசம் வைத்திருப்பீர்கள். நீங்கள் விரும்பினால் இந்த நட்பை வாழ்க்கை முழுவதும் நீடிக்கவும் செய்யலாம்.

### திட்டக்காதல்

'உங்களை பிடித்திருக்கிறது' என்று உங்கள் காதலி சொல்லிவிட்டாள். உங்களுக்கும் அவளைப் பிடித்திருக்கிறது. நன்றாகவே பேசிக் கொள்கிறீர்கள். ஆனால் எந்த விடயத்தை எடுத்துக்கொண்டாலும் எல்லை மீறல் இல்லவே இல்லை. காமத்தைப்பற்றியும் பேசுகிறீர்கள். ஆனால் விரசம் இல்லை. பிரச்சினையைப் பற்றி பேசுகிறீர்கள், உங்கள் குறையை அவளும், அவளது குறையை நீங்களும் சுட்டிக்காட்டி பேசிக் கொள்கிறீர்கள், முரண்பாடு ஏற்பட்டாலும் முட்டிக் கொள்வதில்லை! இதுதான 'திட்டக் காதல்'.

வாழ்வின் போக்கை புரிந்து கொண்டு ஒன்றுக்கு இரண்டு முறை சிந்தித்து முடிவெடுக்கவும், வாழவும் விரும்பும் ஜோடி நீங்கள். உங்கள் உணர்வுகளும் கூட எல்லைக்குட்பட்டதுதான். உங்கள் அன்பும் என்றும் நீடித்திருக்கும்.

### இனிப்புக் காதல்

அடிக்கடி தீண்டிக் கொண்டும், சீண்டிக் கொண்டும் இருப்பார்கள் சில காதலர்கள். பெரும்பாலும் சீண்டல்கள் எல்லைமீறும். இருந்தாலும் ஒருவரை ஒருவர் தடுப்பதில்லை. அந்த சீண்டலை அனுமதிக்கிறீர்கள். இப்படிப்பட்ட காதலராக நீங்கள் இருந்தால் இதனை இனிப்பு காதல் என்று வகைப்படுத்துகிறார்கள் ஆய்வாளர்கள். இவர்களுக்குள் ஆழமான காதல் உணர்வு இருக்கும். அதிக உணர்ச்சி கொண்டவராகவும், கொஞ்சம் கூச்சம் உடையவராகவும் இருப்பார்கள். இவர்கள் காதலில் காமம் கலந்திருப்பதால், ஒருவரின் தீண்டலை இன்னொருவர் தடுக்கமாட்டார். இவர்களுக்குள் தன்னைப்பற்றிய உயர்வான எண்ணமும், சில ஒளிவு மறைவு இரகசியங்களும் இருக்கும். ஆனால் காதலை கடைசிவரை விட்டுக்கொடுக்கமாட்டார்கள்.

### வெற்றிக் காதல்

காதலி போனில் பேசும்போது லேசாக இருமும் சத்தம் கேட்டால் போதும் உடனே அலுவலகத்தில் விடுமுறை எடுத்துவிட்டு காதலியை நேரில் பார்க்க கிளம்பிவிடுகிறீர்களா? அவள் விளையாட்டுக்காக, "உடனே பார்க்க வேண்டும் போலிருக்கிறது வருவாயா?" என்றால் என்ன வேலையிருந்தாலும் அலுவலகத்திற்கு லீவு போட்டுவிட்டு அவளிடம் போய் ஆஜராகிவிடுகிறீர்களா? இதுபோன்ற ஆழ்ந்த காதலை அவளும் உங்களிடம் வைத்திருக்கிறாளா?

உங்கள் காதல் மற்றவர்கள் ஆச்சரியப்படும் அளவுக்கு சக்தி வாய்ந்தது. இதனையே வெற்றிக் காதல் என்கிறார்கள், இப்படிப்பட்ட காதலர்கள் ஒருவருக்கொருவர் எதையும் விட்டுக்கொடுக்க தயாராக இருப்பார்கள். பிரச்சினை என்றால் தன்னையே கொடுக்கவும் தயாராவார்கள்.

சரி.. இதில் உங்கள் காதல் எந்த வகை என்று நீங்கள் மட்டும் தெரிந்து கொண்டால் போதும்!



# விளையாட்டு

ஜோசப் கிருஸ்ணா

# வசந்தம் திரும்புமா?

**தென்னாபிரிக்க** கிரிக்கெட் வீரர்களுக்கு S.M.S அனுப்பியது தொடர்பில் கெவின் பீட்டர்சன் மீது குறைகாணப்பட்டு, இங்கிலாந்துக்கு எதிரான இறுதி டெஸ்ட் போட்டியில் இருந்து நீக்கப்பட்டார். அதனைத் தொடர்ந்து ஒரு நாள் போட்டிகளிலும் இவர் இல்லை. தற்போது நடைபெற்றுக்கொண்டிக்கும் இருபதுக்கு இருபது உலகக் கிண்ண இங்கிலாந்து அணியிலும் இவர் இல்லை. வரப்போகும் இந்திய சுற்றுப் பயணத்திலும் இல்லை.


ஆனால் பிந்திவரும் செய்திகள்மீண்டும் இங்கிலாந்து அணியில் கெவின் பீட்டர்சனைக் காணலாம் என்பது போலத் தோன்றுகின்றது. தனது சர்வதேச கிரிக்கெட்டில் தொடர்ந்தும் விளையாட ஆர்வம் உண்டென்று கூறும் இவர் அன்ட்ரு எஸ்ரோஸ், தற்போதைய டெஸ்ட் அணித்தலைவர் அலிஸ்ரர்குக், பயிற்சியாளர் அன்டிபிளவர் மற்றும் உரியவர்களைச் சந்தித்துப் பேசி இருந்தாலும் இதுவரை சாதகமாக ஒன்றும் நடைபெற்றதாக இல்லை.

இதேவேளை அணித் தெரிவாளர் ஜெப் மிலர் கருத்துக் கூறும்போது, கெவின் பீட்டர்சன் உலகத்தின் அதிசிறந்த கிரிக்கெட் வீரர்களில் ஒருவர். ஆனால் அவரால் தீர்த்துக்கொள்ளப்பட வேண்டிய சர்ச்சைகள் உள்ளன. அதற்குமுன் அவரை அணிக்குள் தெரிவுசெய்து உள்ள பிரச்சினைகளை அதிகரித்துக்கொள்ள வேண்டாம் என்றே யோசிக்கின்றேன் என்று கூறியுள்ளார்.

மேலும் இங்கிலாந்துக் கிரிக்கெட்சபையும் மிகவும் பாதகமான செயல்களை இவர் செய்தவர் என்றோ, இவர் ஓரங்கட்டப்பட வேண்டியவர் என்றோ சிந்தித்ததாகவும் தெரியவில்லை.


இப்படிப் பார்க்கும்போது, கெவின் மீண்டும் அணிக்குள் வரும் சாத்தியங்கள் அதிகமாகவே தெரிகின்றன. அப்படி ஒரு மாற்றம் ஏற்படுமாயின் இந்தியாவுக்கு எதிரான இருபதுக்கு இருபது, மற்றும் ஒரு நாள் போட்டிகளில் இவ்வருட இறுதியில் இவரை இங்கிலாந்து அணியில் காணமுடியும்.

தற்போது தொலைக்காட்சியில் இருபதுக்கு இருபது உலகக்கிண்ணப் போட்டிகளில் நிபுணத்துவக் குழுவில் கலந்துகொள்ளும் இவர், விரைவில் மைதானத்தில் காணப்படுவதையே ரசிகர்கள் விரும்புகின்றனர்.



# யாரை எங்கே வைப்பது?


**பாகிஸ்தான்** அணியின் முன்னாள் வீரர்கள் மொஹமட் ஆமிர் மற்றும் சல்மான் பட் எதிர்கொண்ட அவஸ்தைகள், தண்டனைகள் எல்லோரும் அறிந்ததே. ஆனால் இப்போது இவர்கள் இருபதுக்கு இருபது உலகக் கிண்ணப் போட்டிகளில் தொலைக்காட்சி நிபுணத்துவ கருத்து வழங்குநர்களாகச் செயற்படுவது ரசிகர்களுக்குப் பெரும் அவஸ்தையாகப் போயுள்ளது. ஆரி மற்றும் எக்ஸ்பிரஸ் நியூஸ் அலைவரிசைகளில் இவர்கள் இந்திய பாகிஸ்தான் முன்னைய போட்டியின்போது நிபுணர்களாகக் கருத்துக் கூறியிருக்கிறார்கள். கடந்து போன உலகக் கிண்ணப் போட்டிகளின் போதுகூட சல்மான்பட் பாகிஸ்தான் செனல் பைவ் அலைவரிசையில் நிபுணராகத்தோன்றி சர்ச்சையைக் கிளப்பினார். இப்பொழுது மீண்டும் இருவரும் சர்ச்சையைக் கிளப்பி உள்ளனர். இவர்களின் இந்த வெளிப்பாடு அலைவரிசைகளுக்கு என்ன ஆதாயத்தைக் கொடுத்ததோ தெரியவில்லை.





ஆனால் இருவரையும் கேலிக்கிடமானவர்களாக ஆக்கியள்ளதே உண்மை. மிகப்பெரிய ஜாம்பவான்கள் நிபுணத்துவக் கருத்துக்கள் பரிமாறும் இடத்தில் இருவரும் சமதையாக முனைவது தம் அவமானங்களில் இருந்து தப்பித்துக் கொள்ளவா என்ற கருத்து எழுகிறது. என்னதான் இவர்கள் புதுப்புது வேஷம் காட்டினாலும், இவர்கள் கிரிக்கெட் உலகின் வில்லன்களாகத்தான் பார்க்கப்படுவார்கள். தம் கறையை மூடும்மேல் பூச்சுக்களாகத்தான் இது அமையும் என்பதற்கப்பால் முக்கியமான கேள்வி ஒன்று எழுகிறது. இருபதே வயதான அமீர் எத்தனை களங்கண்டார்? என்னென்ன அனுபவங்கள் பெற்றார்? இருபது வயதில் இவருக்கு நிபுணத்துவ கலந்துரையாடும் ஜாம்பவான் எனும் பதவிபெற என்ன தகுதி இருக்கிறது என்பதே அது.

# நீங்களா அவர்கீள்?







**இருபதுக்கு** இருபது 2012 உலகக் கிண்ணப் போட்டிகளில் முடிவடைந்த ஆப்கானிஸ்தான் இந்திய அணிகளுக்கு இடையிலான போட்டி பற்றி. ரசிகர்கள் நல்லதொரு தீர்மானத்தை எடுத்திருப்பார்கள். ஒரு வகையில் ஆப்கான் வீரர்கள் இந்திய சுப்பர் ஸ்ரார்களைப் பதை பதைக்க வைத்துவிட்டார்கள் என்பதே உண்மை. இத்தகைய பெரும் வீச்சு எப்படி வந்தது என்பதைக் கூறுகிறார். ஆப்கான் விக்கெட் கப்பாளர் மொஹமட் ஹெஜாட். தாங்கள் ஆட்டத்துக்கு முன்பதாக சுனில் கவாஸ்கார், மற்றும் அரவிந்த டீ சில்வாவுடன் சிறு கலந்துரையாடல் செய்ததாகவும் அந்த உரையாடல்களின் பிரதிபலிப்புத்தான் இந்தியாவை மைதானத்தில் ஆட்டங்காண வைத்ததென்றும் கூறியுள்ளார். குறிப்பாக தன்னம்பிக்கையை எவ்வாறு வளர்த்துக் கொள்வது என்பது பற்றி இருவருமே எடுத்துக் கூறினார்கள். அதோடு எங்கள் களத்தடுப்பின் அபிவிருத்தியின் அவசியம் பற்றியும் எடுத்துக் கூறினார்கள் என்கிறார்கள்.

உண்மையில் ஆப்கான் களத்தடுப்பு மட்டும் உச்சநிலையில் இருந்திருந்தால் பதைபதைத்த டோனியின் அணி, வியர்த்து விறுவிறுத்துப் நீர்த்துப் போயிருக்கும். ஒரு வரலாறே படைக்கப்பட்டிருக்கும். ஆப்கான் வீரர்களின் தவறுகள் இந்தியாவின் நிம்மதிப் பெருமூச்சாகிறது. எது எவ்வாறாயினும் அத்தனை ஓர்மமும் வீரமும் இங்கிலாந்து அணியின் முன் சுக்கல் சுக்கலாக நொருங்கிப் போனது உண்மைதான். அதற்கென்ன நிறையச் சர்வதேசப் போட்டிகளில் ஆடும் சந்தர்ப்பமும், ஜாம்பவான்களின் உறவுகளும் ஆப்கான் தேசத்தை வெகு வேகமாக உச்சத்துக்குக் கொண்டு செல்லும். அதற்கு இன்னொரு காரணமும் உண்டு. இடம் பெயர் முகாம்களில் எல்லாவற்றையும் இழந்து கிரிக்கெட்டை மட்டும் வரித்துக் கொண்டவர்கள் அல்லவா? எனவே துயரத்தையும் மீறிய வெற்றிகள் ஆப்கான் அணியை மென்மேலும் வளப்படுத்தும்.

# இழந்த வசந்தம்

**தற்போது** நடைபெற்றுக் கொண்டிருக்கும் இருபதுக்கு இருபது போட்டிகளைப் பார்வையிடும் ரசிகர்களின் எண்ணக்கை குறைவாக இருப்பதாக ஒரு கருத்து நிலவினாலும் போகப்போக ரசிகர்களின் எண்ணிக்கை அதிகமாகும் என்ற நம்பிக்கையும் இருக்கிறது. இது தொடர்பாக வேறு சில விடயங்கள் பற்றி உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளுக்கு இலங்கை சார்பாக உயர் பொறுப்பு வகித்த ஒருவர் தன் கருத்துக்களைக் கூறியிருக்கிறார். சுருக்கமாகச் சொல்வதாயின் நல்ல வருமானம் பெறும் வழிகளை இலங்கை கிரிக்கெட் சபை தவறவிட்டுவிட்டது என்பதே அந்தக் குற்றச்சாட்டு. அதாவது நலிந்து போயுள்ள இலங்கைக் கிரிக்கெட் சபையின் பொருளாதாரத்தை நிமிர்த்தக் கிடைத்த சந்தர்ப்பத்தை நழுவவிட்டுவிட்டோமோ என்று ஆதங்கப்படுகிறார் அவர். நுழைவுச்சீட்டுக்கள் விற்பனையை ஐ.சி.சி.யிடம் விட்டுவிடுவோம். வீரர்கள், மற்றும் தொடர்புகொண்டவர்கள் தங்கும் ஹோட்டல் தொடர்பான விடயங்களையும் ஐ.சி.சி.யிடம் விட்டுவிடுவோம். அவர்கள் அதை ஒரு தனியார், நிறுவனத்துக்குக் கையளித்துள்ளார்கள். இப்படியான செயற்பாடுகளால் குறைந்தது ஐந்து கோடி ரூபாய்களையாவது இழந்து விட்டோம் என்கிறார் அவர்.

> தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் இருபதுக்கு இருபது போட்டிகளைப் பார்வையிடும் ரசிகர்களின் எண்ணக்கை குறைவாக இருப்பதாக ஒரு கருத்து நிலவினாலும் போகப் போக ரசிகர்களின் எண்ணிக்கை அதிகமாகும் என்ற நம்பிக்கையும் இருக்கிறது.

நுழைவுச் சீட்டுக்கள் விற்பனை விடயத்தில் இறுதிப் போட்டிக்கான ரிக்கெட்டுக்களில் மட்டும் ரூபா நூறு மில்லியன் கூடுதல் இலாபம் சம்பாதிக்கலாம்.அதற்கு முன்னதாக நான்கு கால் இறுதிப் போட்டிகள் இறுதிப் போட்டிகள் இரண்டு அரையிறுதிப் போட்டிகள் இருக்கின்றன. இவை எல்லாவற்றையும் சேர்த்தால் 500 மில்லியன் ரூபா வரையில் கூடுதலாக இலாபம் பெற்றிருக்கலாம் என்பார், சரியான, பொறுப்பான நிர்வாகம் இன்மையே இவற்றுக்கெல்லாம் காரணம் என்கிறார். இவையெல்லாம் பெரிய இடத்து விடயங்கள். இவர்கள் ஒன்று சொன்னால், அவர்கள் இன்னொன்று சொல்வார்கள். இரண்டும் பாமரனுக்குச் சரியாகத் தோன்றும். ஆனாலும் எமது நாட்டில் நடைபெறும் ஒரு மாபெரும் நிகழ்ச்சியின் செயற்பாடுகளின் கடிவாளம் எம் கையில்அல்லவா இருந்திருக்க வேண்டும். கடிவாளத்தை மற்றவரிடம் கொடுத்துவிட்டு நாங்கள் சேணம் கட்டிய குதிரைகளாகிவிட்டோமென்பது உண்மையென்றால் அது வேதனையானதே.





மக்கள் புரட்சிக்கு ஏதாவது செய்தாக வேண்டும் என்ற எண்ணம் எழுந்தது. மூன்று மாத கியூபா அரசால் அங்கீகரிக்கப்படாத பயணத்துக்குப் பிறகு, 'சே' 1965 மார்ச்சில் கியூபா திரும்பினார். விமான நிலையத்தில் அவரை ஃபிடல் காஸ்ட்ரோ கைகுலுக்கி வரவேற்றார்.

வெளியேறுவதற்கு ஒரு தூண்டு கோலாகியது. மற்றுமொரு காரணம் குவேராவின் எண்ணமும் விருப்பமுமான மற்ற இலத்தீன் அமெரிக்க நாடுகளிலும் ஆபிரிக்காவிலும் புரட்சி வெடிக்கச் செய்யும் திட்டம். மற்றத் தலைவர்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து உள்நாட்டுப் பிரச்சினைகளைத் தீர்ப்பது அதைவிட முக்கியம் என்று போர்க்கொடி தூக்கினார்கள். 1964 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் குவேரா அமெரிக்கா, ஆபிரிக்கா, சீனா ஆகிய நாடுகளுக்கு மூன்று மாத அதிகார பூர்வமான சுற்றுப்பயணம் மேற்

துறப்பு பற்றி செய்தியை ஃபிடல் காஸ்ட்ரோ ஒக்டோபர் மாதம் கியூபன் மக்களுக்கு அறிவித்தார். காஸ்ட் ரோவை விட்டு பிரிவதற்கு முன் சே எழுதிய கடிதத்தை ஒரு பொதுக் கூட்டத்தில் காஸ்ட்ரோ படித்தார். அதில் என்னை கியூபாவின் புரட்சியுடன் தொடர்புபடுத்திய கடமை முடிந்துவிட்டது. அந்தக் கடமையை நான் செவ்வனே முடித்து விட்டேன். உங்களிடமும், மற்ற போராளிகளிடமும், என்னுடைய மக்கள் ஆகிவிட்ட கியூபன் மக்களிடமும் நான் விடை பெறுகிறேன் என்று எழுதியிருந்தார்.

அங்கே இந்த அளப்பரிய மாவீரனின் தோல்விக்கான வரலாறு எழுதப்பட தயாராகி கொண்டிருக்கின்றது இதை அவர் அறிந்திருக்க வாய்ப்பில்லை. 1966ஆம் ஆண்டு மார்ச் மாதம் கொங்கோவை விட்டு வெளியேறும் சூழ்நிலை ஏற்பட்டது. மார்ச் முதல் ஜூன் வரையிலான கால கட்டத்தில் உருகுவே, பிரேஸில், பராகுவே, ஆர்ஜென்ரீனா, பொலிவியா நாடுகளில் பயணம் செய்தவர். 1966ஆம் ஆண்டின் கடைசிகளில் கொரில்லாப் போரை வழிநடத்தும் பொருட்டு உருகுவே நாட்டு போலிபாஸ்போர்ட்டுடன் பொலிவியா நாட்டுக்குள் நுழைந்தார். பல காரணங்களால் பொலிவியா நாட்டைத் தேர்ந்தெடுத்தார் என்று நம்பப்படுகிறது. அமெரிக்கா பொலிவியாவை விட கரிப்பியன் தீவு நாடுகளே தங்கள் பாதுகாப்பிற்கு பங்கம் விளைவிக்கக்கூடும் என்று நம்பியதும், அதனால் அமெரிக்காவின் பார்வை பொலிவியா

# மாமனிதன் சே குவேரா

அமெரிக்கா, கியூபாவின் மீது விதித்த பொருளாதாரத் தடை தான் அவரது இந்தக் கட்டற்ற கோபத்துக்குக் காரணம். அமெரிக்காவின் சி.பி.என். தொலைக் காட்சி, ஒரு நேர்காணலுக்காக சேகுவராவை நியூயோர்க்குக்கு அழைத்தது. "அமெரிக்கா ஒரு கழுதைப்புலி. அதன் ஏகாதிபத்தியத்தை நான் வேரறுப்பேன்" என அமெரிக்க மண்ணிலேயே துணிச்சலாகப் பேட்டி கொடுத்தார் 'சே'. சென்ற இடங்களிலெல்லாம் அமெரிக்காவைக் கடுமையாகத் தாக்கிப் பேசினார்.

இந்நிலையில் கொங்கோவின் அரசியல் சூழல், அவரை மிகவும் பாதித்தது. மக்கள் புரட்சிக்கு ஏதாவது செய்தாக வேண்டும் என்ற எண்ணம் எழுந்தது. மூன்றுமாத கியூபா அரசால் அங்கீகரிக்கப்படாத பயணத்துக்குப் பிறகு, 'சே' 1965 மார்ச்சில் கியூபா திரும்பினார். விமான நிலையத்தில் அவரை ஃபிடல் காஸ்ட்ரோ கைகுலுக்கி வரவேற்றார். அதுதான் வெளியுலகுக்கு 'சே' நேரடியாக வெளிப்பட்ட கடைசி நிகழ்வு. அதன் பிறகு 'சே'வைக் காணவில்லை. எங்கே போனார் என யாருக்கும் தெரியவில்லை.

அன்றிரவு ஒரு சந்திப்பில், காஸ்ட்ரோவின் தம்பிரால் காஸ்ட்ரோ 'சே'வை சுடுசொல்லால் அழைத்ததாகவும், அது 'சே'வின் மனதை மிகவும் காயப்படுத்தியதாகவும், அதுதான் 'சே' கியூபாவை விட்டு வெளியே செல்லக் காரணம் என்றும் சொல்லப்படுவதுண்டு.

அது மட்டுமன்றி வேறு சில காரணங்களும் சொல்லப்படுகின்றது. அவை 1964ஆம் ஆண்டு ஜூலை மாதம் இரு அமைச்சர்களின் நியமன சம்பவம் பொருளாதாரக் கொள்கைகளில் அமைச்சர்களிடையே இருந்த கருத்து வேறுபாடு பொதுமக்களுக்கு வெளிப்படையாகத் தெரிய ஒரு வாய்ப்பாகியது. அவ்விரு நியமனங்களுமே குவேரா



கொண்டு திரும்பியபோது, தனது அதிகாரப்பிடி தளர்ந்து போனதை குவேரா அறிந்துகொண்டார். அதனால் கியூபாவைவிட்டு விலகி மற்ற நாடுகளில் புரட்சி ஓங்குவதற்கு உதவி புரியும் பொருட்டு அங்கிருந்து கிளம்பினார்

'சே எங்கே' பத்திரிகைகள் அலறின. அனைவரது பார்வையும் காஸ்ட்ரோ பக்கம் திரும்பியது. 'சே'வை சுட்டுக்கொன்றுவிட்டார் காஸ்ட்ரோ எனுமளவு கோபம் கிளம்பியது. காஸ்ட்ரோவின் மௌனம் சந்தேகத்தை மேலும் அதிகப்படுத்தியது. 'சே எங்கே' எனக் கேட்ட யாருக்கும் காஸ்ட்ரோவால் வெளிப்படையாக பதில் சொல்ல முடியவில்லை. காரணம், சி.ஐ.ஏ சே ரால் காஸ்ட்ரோ மற்றும் பிடல் உண்மையில் 'சே' ஃபிடல் காஸ்ட்ரோவின் முன்னிலையில் தனது எல்லா பதவிகளையும் கியூபா நாட்டு குடியுரி மையையும் துறந்தார். அந்த வருட ஜூலை மாதம் கெய்ரோ வழியாக கொங்கோவிற்கு இரகசியமாகப் பயணித்தார். அவரது பதவி மற்றும் கியூபாவின் குடியுரிமை

மீது அவ்வளவு தீர்க்கமாக விழவில்லை என்பதும் ஒருகாரணம். இரண்டாவதாக பொலிவியாவின் ஏழ்மையும் அங்கு நிலவிய சமூக மற்றும் பொருளாதார நிலைளும் எந்நேரமும் அங்கு புரட்சிவெடிக்க சாதகமாக இருந்தது. மூன்றாவதாக பொலிவியா ஐந்து பிறநாடுகளுடன் தன் எல்லையை பகிர்ந்து கொண்டிருந்தது. பொலிவியாவில் கொரில்லாப் போராட்டம் வெற்றி பெறுமேயானால் அதை மற்ற ஐந்து நாடுகளுக்கும் பரவச் செய்து விடலாம் என்று குவேரா நினைத்தது. (ஆனால் ஃபிடெல் காஸ்ட்ரோ தன்னை வஞ்சித்து விட்டதாக சே குவேரா மிகவும் வருந்தியதாக 1998ஆம் ஆண்டு ஓய்வுபெற்ற பொலிவியஇராணுவ அதிகாரி ஒருவர் ஒரு பேட்டியில் கூறியுள்ளார்). பொலிவியாவில் நடந்த கொரில்லாப் புரட்சியின்போது பொலிவியக் காடுகளில் பதுங்கி இருந்தார்.

(தொடரும்..)

## முரசு குறுக்கெழுத்துப் போட்டி

**வாசக நெஞ்சங்களே!**
**உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.**

### குறுக்கெழுத்துப் போட்டி - 489

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | | 9 | | 11 | 12 |
| 13 | 14 | 15 | | 17 | 18 |
| | 20 | | 22 | 23 | |
| 25 | | 27 | 28 | | 30 |
| 31 | 32 | 33 | 34 | | 36 |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி 09.10.2012 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.
அனுப்ப வேண்டிய முகவரி: குறுக்கெழுத்துப் போட்டி இல - 489
தினமுரசு வாரமலர்,
- த.பெ.இல. :-167, யாழ்ப்பாணம்
தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.
சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

### குறுக்கெழுத்துப் போட்டி 487- விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 க | 2 லா | 3 பி | ■ | 5 கா | 6 சி |
| 7 ச | ■ | 9 ர | 10 ச | 11 க் | 12 கு |
| 13 ம் | ■ | 15 டை | 16 ட் | 17 டா | 18 னி |
| ■ | 20 மா | 21 ண் | 22 ட | ■ | ■ |
| 25 தி | 26 து | ■ | 28 ம் | 29 க | 30 ஏ |
| 31 ப | 32 லி | 33 ல் | ■ | ■ | 36 ர் |

**மேலிருந்து கீழ்**

01. கண் இமையில்லாத உயிரினம்.
03. நிறுத்தல் அலகு ஒன்று.
05. எழுதுதல் அல்லது கணித்தல்.
06. பகல் அல்லது வானம்.
14. அழகுள்ள பெண்களை இவர் மாதிரி என்பர்.
22. கொலம்பஸ் கண்டுபிடித்த 'ஜீவானா' என்ற தீவு தற்பொழுது இப்படி அழைக்கப்படுகிறது. (திரும்பியுள்ளது)
25. இந்த மரங்களின் இலைகளில் இருந்துதான் டேர்பன்டைன் தைலம் தயாரிக்கப்படுகிறது.
27. அழகுள்ளவன். (திரும்பியுள்ளது)
30. இந்த மரத்தில் இருந்துபெறப்படும் திரவத்தில் இருந்துதான் கல்லாக்கரம் தயாரிக்கப்படுகிறது.

**இடமிருந்து வலம்**

01. செல்வம் உடையவள்.
11. எல்லை அல்லது அளவு அல்லது (திரும்பியுள்ளது)
13. ஊர் அல்லது நகரம்
17. அவர்களது.
22 மரத்தில் இருந்து கசியும் வெண்மையான நீர்மம்.
27. எதிர்பார் அல்லது அனுமானி (திரும்பியுள்ளது)
31. சீதையின் இரட்டைப் பிள்ளைகள் லவன், குசன் இருவருக்கும் போர் முறைகளை பயிற்றுவித்தவர். (குழம்பியுள்ளது)

**குறுக்கெழுத்துப் போட்டி இல.487 இற்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

**எம்.எச்.எம்.இஸ்மாயில், கொடகே மாவத்தை, அனுராதபுரம்.**

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

01. த.யோகராசா,சரசாலை தெற்கு, சாவகச்சேரி.
02. அ.சந்தியாகோ, அம்பிட்டியா றோட், தென்னக்கும்புர.
03. து.யாழினி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
04. எப். ஷபா, தர்ஹாநகர்.
05. எம்.எம்.றியாஸ், அக்கரைப்பற்று, மட்டக்களப்பு.
06. ம.சங்கவி, கோவில் வீதி, திருகோணமலை.
07. க.செல்வராணி, மருதானை, கொழும்பு -10 .
08. எஸ்.மாதுர்ஷா, ஹட்டன்.
09. கு.வைரவி, மாசார், பளை.
10. க.கீர்த்தனா, கோவில் வீதி, கொழும்பு-15.




# வறுமையின் நிஜம்

திருமலையூர் பரணீ

பௌர்ணமி நிலவு பவனிவர நட்சத்திரக் கூட்டங்கள் சூழ்ந்திருக்க மேகங்கள் வெண்முகில் திரள பௌர்ணமி நிலவு அழகாய் ஒளிபரப்பிலிருந்தது. விடிந்தால் தனலட்சுமியக்காவின் காணிக்குள்ளே கச்சான் பிடுங்க கதைத்திருந்தேன். தெய்வானை வேளைக்கு வந்திடுங்கோ என, வள்ளியையும், கூட்டி வந்தாப்போதும் என தனலட்சுமி அக்கா எனக்குச் சொல்லியிருந்தது இப்போது நினைவுக்கு வந்தது.



மௌனமாக என் இதயத்துள்ளே பெருமூச்சுக்காற்று எழுந்து தணிந்தது. தங்கச்சி இந்த வருடம் க.பொ.த சாதாரணப் பரீட்சைக்குத் தோற்றவிருந்தார். ரியூசன் செலவு, சாப்பாட்டுச் செலவு, உடுப்புச்செலவு எனப் பட்டியல் நீளும் துயரம். நாளை விடிந்தால், அவரின்ரை ஐந்தாவது நினைவு தினம். கண்களில் கண்ணீர் என் விழிகளில்.

எங்களை கஷ்டப்படாமல் எந்தக் குறையுமில்லாமல் பார்த்தவர். ஊருக்குள்ள செல்வமண்ணை செல்வமண்ணை எண்டு மரியாதைக்குரியவராக இருந்தவர். எங்களத் தவிக்கவிட்டு மாறாத வடுவைத் தந்துவிட்டுப் போட்டார் எங்கட அப்பா. தோட்டம்செய்து வளர்ந்தவர் அம்மா, சும்மாயிருக்காது ஏதாவது வேலை பழகியிருக்கவேணும் பொம்பிளையள் எண்டு வீட்டில இருக்கிற நேரத்திலை காணிக்கை அப்பா கச்சான் போடுவார். நானும் அம்மாவும் பத்மாவும் என் தங்கச்சியும் கச்சான் பிடுங்குவம். பிறகு மிளகாய் பழம் பிடுங்குவம். மிளகாய் கத்தரிக்காய், மரவள்ளியெண்டு பசுஞ்சோலையாயிருக்கும் எங்களது வீட்டுக்காணி. எங்களுக்கு அப்பா ஆயிரம் ரூபா தருவார். அவ்வளவு சந்தோசம். அந்த வாழ்க்கையை நினைக்கேக்குள்ள பத்துமா கலியாணம் முடிச்சு சந்தோசமா வாழேக்குள்ள பிள்ளை தப்பிற்றுது. பிரசவ நேரம் பத்துமா கண்ணை மூடிச்சுது ஒரு மாதத்திலை... காச்சல் வந்து பிள்ளையும் இறந்துபோச்சு... என்ன செய்வம் மனிதன்ரை வாழ்க்கை. பெருமூச்சு எழுந்தது. சோகமுடன் ராணியக்கர் ராணி அக்கா என்று குரல் கேட்டது. நாயும் குரைத்தது. என் சிந்தனை தடைப்பட யாரது கையில் இருந்த டோச்சை எடுத்தேன். பிள்ளை ரூபினி, பாரம்மா. அம்மா வாற கிழமை சோதினை படிக்கவேணும் சிணுங்கினாள். சரி நான் பார்க்கிறன் லொள்... லொள் குட்டியன் குரைத்தது. அடிக் இஞ்சால வா... குட்டியன். அது நானக்கா வள்ளி என்ன மாதிரி நாளைக்கி வேலை.

ராணியக்கா நாளைக்கு வேலை தானே என்னைப் பார்த்துக்கேட்டாள். ஓம் வள்ளி. லட்சுமியக்கா உன்னையும் கூட்டி வரச்சொன்னவ. ஐஞ்சு நாள் வேலை செய்த சம்பளக்காசு மூவாயிரம் அக்கா தரவேணும். பிறகு தரலாமெண்டவா. வள்ளி சொன்னாள். எனக்கும் தரவேணும் நாலாயிரம். இந்தா உனக்கு இரண்டாயிரம் ரூபா கூலிவேலை செய்த காசு எண்டு குடுத்துவிடச் சொன்னவா. இரு வாறன் எடுத்துக்கொண்டு வள்ளி தேத்தண்ணீர் குடிச்சிட்டு போகலாம் வீட்டுக்குள் போனாள் வள்ளி காசு எடுப்பதற்கு.

அப்ப நாளைக்கி வேலை செய்தா ராணியக்கா கடன் காசு நிக்குது. குடுக்கலாம்... இப்ப நாப்பதுக்கு மேல நிக்கிது. வேலி அடைச்சது கலாதான். சங்கிலி அடைவு வைச்சிட்டு தந்தவா வாறமாதம் குடுக்கவேணும். ராணியக்கா இந்தா இதில இரண்டாயிரம் இருக்கு ராணியக்கா பதினைய்யாரம் வட்டியோட பதினைஞ்சு பதினாறு வருமக்கா. என்ன செய்யிறது. ராணியக்கா தம்பியும் இந்த வருசம் ஏ.எல் எடுக்கிறான். வள்ளி சொல்ல தேநீரை நீட்டினேன். எல்லாருக்கும் கஷ்ரம்தான் நாளைக்கி இவரின்ரை ஐந்தாவது வருட துவசம். கோயிலுக்குப் போகவேணும் வேலை கிடக்கு வள்ளி நீ போ. நான் வரமாட்டன் லட்சுமியக்காட்டச் சொன்னனான். மதியம் சாப்பாடு கொண்டு வருவன் அக்கா. பாவம் நீயக்கா அண்ணையிருந்தா உனக்கு இந்த நிலை வந்திருக்காது வள்ளி சொன்னாள். வள்ளி ஏதோ, கச்சான் புடுங்கப் பழகினதும் தோட்ட வேலை செய்ததிலையும் அனுபவம், அதால குடும்பச் சீவியம் போகுது. வாழ்வாதாரமுமில்லை, மண்ணாங் கட்டியுமில்லை. கொஞ்சக்கோழியத் தந்திட்டு போட்டாங்கள் கோழி முழுக்கச் செத்துப்போட்டுது.

இவரிருந்தா எனக்கென்ன குறை. தம்பியும் இல்லை. இவருமில்லை நாட்டுப் பிரச்சினையால... அதற்கு மேல் கண்ணீர் வந்து வார்த்தையை நிறுத்தியது. சரியக்கா போட்டு வாறன் என்ரை மனிசன் குடிச்சுக்குடிச்சு செத்துப் போச்சு. தம்பிதான் படிக்கிறான் படிப்பிச்சு எடுத்திட்டாபோதும்.

பிள்ளை மாலினியத்தானே காணா-மல் போனார் பட்டியலில தேடுறன். ஐஞ்சு வருசமா பிள்ளை எங்கையோ கவலை-யோடு சொன்னாள் வழிந்த கண்ணீரைத் துடைத்தபடி.

அம்மா... இவ்வளவு நேரம் என்ன செய்யிறீயள் கதை கண்ட இடம் கைலாயம். சின்னண்ணை வந்து நிற்கிறார். ஆயிரம் ரூபா வேண்டின நீங்களாம். ஓமடா இப்பதான் ராணியக்க காசு தந்தவா. விடியக் கொண்டந்து தரட்டாம் வேண்டினது போல குடுக்கத் தெரியவேணுமாம் எண்டு என்னோடு சண்டைக்கு வாறார் அம்மா. அவருக்கு மனிசரோட கதைக்கத் தெரியாது வடியனுக்குத்தான் கட்டிக் குடிக்கிற காசு சரி போவம். வள்ளி புறப்பட்டாள்.

****

தர்சன் ரியூட்ஸ் கொப்பி தந்ததுக்கு தாங்ஸ்.. இந்தாரும் ரூபி வெளியில் வந்தாள். புன்னகையோடு கொப்பியை நீட்ட முகமலர்வோடு வாங்கினான் விநோதன். அண்டைக்கி வாணி விழாவில பாடினீர் ரூபி சுப்பர் வொயிஸ். ரூபினி வெட்கத்தில் தலைகுனிந்தாள். வெள்ளைப் பேப்பரை கையில கொடுக்க. கண் ஜாடை காட்டினாள் ரூபி. ராணியக்காவும் வள்ளியும் கதைத்தபடி வீதிக்குப்போக தம்பி வா நேரம் போட்டுது. விடிய ரியூசன் தம்பி.

வள்ளியக்கா கூப்பிட்ட, பிறகு பாரும் இரகசியக் குரலில் சொல்லியவனாய் தர்சன் சைக்கிளை எடுத்தான் ரூபினியைப் பார்த்துக் கண்ணடித்தான். நாணத்தில் ரூபி வீட்டுக்குள் ஓடினாள்... எப்போதக்கா எங்கட வறுமை தீரப் போகுது. சாமான் விலை ஏத்தம் பஸ் கட்டணம் அதிகரிப்பு. மா.விலை கூடிப்போச்சு வள்ளி புலம்பியபடி சென்றாள். தர்சன் –ரூபினியின் காதல் மெல்ல களை கட்டத்தொடங்கியது.

பால் நிலவின் ஒளி, ராணியக்காவின் தற்காலிக இல்லமெங்கும் ஒளியூட்டிக் கொண்டிருந்தது. பிள்ளை சாப்பிடடி... மேசையில சாப்பாடு போட்டு வைச்சனான் என்று உள்ளே சென்றாள். குப்பி விளக்கு எரிந்து கொண்டிருந்தது மேசையில் நித்திரையாகி கிடந்தாள். பாவம் சோதினை நெருக்குது. படிச்சால் தானே ஒரு நல்ல வேலைசெய்து தன்ர காலத்தை ஓட்டலாம். இவர் பாங்கில ரூபினிக்குப் போட்ட காசு இரண்டு வருடம்.

எனது சிந்தனைகள் விரிந்தது. பிள்ளை எனக் கூப்பிட்டபோது திருக்குற்றெழுந்தாள். கையில் இருந்த கடிதத்தை புத்தகத் தாழ்களுக்குள் மறைத்துவிட்டுப் பரபரப்புடன். அம்மா சாப்பிட்டால் நித்திரை வருது சிணுங்கினாள். பாயை நான் விரித்தேன் படம்மா, பொத்தன விழுந்தாள் ரூபி. மேசையில் இருந்த கதிரைமேல் அமர்ந்தேன் ரூபினி நித்திரையானாள். தமிழ் புத்தகத்தைப் புரட்டினேன். அன்பைப் பற்றி திருக்குறளில், "அன்பிற்கு முண்டோ அடைக்குந் தாழ்.." என எழுதப்பட்டிருந்தது. அடுத்த பக்கத்தைப் புரட்டினேன்... என் வழிகள் ஆச்சரியத்தில் விரிந்தது. அன்பின் ரூபி அன்புடன் தர்சன் என எழுதப்பட்டிருந்தது. கடிதத்தில் பெருமூச்சோடு நானும் பாயில் ரூபியோடு சரிந்தேன்.

# கண்ணாடிச் சுவர்கள்

உதயசங்கர்

**கண்ணாடி** மாட்டியதும் முதலில் ஒரு மாதிரி இருந்தது. தொடர்ந்து பத்து நிமிடங்கள் போட்டிருந்தால் நெற்றிப் பொட்டுகள் வலிக்க ஆரம்பித்தன. மூக்கில் கண்ணாடி அமர்ந்திருந்த இடம் உறுத்தியது. கண்களை ஏதோ ஒரு கூண்டிற்குள் போட்டு அடைத்த மாதிரி. கண்கள் அதிலிருந்து விடுதலையடையப் போராடுவது போல இமைகள் படபடத்தன. கண்களோடு நெருக்கமாகக் கண்ணாடி இருந்ததால் இமைகளின் மீது உரசியது. அந்நியப் பொருள் மீது உராய்ந்த இமைகள் அலறின. அவைகளின் அலறல் தாளாமல் கண்களிலிருநது கண்ணீர் வழிந்தது. துடைக்கத் துடைக்க வழிந்து கொண்டேயிருந்தது. அவனாலும் பொறுக்க முடியவில்லை. உடம்பின் அசைவுகளே இந்தக் கண்ணாடியால் கட்டுப்பட்டதுபோல ஆகிவிட்டது. சுதந்திரமாய் கைகளால் முகத்தைத் துடைக்கவோ, கண்களைத் துடைக்கவோ, மூக்கைச் சிந்தவோ, தலையை உதறவோ, முடியவில்லை. கண்ணாடியின் இருப்பு மற்ற எல்லாவற்றையும் மாற்றிக் கொண்டிருந்தது.


குழந்தைகள் ஒரே குரலில், அவனிடம் "அப்பா... கண்ணாடி உங்களுக்கு நல்லாவே இல்லப்பா... சர்க்கஸ் கோமாளி மாதிரி இருக்கு..." என்று ஆரவாரம் செய்தனர். அந்த ஆரவாரத்தின் ஆழத்தில், அவன் கண்ணாடியைக் கழட்டிப் புதைத்துவிடலாம் என்று நினைத்தான். ஆனால் அவ்வளவு எளிதாகக் கண்ணாடியை கழட்டி எறியமுடியாதே.

அவன்கூட இந்தக் கண்ணாடியினால் தன் வாழ்க்கையை மாறிப்போகும் என்றா நினைத்தான். முதலில் கண்வலி கட்டியம் கூறியது. புத்தகமோ, செய்தித்தாளோ வாசிக்க முடியவில்லை. புத்தகத்தை விரித்தால் எழுத்துகள் அலையலையாய் வந்து அவன் மீது மோதின. அவன் விழுந்து எழுந்து நீந்திப் பார்த்தான். கண்கள் சோர்வுறும் ஒரு கணத்தில் திடீரென ஒரு பேரலை புறப்பட்டு வந்து அவனை அடித்து வீழ்த்தி கரையில் கொண்டு போட்டது. அருகில், கொஞ்ச தூரத்தில், ரொம்ப தூரத்தில் என்று புத்தகத்திற்கும் அவனுக்குமான இடைவெளியை அதிகமாக்கி சிரமத்துடன் படகோட்டிப் பார்த்தான். படகு கவிழ்ந்து. நீரின் ஆழத்திற்குப் போய்க் கொண்டேயிருந்தான். கண்களைத் திறந்தால் இருட்டு. மரண இருட்டு. கடலின் இரைச்சல் மட்டும் கேட்டுக் கொண்டேயிருக்கிறது. எழுத்துகள் ஒலிகளாய் மாறிப் புயல்காற்றாய் சுழன்றடித்தது. அவனால் தாங்க முடியவில்லை. இனியும் சும்மா இருந்தால் அவன் வாழ்க்கை அவ்வளவுதான்.

அவன் கண் மருத்துவரைப் போய்ப் பார்த்தான். அவர் ஏதேதோ பரிசோதனைகளுக்குப் பின் ஒரு சிறிய அறுவைச் சிகிச்சை செய்தார். பின்னர் இந்தக் கண்ணாடியை மாட்டிவிட்டார். வெளிநாட்டிலிருந்து இந்த மாதிரி நோய்க்கென்றே பிரத்தியேகமாய் தயாரிக்கப்பட்டது என்றும் சொன்னார். தோள்வரை தொங்கும் தலைமுடியும், குறுந்தாடியும் பச்சை நிறக் கண்களும் கொண்ட அவர், அவனுக்கு இயேசுவைப் போல காட்சியளித்தார். அவன் "ஓ... ஜீசஸ்..." என்று முணுமுணுத்தான். அவர் அவன் முகத்தைப்பார்த்து,"கவலைப்படாதீங்க.. எல்லோருக்கும் நாற்பது வயசில வரக்கூடிய நோய்தான்...

எல்லாம் குழம்பித் தெரியும்... எது உண்மை எது மாயை என்று புரியாது... எங்கிட்டே வந்திட்டீங்கல்ல... இனிமே கவலையே வேண்டாம்..." என்று ஆறுதல் சொன்னார். ஆனால் அதில் ஏதோ ஒரு சூது உட்கார்ந்து கொண்டு அவனைப் பார்த்துக் கள்ளச் சிரிப்பு சிரித்தது.

அவ்வப்போது கண்ணாடியைக் கழட்டிவிடலாம் என்ற நினைப்பு முண்டியடித்தது.



தேவைப்பட்டால் போட்டுக்கொள்ளலாம் என்று கூட நினைத்தான். ஆனால் தேவைப் படும் நேரங்களும், தேவைப்படாத நேரங்களும் தமக் குள் மாறிக் கலந்து செம்புலப் பெயல் நீராகிவிட்டது. ஆரம்பத்தில் எந்தப் பிரச்சினை களும் இல்லையென்று தான் எல்லோரும் நினைத்தார்கள். ஏன் அவனும் கூடத்தான். ஆனால் அந்த நினைப்பின் வழியே ஊர்ந்த எட்டுக்கால் பூச்சியொன்று அவன் முகத்தில் வலை பின்னிவிட்டது. அந்த வலைக்குள் புதியபுதிய காட்சிகளும், படிமங்களும் வந்து வீழ்ந்தன.

குளிக்கும்போதும், முகம் கழுவும் போதும், சாப்பிடும்போதும், உறங்கும்போதும் கழட்டாத கண்ணாடி அவன் முகத்துடன ஒட்டி, உடலின் மற்றொரு உறுப்பாய் மாறத் தொடங்கிவிட்டது. அதற்கு உள்ளேயும் இரத்த ஓட்டமும், நாடித்துடிப்பும் கேட்டது. செல்கள் பிறந்தன. வளர்ந்தன. இறந்தன. அவனுக்கு இப்போது கொஞ்சங்கூட தொந்தரவேயில்லை. ஆனால் என்ன? கண்ணாடியுடன் கூடிய அவன் முகம் கற்சிலை போல ஆகிவிட்டது.

நாளாக. நாளாக கண்ணாடிக்குள்ளும் முதுமையின் வரிகள் ஓடித்திரிந்தன. கொஞ்சம் கொஞ்சமாக. நரை திரை மூப்பு கவிய கண்ணாடியின் தெளிவு குறைந்தது. காட்சிகள் ஒன்றின் மேல் ஒன்று ஏறி நின்று கெக்கலி கொட்டின. வண்ணங்கள் குழம்பின. வாழ்க்கையே வெறுத்துப்போனது. விரக்தி தன் அஸ்திவாரக் குழியைத் தோண்டிக் கொண்டிருந்தது. அவனுக்குப் புரியவில்லை.

அடிக்கடி இப்போது முகத்தோடு ஒட்டிய கண்ணாடியைத் துடைத்துப் பார்த்தான். ஒன்றும் அற்புதம் நிகழவில்லை. மீண்டும் கண்மருத்துவரைத் தேடிப்போனான். பழைய மருத்துவர் இல்லை. இப்போது புதியவர் இருந்தார். அவன் அவனுடைய பிரச்சினையைச் சொன்னான்.

எல்லாவற்றையும் கேட்டபிறகு. "பிரச்னை கண்ணாடியில் இல்லை. உங்களிடம் தான் இருக்கிறது. கண்களை கண்ணாடியிடம் ஒப்படைத்து விட்டதுதான் காரணம். கண்களுக்குத்தான் கண்ணாடி. கண்ணாடிக்கு அல்ல கண்கள்... கிராமத்திற்குச் சென்று பாருங்கள்.... வாழ்வின் உண்மையான அழகைக் காண்பீர்கள்...." என்று சொன்னார். பின்னர் அவனை உட்காரவைத்து உளியை வைத்து கண்களோடு இறுகிப்போன கண்ணாடியை சிறிது சிறிதாகப் பெயர்த்தெடுத்தார். எடுக்கவே முடியாத சில பகுதிகளை முகத்தோடு விட்டுவிட்டார்.

கண்ணாடிக்கும் கண்களுக்கும் இடையில் அடைசேர்ந்திருந்த பாசியை, சகதியை சுரண்டி அள்ளி வீசினார். முகத்தைக் கழுவி நன்றாகச் சுத்தம் செய்தபின் அவனைக் கண்களைத் திறக்கச் சொன்னார். அவன் முதன்முறையாகக் கண்களைத் திறந்தான்.

## சிரிப்பதற்கு






"அறங்கரை நாவானாம்
ஆய்மயிலார் சீரில்
அறங்கரையா நாப்பண்
அடைவாம் - புறங்கரையாத்
திண்மை நிலையின் உயர்
புலத்தில் சேர்வா(ம்)- ஈண்(டு)
எண்ணினாக்(கு) உய்வாங் இது"

பதினெண் கீழ்க் கணக்கு நூலான இன்னிலை என்ற நூலில் இன்பத்துப் பாலில் உள்ள பாடலே மேலேயுள்ளது. இதைப் படித்து அதன்படி நடப்பவர்களுக்கும் என்றும் இனிமையான இன்பம், மிகுந்த வாழ்வைக் கொடுக்கும் என்று இதை இயற்றிய பொய்கையார் என்ற புலவர் கூறுகிறார். இந்த நூலில் உள்ள 45 பாடல்களும் படிப்பவர்களுக்கு உண்மையில் இன்பமான ஒருநிலையை உண்டாக்கிக் கொடுக்கின்றன. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் பதினொரு நூல்கள் அறநூல்கள். இந்நூல் 'திருக்குறளைப் போல அறம்,பொருள், இன்பம், வீடு என்ற நான்கு புருஷ ார்த்தங்களையும் சிறப்பாகக் கூறுகிறது. வித்தியாசமாகக் கூறுகிறது. அறநூல்கள் இல்லறத்தைப் பற்றியும் வாழ்க்கைத் துணையான மனைவியைப் பற்றியும் சிறப்பாகக் கூறுகின்றன.

" மனைவி மாண்புடையவளானால் குடும்பத்தில் இல்லாதது எதுவுமில்லை என்கிறது குறள். மாட மாளிகையில் மிகவும் ஆடம்பரமாக வாழ்ந்தாலும் மாட்சிமை வாய்ந்த மனைவி இல்லாதவனின் வீடு கண்கொண்டு பார்க்கமுடியாத கொடுமையான சுடுகாடாகவே இருக்கும்=என்கிறது நாலடியார். ஒருவனுக்கு கண்தான் மேலான உறுப்பு. குடும்பத்திற்கு மனைவி தான் மேலானவள் என்றும், மனைவி மாண்புடையவளானால் சுற்றம், பெருகும், செல்வம் தேடிவரும் என்கிறது நான் மணிக்கடிகை. 'மாண்பில்லாத மனைவியின் தோளை சேர்ந்தால் துன்பம்' என்கிறது இன்னா நாற்பது. 'மாண்புடைய மனைவியின் வாய்ச்சொல் இனிது' என்கிறது இனியவை நாற்பது. மாண்பில்லாத மனைவி மழையைக் குறைக்கும் கோள் போன்றவள் என்றும்,'மாண்புள்ள மனைவி மும்மாரிக்கு வித்தாவாள்' என்றும் திரிகடுகம் கூறுகிறது. 'மாண்பில்லாத பெண் துணைவி என்றும் தகுதி பெற்றவள் அல்லள் என்றும் 'அவளோடு வாழும் வாழ்க்கை அல்ல' என்று முதுமொழிக்காஞ்சி என்ற நூல் கூறுகிறது.

அறம் என்றால் இல்லறம் என்பதையே குறிக்கும் என்கிறார் வள்ளுவர். இல்லறம் சிறக்க இல்லத்தரசியின் குணங்கள் தான் காரணம் என்று அறநூல்கள் கூறுகின்றன. சைவ சமயம் துன்பமில்லாத, பிறப்புக்கள்



# பொன்னுலகம்

இல்லாத வாழ்வை முத்தி, மோட்சம் என்று சொல்கிறது. ஆனால் பொய்கையாள்வாரின் மயில் போன்ற சாயலை உடைய ஒழுக்கம் மிக்க ஏழு பெண்ணுடன் இணைந்து வாழும் வாழ்க்கைதான் மோட்சம் என்ற முத்தி நிலை என்று கூறுகின்றார். இது ஏனைய நூல்கள் கூறுவதைவிட வித்தியாசமானது. இல்வாழ்க்கையில் தனது மனைவியோடு இருந்து அறச்செயல்கள் பலவற்றையும் செய்து பின் மனைவியோடு சந்தியாசம் சொல்வதற்காக தனியிடத்திற்குச் சென்று தவம்செய்து முத்தியடைவானென்று ஏனைய நூல்கள் கூறப் பொய்கையாள்வார் நல்ல மனைவியோடு கூடி வாழ்வதன் மூலமும், துறவு செய்வதன் மூலமும் முத்தியடையலாம். இவ்விரண்டிலும் சிறந்தது, மேன்மையானது இல்லறத்தில் மனைவியோடுகூட, வாழ்ந்து, முத்தியடைவதே என்கிறார். ஒருவன் நாவினால் பேசுகின்றான். அந்நாக்கு அறநெறிக்குட்பட்டுப் பேசுமானால், அவன் நல்ல மயில் போன்ற அழகிய மனைவியை அடைவான். அறநெறிக்குட்பட்ட வார்த்தைகளைப் பேசாதவனுக்கு நல்ல மனைவி வாய்க்கமாட்டாள். நாக்குத்தான் ஒருவனின் வாழ்வை நிர்ணயிப்பது. குற்றமில்லாத நாக்கை உடைய கணவனும், மனைவியும் இணைந்து வாழும் வாழ்க்கைதான் அவர்களைப் பொன்னுலகத்திற்குக் கொண்டு சென்றுசேர்க்கும். ஒழுக்கம் தவறாதவர்கள்தான் வீடுபேறு அடைவார்கள். அந்த வீடு போறான பொன்னுலகம் அவர்கள் வாழும் வீட்டிலேயே உருவாகும்.

அதனால் அவர்கள் வாழும்போது பேரின்பத்தை அடைவார்கள். இது உறுதி என்கிறார் பொய்கை யார்.

தீயினால் சுட்ட புண் மாறும். நாவினால் சுட்டவடு மாறாது. இறக்கும்வரை இருந்து வருந்தும் என்றும் ஒருவனது வாய்ச்சொல்லில் இருந்து அவனது குலம் தெரியவரும் என்றும் வள்ளுவர் கூறுகிறார். எதைக் காக்காவிட்டாலும் நாவைக் காக்கவேண்டும் என்று அறநூல்கள் யாவும் கூறுகின்றன. அறநூல்களையெல்லாம் விஞ்ச விடுவது போலப் பொய்கையாள்வார் இனிமையாகவும், உண்மையாகவும் இன்னிலையைப் பாடியுள்ளார்.

ஒவ்வொரு பாடலும் மற்றைய அறநூல்களைவிட வித்தியாசமாக இருக்கின்றன. மக்கள் நாவை அடக்கி மனைவியோடு சேர்ந்திருந்து இன்பங்கள் பலவற்றையும் அனுபவிப்பதுதான் பொன்னுலக வாழ்வை மோட்சம் என்பதை யாசிக்கும்போது இனிக்கிறது.

அதனால் மக்கள் நாவை அடக்கிப் பொன்னுலக இன்பங்களை அனுபவிக்க வேண்டும் என்ற பொய்கையாள்வாரின் விருப்பத்தை இதை வாசிப்பவர்களாவது பூர்த்தி செய்யட்டும்.

# கருத்துக் களம்

கடந்த முறை கிழக்கு மாகாண சபை ஆட்சியில் இருந்த சிவநேசதுரை சந்திரகாந்தன் தலைமையிலான மாகாண சபை நிர்வாகம் கலைக்கப்பட்டபோது மீண்டும் அவரே முதலமைச்சராக நியமிக்கப்படுவார் என்று பரவலாக கூறப்பட்டது.

அதுமட்டுமன்றி தேர்தல் முடிவுகள் வெளியான பின்னரும் சந்திரகாந்தனுக்கு முதலமைச்சர் பதவி பேசப்பட்டது. ஆனால் இறுதியில் அவருக்கு ஜனாதிபதி ஆலோசகர் என்ற பதவி வழங்கப்பட்டுள்ள நிலையில் தற்போதைய மாகாண சபையில் அமைச்சராகக்கூட தமிழர் ஒருவர் இல்லாத நிலை உருவாகியிருக்கிறது.

வீறுகொண்டெழுந்த தமிழர் உரிமைப் பிரச்சினைக்கு தீர்வுகாணும் பொருட்டு இந்திய அரசாங்கத்தின் அனுசரணையுடன் உருவாக்கப்பட்ட இந்த மாகாண சபை அமைப்பில் ஒரு தமிழ் அமைச்சர்கூட இல்லாமல் இருப்பது துரதிர்ஷ்டவசமானதே.

கடந்த முறை முதலமைச்சராக இருந்த படியால் இம்முறை அமைச்சரவை அமைச்சராகக் கடமையாற்றுவதில் சங்கடங்கள் ஏற்படும் என சந்திரகாந்தனும் வெளிப்படையாகவே கூறியிருக்கின்றார்.

இங்கு அவரின் வெளிப்படைத் தன்மை பாராட்டப்படக் கூடியதாக இருப்பினும் மக்கள் சேவையில் சமூகம் சார்ந்து சிந்திக்கவேண்டிய ஒருவர் தனக்கு ஏற்படக்கூடிய சங்கடங்களுக்காக தமிழர் ஒருவர் அமைச்சராக இருந்து கிழக்கு மக்களுக்கு சேவையாற்றக் கிடைக்கும் சந்தர்ப்பத்தை புறந்தள்ளி விடுகிறார் என்ற கேள்வியும் எழுகிறதல்லவா.

எஸ்.பாலர்
மட்டக்களப்பு.

கருத்துக்களம்.
தினமுரசு. வாரமலர்.
373. பிரதான வீதி. யாழ்ப்பாணம்.


## மலையாள மாந்திரீக



காலம் கடந்த திருமணம் ஒன்று சேர, ஓடிப்போனவர் தேடி வர, நினைத்த காதல் நிச்சயம் நிறைவேற, கல்வியில் சித்தி பெற, மனப்பயம் அகல, நிம்மதியான தூக்கம் பெற, பிரிந்தவர் ஒன்று சேர, கணவன் மனைவி பிணக்கு தீர, குழந்தை பாக்கியம் கிட்ட, குடிபோதையை நிறுத்த, நினைத்தது நினைத்தவாறு நடக்க என்னைச் சந்தியுங்கள்.



இது 48 வருட காலம் சேவை செய்யும் நிறுவனமே!
ஸ்ரீ துர்க்கை தாசன், தேச பந்து, கலாநிதி பேராசிரியர், P.K.சாமி JP ஐயா

MALAYALA MANTHIRIKA UCHCHADA PEEDAM
23, Mayfield Road, Kotahena, Colombo - 13.
தொ.பே: 011 2342463, 011 2342464, 011 2470615
நுவெரலியா கிளை: ஸ்ரீ துர்க்கா தேவி இல்லம்
இல. 33, தினசரி சந்தை கட்டிடம், நுவரெலியா. 052-2222508
இது ஒரு அரச வரிகள் செலுத்தும் நம்பிக்கையான முன்னோடி நிறுவனமே!





**சிந்தியா! இலங்கையின் யுத்தக் குற்ற விசாரணைக்கு இந்தியா துணையாக இருக்கும் என இந்திய மத்திய அமைச்சர் நாராயண சுவாமி தெரிவித்துள்ளாரே?**

த.சக்திவேல், மட்டக்களப்பு.

நாராயண சுவாமியின் தனிப்பட்ட கருத்தாக இது இருக்கலாம். இந்திய மத்திய அரசானது இலங்கை அரசோடு மிகச் சிறப்பான உறவுகளையே கொண்டிருக்கிறது. இந்த வித்தியாசத்தை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

**சிந்தியா! இஸ்லாத்தை அவமதிக்கும் அமெரிக்கத் திரைப்படம் உலகெங்கும் பெரும் சர்ச்சையை உருவாக்கியுள்ளது பற்றி?**

எம்.எம். இர்பான், கின்னியா.

அதற்கு எதிரான இஸ்லாமியர்களின் எதிர்ப்பு அமெரிக்காவுக்குப் பெரும் தலையிடியாக அமைந்ததும் உண்மை. ஆனால், அரபு தேசங்கள் ஊடான அமெரிக்காவின் நடவடிக்கைகளை கண்டிக்கும் ஒரு வாய்ப்பை இத்திரைப்படம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

இஸ்லாமியர்களின் உணர்வுகளை அந்தந்த நாடுகள் தமது அரசியல் நலன்களிலிருந்தும் அமெரிக்கா மீதான தமது எதிர்ப்பை வெளிக் காட்டிக் கொண்டுள்ளன.

**சிந்தியா! த.தே. கூட்டமைப்பு டில்லி வருமாறு இந்தியா அழைப்பு விடுத்துள்ளது பற்றி?**

ம.சங்கவி, புதுக்குடியிருப்பு.

கூட்டமைப்பில் அநேகர் இந்தியாவிலேயே குடியேறியுள்ளனர். ஆகவே இந்தியாவுக்கு இவர்களின் பயணம் என்பது ஊடகங்களில் பேசப்படுகின்ற அளவுக்கு பரபரப்பானதல்ல.

பாராளுமன்றத் தேர்வுக்குழுவில் கூட்டமைப்பு பங்குகொள்ள வேண்டும் என்ற செய்தியை இந்தியா அழைத்துச் செல்வதற்கு விரும்பியுள்ளது.

கூட்டமைப்பைப் பொறுத்தவரை இந்தியா அழைத்ததையும் அமெரிக்கா அழைத்ததையும் கூறித் தமிழ் மக்களிடம் அரசியல் நடத்தலாம் என்று கருதுவார்களே தவிர வேறு நன்மைகளை எதிர்பார்க்க முடியாது.




**சிந்தியா! அமைச்சர் மேர்வின் சில்வாவின் மகன் மாலக்க சில்வா கல்வி அமைச்சராக விரும்புகிறாராமே?**

சி.யதுர்சன், ஹெக்கிராவ.

பிள்ளைகளை எதிர்காலத் தலைவர்களாக்க வேண்டும் என்ற முயற்சியில் பெற்றோர்கள் தீவிரம் காட்டுவது வழமை. வைத்தியர்களாக, பொறியியலாளர்களாக, சட்ட வல்லுநர்களாக பிள்ளைகள் வளரவேண்டும் என்று விரும்புகின்றனர்.

இவர் அரசியல்வாதியின் என்ற மகன் வகையில் கல்வி அமைச்சராக்க விரும்புகின்றார்.

மிருகங்கள் எங்கே அழிக்கப்படுகின்றன என்று தேடுவதை விட்டு விட்டு இவரை அமைச்சராக்குகின்ற பணியில் ஈடுபட்டால் நல்லது.

எதிர்காலக் கல்வியின் நிலைமை எவ்வாறு இருக்கப் போகின்றதே நாம் அறியோமே.

**சிந்தியா! பணம் குணத்தை மாற்றுமா?**

சி.ஸன்சிகா, மன்னார்.

கோடியில் ஒருவரிடம் இந்த மாயாஜாலம் பலிக்காமல் போகலாம். ஆனால் மிச்சப்பேரிடம் எல்லாம் இந்த மந்திரம் வேலை செய்யவே செய்கின்றது. அந்த சந்தேகத்திற்கு இடமேயில்லை.

**சிந்தியா! இலங்கையில் நடைபெறும் T- 20 இல் இலங்கை அணி வெற்றிக் கிண்ணத்தை கைப்பற்றுமா?**

த.மதன், நுவரெலியா.

இரண்டாம் கட்டப் போட்டிகளுக்கு முதன்மையான அத்தனை அணிகளும் தம்மைத் தயார்ப்படுத்தி வைத்துள்ளன.

தெற்கில் மழை சதிசெய்யாவிட்டால் ரசிகர்களுக்கு ஆனந்த மளிக்கும் போட்டிகளை கண்டு களிக்க முடியும்.

இந்த நிலையில் இலங்கைக்கு வெற்றிக் கிண்ணம் கிடைக்க வேண்டும் என்று விருப்பமாக இருந்தாலும் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

**சிந்தியா! விளம்பரத்தில் நடிகர்கள் கோடி கோடியாக சம்பாதிக்கின்றனரே?**

த.பிரகதி, சுண்டுக்குழி.

காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ளும் இரகசியம் அது. ஆனால் விருப்பத்துக்குரிய நடிகர்களும் நடிகைகளும் விளம்பரத்தில் தோன்றி மிகையாகக் கூறுகின்ற விடயங்களை மிகச் சொற்பமானவர்களே நம்பி ஏமாறுகின்றனர்.

பிரபலம் என்பதைத் தவிர குறித்த விளம்பரத்துக்கும் அதில் நடிப்பவருக்குமான உடன்பாடு தொடர்பற்று இருப்பதை பார்வையாளர்கள் புரிந்து கொள்கிறார்கள்.

ஒப்பீட்டளவில் நடிகர்கள் தோன்றுகின்ற விளம்பரங்கள் எதிர்பார்த்த பலனைக் கொடுக்கவில்லை என்று நிறுவன உரிமையாளர்களிடையே அதிருப்தி இருப்பதாக கோடம்பாக்கத்தின் நண்பர்கள் கூறுகின்றனர்.

**சிந்தியா! போலிச் சாமியார்கள் பெருகி வருவதற்கு யார் காரணம்?**

ம.சாய்சரன், வேப்பங்குளம்.

மத நம்பிக்கை கொண்ட அப்பாவி மக்கள் மதத் தலைவர்கள் மீது வைத்திருக்கின்ற சந்தேகத்துக்கு அப்பாற்பட்ட நம்பிக்கையையும் புனிதத் தன்மையையும் தங்களுடைய சுகபோகத்துக்காகவும் குறுக்கு வழியில் பணம் சம்பாதிப்பதற்காகவும் பயன்படுத்துகின்ற போக்கிரிகள் தான் முக்கிய காரணம்.

இவ்வாறான போக்கிரிகள் வலம் கொண்டிருக்கிறார்கள் என்பது பல்வேறு சந்தர்ப்பங்களிலும் நிரூபிக்கப்பட்டுள்ள போதிலும் அசல் - நகல் பற்றி கேள்விகள் இன்றி தொடர்ந்து சாமியார் வேஷம் போடுபவர்களுக்கு முன்னால் சாஷ்டாங்கமாக விழுகின்ற அப்பாவிகளும் மற்றொரு காரணம்.

ஏமாறுபவர்கள் இருக்கும் வரை ஏமாற்றும் போலிச் சாமியார்கள் இருக்கத்தான் செய்வார்கள்.

**சிந்தியா! தேனா இனிக்கும் வகையிலான விடுகதை ஒன்று சொல்லுங்களேன்?**

த.தர்சன், வரணி.

எண்ணும் போதே இனிக்கும், தண்ணீருக்குள் மிதக்கும், தீண்டா நாவும் இனிக்கும், தேகம் பூராகவும் சிலிர்க்கும் அது என்ன? தேன்.

( 08ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## மறக்கப்பட்டு வரும் மதங்கள்...

மூதூரிலும் மாபெரும் கண்டனப் பேரணியும் கண்டனக் கூட்டமும் இடம்பெற்றதுடன், மூதூர் பள்ளி வாசல்கள் சம்மேளனம், கதீப்மார்கள் சம்மேளனம் மற்றும் மக்கள் அபிவிருத்தி ஒன்றியம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பல ஆயிரக்கணக்கானோர் கலந்துகொண்டனர்.

இதேபோன்று கடந்த செவ்வாய்க்கிழமை மற்றும் புதன்கிழமைகளில் கொழும்பு மற்றும் அம்பாறை ஆகிய இடங்களில் முஹம்மது நபி (ஸல்) அலைஹிவஸ்ஸலம் அவர்களை களங்கப்படுத்தும் வகையில் அமெரிக்காவினால் வெளியிடப்பட்ட திரைப்படத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலான ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றிருந்தன.

கொழும்பில் ஊர்வலமாகச் சென்ற ஆர்ப்பாட்டக்காரர்கள் அமெரிக்கத் தூதரகத்திற்கு முன்பாக நின்று கோஷமிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். இதனால் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டிருந்தது. காலி முகத்திடல் பகுதியின் காலி வீதி வரையான வீதி தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது.

இதேநேரம், இஸ்லாத்தை அவமதிக்கும் வீடியோவின் உள்ளடக்கத்தையும் கருத்துக்களையும் அமெரிக்கா நிராகரிப்பதாக கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகம் மூலமாக அறிக்கை ஒன்று கடந்த 20ஆம் திகதி வியாழக்கிழமை வெளியிடப்பட்டிருந்தது. அந்த அறிக்கை உலகெங்குமுள்ள பல முஸ்லிம்களையும் ஏனையோரையும் புண்படுத்தும் வகையில் அண்மையில் வெளியான வீடியோ குறித்து ஜனாதிபதி ஒபாமா மற்றும் வெளிவிவகார செயலாளர் கிளின்டன் ஆகியோர் தெரிவித்த கருத்துக்களை அமெரிக்க தூதரகம் மீண்டும் வலியுறுத்த விரும்புகிறது.

அந்த வீடியோவின் உள்ளடக்கத்தையும் தகவலையும் அமெரிக்கா உறுதியாக நிராகரிக்கிறது என்பதுடன் இந்த வீடியோவுக்கும் அமெரிக்காவுக்கும் எந்த தொடர்பும் இல்லை என்பது கவனத்திற்கொள்ளப்பட வேண்டும். ஏனையோரின் மத நம்பிக்கைகளை அவதூறுக்குள்ளாக்குவதற்கு வேண்டுமென்றே மேற்கொள்ளப்படும் எந்த முயற்சி குறித்தும் அமெரிக்கா விசனம் அடைகிறது.

அமெரிக்காவானது ஒரு பல்லின, பல் மத சமூகம் என்ற வகையில், எந்த தேசத்தினதும் எந்த மக்களதும் ஸ்திரத்தன்மைக்கு மத சகிப்புத்தன்மை அவசியம் என நம்புகிறது. அமைதியாக எதிர்ப்பு தெரிவிப்பது அடிப்படை உரிமைகளில் ஒன்றாகும். இராஜாங்க செயலாளர் கிளின்டன் கூறியுள்ளதைப் போல், மதத்தின் பெயரிலான வன்முறையை நாம் முழுமையாக நிராகரிப்பதுடன் வெறுக்கிறோம்.

லிபியாவில் எமது சகாக்களின் உயிரிழப்புக்கு அனுதாபமும் கண்டனமும் தெரிவித்தமைக்காகவும் அமைதி மற்றும் கட்டுப்பாட்டுக்கு கோரிக்கை விடுத்தமைக்காகவும் இலங்கை மற்றும் மாலைதீவிலுள்ள அதிகாரிகள், ஆன்மீகத் தலைவர்கள், சமூகத் தலைவர்களுக்கு இத்தூதரகம் நன்றி தெரிவிக்கிறது உள்ளிட்ட விடயங்களை உள்ளடக்கியிருந்தது.

இவ்வாறானதொரு உருக்கமான அறிக்கையை அமெரிக்கத் தூதரகம் வெளியிட்டபோதும் இலங்கையில் வெள்ளிக்கிழமை பெரியளவான ஹர்த்தால் கடையடைப்பு மற்றும் போராட்டங்கள் நடத்தப்பட்டிருந்தது. இந்த போராட்டங்கள் கடையடைப்பு கர்த்தால்கள் முஸ்லிம் மக்களின் ஒற்றுமையைக் காட்டி நிற்கின்றது.

ஆனாலும் இவ்வாறான போராட்டங்களால் உயிரிழப்புக்களும் பொதுமக்களுக்கு அசௌகரியங்களும் வீண் அலைச்சல்களும் ஏற்படுவதைப் பற்றிய கவலைகள் ஆர்ப்பாட்டங்கள் ஹர்த்தால்களினை நடத்துபவர்களுக்கு எந்தவிதமான சிந்தனையும் இல்லாமலே இருக்கிறது.

இவ்வாறான ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள் எவற்றையோ அள்ளிக் கொண்டு வந்துகொடுத்துவிடுவதாகவே இவற்றை நடத்துபவர்கள் எண்ணிக் கொள்கிறார்கள். யாருக்கும் எந்தவிதமான தொல்லையும் இல்லாது, சிரமமும் இல்லாது ஒரு போராட்டத்தினை நடத்தி முடித்தால் சிறப்பாக இருக்கும் என்பதை நினைவில் வைத்து தமது போராட்டங்களை நடத்துவது சிறந்ததொன்றாக இருக்கும். அதேநேரம் அடுத்தவருக்குச் சிரமங்களைக் கொடுக்கும் போராட்டங்கள் அனைத்தும் வெற்றி பெறும் என்றில்லை என்பதை எல்லோரும் மறந்துவிடுகின்றனர்.

இலங்கை போன்ற நாடுகளைப் போல் அல்லாமல் ஏனைய மேற்கத்தேய நாடுகளில் தமது சுதந்திரத்தினை அவர்கள் பயன்படுத்துவதற்குத் தவறுவதில்லை. அதற்கான வரம்புகளை யாரும் போட்டு வைப்பதுமில்லை. அந்த வகையில் நடக்கும் விடயங்களுக்கு நாடுகளையோ பெருந்தலைவர்களையே பணயம் வைக்கமுடியாது என்பதே உண்மையானது.

அண்மையில் வெளியான இஸ்லாத்துக்கு எதிரான திரைப்படத்துக்கு அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபையும் கண்டனத்தினை வெளியிட்டிருந்தது.

சிலவேளைகளில் மறைத்து வைத்து செய்யப்பட்ட ஒருசிலருக்கும் மாத்திரம் தெரிந்த விடயங்களை எல்லோரும் பெரிதாக்கி அதனை உலகறியவும் செய்துவிடும் சந்தர்ப்பங்களும் அதிகம் நடந்துவிடுகின்றன. அவ்வாறானதொரு நிலையை கொண்டுவருவதற்கு எல்லோருமாகச் சேர்ந்து சந்தர்ப்பத்தினை ஏற்படுத்திக் கொடுத்துவிடக் கூடாது என்பதே இந்த இடத்தில் சொல்லப்பட வேண்டும்.

ஒவ்வொரு மனிதனுக்கும் மதச் சுதந்திரம் என்றொன்று இருக்கின்றது. இம்மதங்கள் மக்களை நல்வழிப்படுத்துவதற்கு உறுதுணை புரிகின்றன. அவரவர் மார்க்கம் அவரவர்களுக்கே என்ற அடிப்படையில் ஒவ்வொருவரும் அவரவர் மார்க்கத்தை பின்பற்றுகின்றார்கள். ஏனைய மதத்தைப் பற்றிப் பேசுவதற்கும் இழிவுபடுத்துவதற்கும் எவ்வித உரிமையும் யாருக்குமில்லை என்பதே ஒவ்வொருவரதும் கருத்தாகும்.

மதங்கள் உருவாக்கப்பட்டது மனிதர்களினை வழிப்படுத்துவதற்கும். சிறப்புகளைப் பெறுவதற்கும் என்பதனை எல்லோரும் மறக்கத் தொடங்கும்போது ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்பதே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

( 16ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## வலது குறைவின்...

இவ்வாறு குடும்ப உறவினர்கள் மற்றும் அயலவர்களினால் புறம் தள்ளப்படுவதனூடாக வலது குறைந்தவர்களுக்குள் உள்ள மாற்றுத்திறன்கள் வெளிக்கொண்டு வரப்பட சந்தர்ப்பம் இல்லாமல் போய் அவர்களுடைய வாழ்க்கை மழுங்கடிக்கப்பட்டுவிடுகின்றது.

இவ்வாறு வலதுகுறைந்த பெண்கள் மற்றும் ஆண்கள் சிறுவர்களைக் கொண்ட குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள், வலது குறைந்தவர்களை உணர்வுரீதியாகப் பராமரிப்பதில் மட்டும் அதிக நேரத்தைச் செலவழிக்க வேண்டியவர்களாகின்றனர்.

இதன்காரணமாக சமூக, பொருளாதார, அரசியல் விவகாரங்களில் இப்படிப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த பெண்களின் பங்கேற்பு மற்றும் பங்களிப்புநிலை என்பது கேள்விக்குரிய விடயமாகவே உள்ளது.

அதேவேளை, ஒருவர் வலதுகுறைந்த பெண்ணாக இருந்தால் சமூக பழிப்புரை காரணமாக சமூக, பொருளாதார ரீதியில் அவர்களின் பங்கேற்றல், பங்களித்தல் என்பது வெறுமையாகவே காணப்படுகின்றது.

இன்று உலக மொத்த சனத்தொகையில் மூன்று சதவீதமானவர்கள் வலது குறைந்தவர்களாக இருக்கின்ற அதேவேளை 2003 ஆம் ஆண்டின் UNESCAP அறிக்கைத் தரவுகளின்படி இலங்கையில் மொத்த சனத்தொகையில் 274711 பேர் வலது குறைந்த நபர்கள் என்று கணக்கிடப்பட்டுள்ளனர்.

இதில் 73 சதவீதமானோர் குடும்பங்களில் தங்கிவாழ்கின்றனர். சமூக சேவைகள் திணைக்கள புள்ளிவிபரத்தின்படி கல்வி கற்ற, பாடசாலை செல்கின்ற, தொழில்திறன் பயிற்சிகள் மற்றும் தொழில்களில் ஈடுபடுகின்றவர்களின் எண்ணிக்கை 33 சதவீதம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கல்வி மற்றும் அனைத்து துறைகளிலும் பெண்களின் பங்கேற்பு முன்னேற்றம் கண்டிருப்பினும் வலது குறைந்த பெண்கள் மற்றும் அவர்களது குடும்பத்தைச் சார்ந்தவர்களின் முன்னேற்றம் என்பது கேள்விக்குறியான விடயமாகவே இன்றளவும் உள்ளது. இந்நிலைக்கு பெண்களின் பாத்திரம் ஏற்றல் என்பது காரணம் எனக் கொள்ளலாம்.

அதாவது பெண்கள் வலது குறைந்த வளர்ந்தோர் மற்றும் சிறுவர்களை பராமரிக்கும் பாத்திரம் அவர்களுக்கு மட்டும் கொடுக்கப்பட்டுள்ள பொறுப்பு எனும் கருத்தியலுக்கு அமைவாக அதை முழுமையாக செயல்படுத்துகின்றனர். ஆனால், இவர்களும் மாற்றுத்திறன்கள் கொண்டவர்கள், ஏதோவகையில் இவர்களுக்கும் சமூகமயமாதல், கல்வி, சுயமாக செயற்படுவது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடச் செய்வதற்கான விழிப்புணர்வு, வாய்ப்பு என்பன இவர்களுக்குக் கிடைப்பதில்லை.

அவ்வாறு கிடைக்கப்பெறுகின்ற சந்தர்ப்பத்திலும் சமூக பழிப்புரையின் காரணமாக அவை செயற்படுத்தப்படுவதுமில்லை. ஒவ்வொரு வலது குறைந்த நபர்களைக் கொண்ட குடும்பத்தைச் சேர்ந்த பெண்களும் தமது சமூக மனப்பாங்கின் காரணமாகவும் தமது பொறுப்பின் காரணமாகவும் வலது குறைந்த நபர்களை மறைத்துப் பாதுகாக்க வேண்டும் என்பதில் குறியாக உள்ளனர். இதன் மூலம் பாதிக்கப்படுவது வலது குறைந்த நபர்களின் தனித்துவம், குடும்பம் மற்றும் பொருளாதாரம் என்பனவற்றுடன் ஒட்டுமொத்தத்தில் அந்தச் சமூகமும்தான்.

துரிதமான அபிவிருத்தி நடவடிக்கைகள் எமது நாட்டில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற அதேவேளை வலது குறைந்த நபர்களுக்காக உட்கட்டுமான கட்டட மற்றும் சேவைகள் சில இடங்களில் கருத்தில் கொள்ளப்பட்டிருந்தாலும் இதன் பலனை வயது முதிர்ந்தவர்கள் தவிர குறிப்பிடப்பட்ட வலது குறைந்த ஒரு சில உயர்வகுப்பினரே அனுபவிக்கின்றனர். குறிப்பாக ஆண்களே இதன் பயன்பாட்டினை அனுபவிக்கக் கூடியவர்களாக உள்ளனர்.

இத்தகைய சமூகப்போக்கு மாற்றம் பெறவேண்டுமாயின் பெண்களின் பொறுப்புக்கள் பகிரப்படவேண்டும். வலது குறைவு (ஊனம் ) ஏற்படுவதற்கான உண்மையான மேற்கூறப்பட்ட காரணங்களுக்கான விழிப்புணர்வை ஏற்படுத்தல் வேண்டும்.

வலது குறைந்த யுவதிகள், பெண்கள் கல்வி கற்பதற்குச் சமூகமான சூழலை ஏற்படுத்தல் வேண்டும். வலது குறைந்தோரைப்பற்றி சமூகத்திலுள்ள அனுதாபம் மற்றும் கேளிக்கையோடு பார்க்கும் பார்வை மாற்றப்பட்டு அதற்குப் பதிலாக அவர்கள் சரி சமனாக மதிக்கப்பட்டு அவர்கள் நடமாடுவதற்குச் சாதகமான பௌதீக சமூக சூழலை உருவாக்கிக் கொடுக்க வேண்டும். இதுவே சம காலத்தின் அவசிய மற்றும் அவசரத் தேவையுமாகும்.

(04ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## மடமை அரசியலுக்குள்...

அரசியலூடாக எதையுமே பெறமுடியாது என்று தமிழ் மக்கள் நினைத்தால் வாக்களிப்பதைவிடவும் தேர்தலிலிருந்து விலகியிருக்கலாமே. அதில் தமக்குள் முரண்படும் தடுமாற்றம் என்ன? தமிழ் மக்கள் சற்று வெளியில் வந்து ஏனைய இனங்கள் எப்படி இருக்கின்றார்கள் என்பதைப் பார்க்கமாட்டார்களா? இன்னும் எத்தனை நாட்களுக்கு நாங்கள் போராடியவர்கள் என்பதைக் கூறிக் கொண்டிருக்கப் போகின்றார்கள்? அரசியல் பலம் என்பது வன்முறை ஆயுதங்களைவிடவும் பலமானது என்பதை இவர்கள் எப்போது புரிந்து கொள்ளப் போகின்றார்கள்.

இப்படி பல கேள்விகள் தமிழ் மக்களைச் சுற்றி வீசப்பட்டிருக்கின்றன. தமிழ் மக்கள் விடைகளைத் தேடுவதை விடுத்து, கேள்விகளைச் சேமித்துக் கொண்டிருக்கின்றார்கள். கிழக்கு மாகாண சபையில் நடந்தது தமிழ் மக்களுக்கு சிந்தனைக்குரிய பாடமாக இருக்குமானால் அது எதிர்காலத்திலாவது நன்மையாக இருக்கும்.

இல்லாவிட்டால் தமிழ் மக்களின் பூர்வீகமான வாழ்விடங்களான வடக்கு, கிழக்கு மாகாணங்களின் அதிகாரத்தையும் அடையாளங்களையும் கூட்டமைப்போடு சேர்ந்து கூத்தாடிக் கூத்தாடிப் போட்டு உடைத்ததாகவே இருக்கும். தவறுகள் திணிக்கப்படுவதல்ல, நாமே உருவாக்குவது என்பதை இனியாவது சிந்திக்கவேண்டும்.

( 03ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## தமிழ் மக்களுக்கு...

இனிமேல் அவர் இந்தியாவுக்கு வந்தால் பிரதமரின் வாசஸ்தலத்தை முற்றுகையிடப் போவதாக வைகோ சொல்கிறார். இலங்கை ஜனாதிபதி இந்தியாவுக்குச் செல்ல முடியாதநிலை உருவாகுமேயானால் இந்தியப் பிரதமரோ வேறு தலைவர்களோ இலங்கைக்கு வருவதும் முடியாததாகிவிடும். அப்போது யாரோடு யார் பேசி அரசியல் தீர்வைப் பெறுவது? இரண்டு நாடுகளுக்கும் தலைவர்கள் விஜயம் செய்யக்கூடிய சூழ்நிலையிலேயே அரசியல் தீர்வுப் பேச்சுவார்த்தையை முன்னெடுக்க முடியும். தலைவர்கள் சந்தித்துப் பேசுவதற்குத் தடையான சூழ்நிலையை உருவாக்குவது அரசியல் தீர்வுக்கு எதிரான செயற்பாடாகும்.

சிங்கள மக்களுக்கும் இலங்கை ஆட்சியாளருக்கும் எதிராகத் தமிழ்நாட்டில் வைகோ, சீமான், திருமாவளவன் போன்ற தலைவர்கள் மேற்கொள்ளும் வன்முறைச் செயற்பாடுகள் அரசியல் தீர்வுக்குப் பாதகமான சூழ்நிலையை உருவாக்கும் நோக்கத்தைக் கொண்டவை என்பதில் சந்தேகமில்லை. இப்படிச் செய்வதன்மூலம் இலங்கையில் தனிநாடு உருவாகுவதற்குச் சாதகமான சூழ்நிலையை உருவாக்கலாம் என்று இவர்கள் கற்பனை செய்கின்றார்கள். தமிழ் தேசியக் கூட்டமைப்பு இவர்களுக்குத் தார்மீக ஆதரவு தெரிவிப்பது இவர்களுடைய நிகழ்ச்சி நிரலுடன் உடன்பாடு கொண்டிருப்பதாகவே அர்த்தமாகும்.

இனப்பிரச்சினையின் தீர்வு தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கொண்டிருக்கும் நிலைப்பாட்டை நிதானமாக நோக்கினால் அதுவும் மறைவான தனிநாட்டு நிகழ்ச்சி நிரலுடன் செயற்படுகின்றதா என்ற சந்தேகம் தோன்றுகின்றது. ஐக்கிய இலங்கையில் அரசியல் தீர்வு என்று அடிக்கடி கூறுகின்ற போதிலும் தீர்வுக்கான கொள்கையைக் கூட்டமைப்பு ஒருபோதும் முன்வைக்கவில்லை. அரசாங்கம் தீர்வை முன்வைக்க வேண்டும் என்றே கூட்டமைப்புக் கூறுகின்றது. பாராளுமன்றத்திலும் செல்வம் அடைக்கலநாதன் அதையே கூறினார்.

கூட்டமைப்பின் இந்த நிலைப்பாடு உலகத்தில் எங்குமே இல்லாத புதுமை. பாதிக்கப்பட்ட மக்கள் கூட்டத்துக்கு அரசியல் தலைமை வழங்குபவர்கள் அப்பாதிப்பை ஏற்படுத்துவதெனக் கருதுகின்ற அரசாங்கத்தையே தீர்வொன்றை முன்வைக்குமாறு கோரிக்கை விடுப்பது உலகில் வேறெங்கும் நடக்காத விடயம். இனப்பிரச்சினைக்குத் தீர்வொன்றைத் தமிழ் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்துவிட்டு, அரசாங்கம் அதன் தீர்வை முன்வைத்தால் பரிசீலிக்கலாம் எனக் கூறுமேயானால் அதைப் புரிந்துகொள்ள முடியும். அரசாங்கம் எந்தத் தீர்வை முன்வைத்தாலும் கூட்டமைப்பு ஏற்றுக்கொள்ளுமா?

இந்தக் கேள்விக்கான பதில் மிகத் தெளிவானது அரசாங்கம் தீர்வை முன்வைக்க வேண்டும் என்று கூட்டமைப்பு கூறுவதன் நோக்கம் அரசியல் தீர்வை அடையவேண்டும் என்பதல்ல. அரசாங்கம் ஒரு தீர்வை முன்வைத்தால் அதில் ஏதாவது குறை கண்டுபிடித்து நிராகரிக்கலாம். இப்படியாக அரசாங்கம் முன்வைக்கும் எல்லாத் தீர்வுகளையும் நிராகரித்துக்கொண்டே போகலாம். அரசியல் தீர்வு பற்றிப் பேசிக்கொண்டே அரசியல் தீர்வுக்குத் தடையாகச் செயற்படுவதுதான் கூட்டமைப்பின் நோக்கம். கூட்டமைப்பின் இந்த நிகழ்ச்சி நிரல் தமிழகத்தின் வை.கோ, சீமான், திருமாவளவன் கூட்டின் நிகழ்ச்சி நிரலிலிருந்து மாறுபட்டதல்ல. எனவேதான் கூட்டமைப்பின் உண்மையான நிலைப்பாடு தனிநாடா அல்லது ஐக்கிய இலங்கையில் அரசியல் தீர்வா என்ற கேள்வி எழுகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உண்மையிலேயே அரசியல் தீர்வை நாடி நிற்கின்றதென்றால் தீர்வுக்கு அது முன்வைக்கும் கொள்கை எது என்பதை மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும். அரசாங்கம் அதன் தீர்வை முன்வைக்க வேண்டும் என்று அதன்பின்னர் கோரிக்கை விடுக்கலாம்.

அரசாங்கம் தீர்வை முன்வைக்கவேண்டும் என்று கூறுகின்ற அதேவேளை சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத்தரும் என்று கூட்டமைப்புத் தலைவர்கள் கூறுகின்றார்கள். இவர்கள் உண்மையிலேயே எதிர்பார்ப்பது என்ன? அரசாங்கம் தீர்வை முன்வைக்க வேண்டும் என்பதையா? சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத்தர வேண்டும் என்பதையா? சர்வதேச சமூகம் எவ்வாறான தீர்வைப் பெற்றுத் தரும் என்பதை இவர்களால் கூறமுடியவில்லை.

இனப்பிரச்சினையின் தீர்வுக்காக எந்தக் கொள்கையையும் முன்வைக்க இயலாத நிலையில், தீர்வொன்றைக் கொண்டு வருவது அரசாங்கத்தின் பொறுப்பு என்றும், சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத்தரும் என்றும் மாறிமாறிக் கூறிக்கொண்டிருப்பதன் மூலம் தமிழ் மக்கள் சார்ந்த தனது பொறுப்பைத் தட்டிக் கழிக்கும் கூட்டமைப்பு தமிழ் மக்களுக்குத் தலைமை வகிக்கும் தார்மீக உரிமையை இழந்து நிற்கின்றது.

( 08ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## மு.கா.வின் இணக்க அரசியல் . . .

*இவர்களின் நிலைமை இவ்வாறு என்றால் சாதாரண வாக்காளர்களின்* நிலைமை எவ்வாறு இருக்கும் கொள்கை அரசியலில்... இது முஸ்லிம் காங்கிரஸிற்கு மட்டுமல்ல தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இருக்கலாம், மக்கள் விடுதலை முன்னணியாக இருக்கலாம். ஐக்கிய தேசியக் கட்சியாக இருக்கலாம், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியாக இருக்கலாம் அல்லது இடதுசாரி, வலதுசாரிக் கட்சிகளாக இருக்கலாம். எல்லாக் கட்சிகளின் நிலைமையும் இவ்வாறுதான் உள்ளது. இவ்வாறான நிலையில் கொள்கை அரசியல் முடிவு என்பதை சமகால அரசியல் பின்தள்ளியுள்ளது என்பதுதான் யதார்த்தம். இலங்கையிலுள்ள அனைத்து அரசியல் கட்சிகளிலும் காணப்படும் ஒரு இருண்ட பக்கமாகக்கூட இதனை நாம் கருதமுடியும்.

எனவே, முஸ்லிம் காங்கிரஸ் தமது சமூகத்தினை முன்நிலைப்படுத்தி அரசியல் செய்யவேண்டிய ஒரு காலத்தில் இருப்பதனால் எந்தப் பக்கமும் சமூகம் சார்ந்து சிந்திக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இந்த சமூகத் தேவை அரசியல் என்பது ஒரு நூலில் நடக்கும் வித்தைக்காரனின் முகப்பாகத்தை ஒத்ததாக இருக்கும். இவைகளை கறுப்புக் கண்ணாடி போட்டுக்கொண்டு பார்த்தால் இந்த விடயங்கள் கண்களுக்குத் புலப்படாது என்பதையும் நாம் கருத்திற்கொள்ள வேண்டும்.

முஸ்லிம் காங்கிரஸ் தலைமை எடுத்த முடிவானது முஸ்லிம் காங்கிரஸ் என்ற உடம்புக்கு உள்நோயோ, வெளிநோயோ வருவதை தடுத்துள்ளது. என்று குறிப்பிடலாம். இதனை இன்னுமொரு வார்த்தையில் குறிப்பிடுவதென்றால் ஒரு வைத்தியர் நோயாளிக்கு ஏற்பட்டிருக்கும் நோயைக் கண்டுபிடித்து அந்த நோய் உடம்பைத் தாக்காதவாறு நோய் எதிர்ப்பு மருந்தை பயன்படுத்துவது போல முஸ்லிம் காங்கிரஸின் தலைமை தனது இயக்கத்திற்கு உள்ளேயும், வெளியேயும் ஏற்படவிருந்த நோயை ஒரு வைத்தியராக இருந்து தடுத்துள்ளது என்று குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும்.

எனவே கிழக்கு மாகாணம், தேசியம், சர்வதேசம் என்ற மூன்று கண்களின் பார்வைகளும் கடந்த ஒரு வார காலமாக கிழக்கு மாகாண சபையின் நிர்வாகக் கட்டமைப்பில் அல்லது முஸ்லிம் காங்கிரஸின் மீதே அகலத்திறந்திருந்தது. இவ்வாறான எதிர்பார்ப்புக்கு மத்தியில் எடுக்கப்படும் முடிவுகள் மௌனமாகப் போய்விடும் என்பதை நாம் எதிர்பார்க்க முடியாது. தமிழ், முஸ்லிம் மக்களின் சகவாழ்வை மேம்படுத்தும் விடயத்தில் இனத்துவ அரசியல் நீரோட்டத்தில் பக்குவத்துடன் இரு இனமும் செயற்பட வேண்டியது காலத்தின் தேவையாக மாறியுள்ளது.



# காதிலை பூ கந்தசாமி

"நான் சொல்வதெல்லாம் பொய் பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை."

**வணக்கமுங்கோ! கிழக்கு மாகாணத்துக்கு விசிட் அடிச்சுப்போட்டு வந்திருக்கும் வாத்தி யாரைச் சந்திச்சேனுங்கோ. அவர் என்ன சொன்னவர். நான் என்ன கேட்ட நான் எண்டதை நீங்களே படிச்சுப் பாருங்கோவன்.**

**நான்:** வாத்தி தேர்தல் நேரத்தில போகாமல், தேர்தல் முடிஞ்சாப்பிறகு கிழக்கு மாகாணத்துக்குப் போய் வந்திருக்கிறியளே நிலைமை எப்புடி இருக்குது?

**வாத்தி:** ஆட்சி அமைக்கப்போறது தாங்கள்தான் எண்டு கூட்டமைப்புச் சொன்னதை நம்பி தமிழ் மக்கள் ஏமாந்து போயிருக்கினம். இப்ப என்ன செய்யிறது, யாரைப் போய் பார்க்கிறது எண்டு தெரியாமல் தமிழ்ச் சனம் இருக்கினம்.

**நான்:** ஆளுங்கட்சியிலிருக்கும் அமைச்சர்களும், உறுப்பினர்களும் தமிழ் மக்கள் மேல் கோபமாகத்தான் இருக்கின்றார்களா?

**வாத்தி:** கோபமாக இருக்கின்றார்களா? தமிழ் மக்களை கை விட்டுவிடுவார்களா? என்றெல்லாம் நான் சொல்லமாட்டேன். ஆனால் தமிழ் மக்கள் ஆளுங்கட்சியிலிருக்கும் உறுப்பினர்களை தொடர்ந்து ஏமாற்றிக் கொண்டிருப்பதுபோல் தெரிகின்றதே. அவர்களும் தொடர்ந்து தமிழ் மக்களுக்கு சேவைசெய்து கொண்டிருப்பார்களா? சிந்திக்கத் தெரிந்தால் தெரியும் தேர்தலில் தமிழ் மக்கள் கூட்டமைப்புக்கு வாக்களித்துவிட்டு, அதிகாரத்திலிருப்போர் என்ன செய்தார்கள், அவர்களால் தீர்வையோ, உரிமை–களையோ பெறமுடியவில்லையே என்று கேட்பதில் என்ன நியாயம் இருக்கமுடியும்.
வாக்குகளைப் பெற்று ஆசனங்களைப் பெற்றுக் கொள்ளும் கூட்டமைப்பிடம் அவ்வாறு கேட்டிருக்கின்றார்களா? அப்படித்தான் கேட்டாலும் நாங்கள் ஒரு கொள்கையோடு அரசை எதிர்க்கின்றோம். எதிர்க்கட்சியாக இருப்பதால் எதையும் செய்யமுடியவில்லை. இந்த அரசாங்கம் நமக்கு எதையும் செய்யமுடியாது, எதையும் தராது என்று சொல்லிக் கொண்டிருப்பார்கள். அதை தமிழ் மக்கள் கேட்டுக்கொண்டிருப்பார்கள்.

அது மட்டும் நியாயம். தமிழ் மக்களில் சொற்பமானவர்கள் வாக்களித்து அரசோடு இணைந்து சேவை செய்யும் உறுப்பினர்கள். முடியுமானதைச் செய்தால், அதை கேள்வி கேட்பார்கள்.

கிழக்கு மாகணத்தில் பாராளுமன்றத் தேர்தலில் விட்ட தவறை மீண்டும், மாகாண சபையிலும் தமிழ் மக்கள் செய்திருக்கின்றார்கள். முன்னர் யுத்தத்தால் எல்லா வழிகளிலும் பின் னோக்கி சரிவு கண்ட தமிழ் மக்களின் அரசியல் பயணம் இப்போது எதிர்ப்பின் பெயரால் தொடர் சரிவுகளைச் சந்தித்துக் கொண்டிருக்கின்றது.

தம்மைச் சுற்றி நடந்தேறும் அத்தனை பிரச்சனைகளையும் எதிர் கொண்டபடியும், சவால்களாக ஏற்றுக் கொண்டும் சிங்கள மற்றும் முஸ்லிம் இனங்கள், அரசியல் மற்றும் பொருளாதாரத்தில் வளர்ச்சியடைந்துள்ளன.

'சொந்தச் செலவிலையே சூனியம் வைத்துக் கொள்வதைப்போல' என்பார்கள் அதுபோல் தமிழ் மக்கள் சொந்த வாக்குகளை வழங்கி தமது சரிவை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றனர்.

**நான்:** வாத்தி என்னைக் கேள்வி கேட்கவே விடாமல் சொல்லிக் கொண்டு இருக்கிறியளே!..கிழக்கு மாகாணத்தில தமிழ் மக்கள் கைவிடப்பட்ட நிலைமையிலதான் இருக்கவேணுமா?

**வாத்தி:** அரசாங்கம் அப்புடி விடப் போவதில்லை. அப்படிச் செய்தால் அதையே ஒரு பிரசாரமாக தமிழ் கூட்டமைப்பு எடுத்துக் கொள்ளும். அதாவது தமிழ் மக்கள் கௌரவமாக வும், சுய மரியாதையோடும் வாழாமல் வேறு என்ன செய்துகொண்டாலும் அதை அரசியலாக்கி கூட்டமைப்பு பிழைத்துக் கொள்ளும் என்ற நிலைமைதான் தற்போது உள்ளது. இந்த நிலைமையைத் தான் தமிழ் தேசிய உணர்ச்சிப் பிரவாகமான நிலைமை என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

இப்படி வாத்தி, கிழக்கில் தமிழ் மக்கள் கூட்டமைப்பால் தோற்கடிக்கப்பட்டிருப்பதை நினைத்து எழுகின்ற கோபத்தை தனக்குள் அடக்க முயற்சி செய்து கொண்டிருக் காருங்கோவ்.

**யாவும் கலப்படமற்ற பொய்**

# அச்சுக் கலையின் தந்தை






**ஜோன்** கட்டன் பார்க்குக்குப் பதின்மூன்று வயது. தான் ஒரு பிரபுவாக வாழக் கூடாது என்று முடிவு செய்தான் ஜோன். ஒரு நாள் பகல் பள்ளியிலிருந்து வீடு திரும்பும்போது, ஒரு பொற்கொல்லரின் பட்டறையின் முன் நின்று, அங்கு நடப்பதை வேடிக்கை பார்க்கலானான். பொற்கொல்லரின் பட்டறையில் நடப்பதை எல்லாம் பார்க்க வசதியாகக் கடை இருந்தது. ஒரு பொற் சங்கிலியைக் கடையின் எஜமானரிடம் காட்டினான். ஒரு தொழிலாளிப் பையன். அதை வாங்கி நோட்டமிட்ட முதலாளி 'பலே! நன்றாகச் செய்திருக்கிறாய். திறமைமிக்க பொற்கொல்லனாக விளங்குவாய்' என்று அந்தப் பையனைப் பாராட்டினார் முதலாளி.

இதனால் மகிழ்ச்சி பூத்த முகத்துடன் திரும்பிய அந்தப் பையன் ஜோனைப் பார்த்தான். ஜோன் பிரபு வீட்டுப் பிள்ளையா, கவர்ச்சியாக உடை அயணிந்து கொண்டிருந்தான்.வெல்வெட் கால் சராய், பளபளக்கும் பூட்ஸ்கள்,தோள் வளையம் அது பஞ்சு போன்ற ரோமத்தினால் அழகு படுத்தப்பட்டிருந்தது. குல்லாய், சட்டை, ஜோனின் அலங்காரம் அந்த தொழிலாளிப் பையனின் உள்ளத்தில் ஏக்கத்தை உண்டாக்கினாலும், தன் கையிலுள்ள பளபளக்கும் தங்கச் செயினை கர்வத்துடன் அவன் முன் நீட்டியபடி திருப்திப்பட்டான்.



ஜோன் நினைத்தான். தன்னைவிட தொழில் கற்கும் அந்தப் பையனே அதிர்ஷ்டக்காரன் என்று, தங்கம், வெள்ளி, தாமிரம் ஆகிய உலோகங்களில் வேலை செய்வது எத்தனை மகிழ்ச்சியான விஷயம்? இலத்தீன் மொழியை உருப்போடுவதைவிட, எத்தனையோ பங்கு சுவையான காரியம். அந்தக் காலத்தில் பிரபுக்குடும்பத்துப் பிள்ளைகள் தொழில் கற்பது சட்டவிரோதம். அந்த நினைவெல்லாம் ஜோனின் உள்ளத்தில் அப்போது இல்லை.

ஆர்வமுடன் நகைக்கடைக்குள் நுழைந்தான். 'அழகான ஆபரணங்களைச் செய்யும் கலையை நானும் கற்றுக் கொள்ள ஆசைப்படுகிறேன்" என்றான். தலைமைப் பொற்கொல்லரும் பட்டறையின் முதலாளியுமான பெரியவரிடம்.

(தொடரும்....)

# இந்தவாரம் உங்கள் பலன்

(27.09.2012 தொடக்கம் 03.10.2012 வரை)

### மேடம்

கணவன். மனைவி உறுகள் சுமாராகக் காணப்படும். தீராத நாட்பட்ட நோய்கள் தீருவதற்காக புதிய மருத்துவர்களை நாடுவது நல்லது. காரணமற்ற மனச்சஞ்சலங்கள் வர இருப்பதால் புதிய நண்பர்களின் சேர்க்கையைத் தவிர்ப்பது உகந்ததாகும். பொருளாதாரத்தில் இருந்து வந்துள்ள நெருக்கடிகள் தீர்ந்து மன நிம்மதி அடைவீர்கள். வீடு வாகனங்களைப் பழுது பார்ரதன் மூலமாகப் பொருட்செலவுகள் உண்டாகலாம். உடம்பில் வாயு மற்றும் வயிறு போன்ற உபாதைகள் வந்து போகலாம். ஒரு சிலருக்கு உத்தியோகத்தில் வீண் பிரச் சினைகள் உருவாகி பணி இடமாற்றம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. பங்காளிகளுடன் சேர்ந்து கூட்டுத் தொழிற் செய்வதற்கான முயற்சிகளைத் தள்ளிப்போடவும்.

### இடபம்

வேண்டாத விசயங்களில் தலையிட்டு வீண் சிக்கலில் மாட்டிக்கொள்ள வேண்டாம். வங்கிகளில் இருந்து நீண்ட காலமாக எதிர் பார்த்து இருந்து கடன் உதவித் தொகைகள் நண்பர்களின் உதவியால் கிடைக்கும். குல தெய்வ ஆலய வழிபாடுகளைச் செய்து வரு வதன் மூலம் மனத்திருப்தி அடைவீர்கள். விபரீதமான எண்ணங்களை கைவிட்டுக் காரியத்தில் கவனமாய் இருப்பது நல்லது. உற்றார் மற்றும் உறவினர்களின் திடீர் வரவு களால் எதிர்பாராத பொருட் செலவுகளும் மனநிம்மதிக் குறைவுகள் ஏற்படலாம். வட திசையில் இருந்து நற்செய்திகள் வந்து சேரும். பெண்களால் தென்திசையில் இருந்து சில நல்ல செய்திகள் கிடைக்கும்.

### மிதுனம்

காதல் சம்பந்தமான விசயங்களில் மிகவும் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லதாகும். படித்து வேலை இல்லாதவர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகள் கிடைக்க வாய்ப்பு உள்ள காலமாகும். குலதெய்வ ஆலய வழிபாடுகளைச் செய்து வருவதன் மூலம் மனத்திருப்தி அடைவீர்கள். விவசாயம் செய்பவர்களுக்குப் புதிய முறை விவசாயங்களின் மூலமாக நல்ல இலாபம் பெறுவார்கள். புதிய ஆடை மற்றும் அணிகலன்கள் வாங்குவதைச் சற்று தள்ளிப் போடுதல் நல்லது. மனத்தைரியமுடன் எடுத்த காரியத்தை வெற்றிகரமாகச் செய்து முடிக்க வாய்ப்பு உள்ள காலமாகும். பொதுவாக இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.

### கடகம்

ஆடம்பரச் செலவுகளைச் செய்ய எண்ணி புதிய கடன்கள் வாங்குவீர்கள். பங்காளிகளுடன் சேர்ந்து புதிய கூட்டுத்தொழில் செய்வதற்கான முயற்சிகளில் நல்ல பலன்களை எதிர்பார்க்கலாம். தந்தை, மகன் உறவுகளில் இருந்து வந்துள்ள பிரச்சினைகள் குறைந்த ஒற்றுமை உண்டாகும். விவசாயம் செய்ப வர்களுக்கு சுமாரான நற்பலனையே செய்யும். மற்றவர்களை நம்பிப் பணம் மற்றும் பொருட் களைக் கடன் கொடுத்து ஏமாற்றம் அடைய வேண்டாம். புதிய ஆடைகள் மற்றும் அணி கலன்களை வாங்குவதற்கு வாய்ப்பு உள்ள காலமாகும். பழுதுபட்ட பழைய வீடு மற்றும் வாகனங்களைப் பழுது பார்ப்பதற்காக பொருட் செலவுகள் வந்து சேரும்.

### சிங்கம்

தாயின் உடல் நிலையில் இருந்து வந்துள்ள பாதிப்புகள் குறைந்து மனநிம்மதி அடைவீர்கள். கணவன், மனைவிக்குள் காரணமற்ற மனக்கசப்புகள் வந்துபோகும். பிரிந்துபோன உறவுகளுடன் திரும்பவும் தொடர்புகள் ஏற்படக் கூடிய காலமாகும். சகோதர சகோதரர்களின் சுபகாரியங்களுக்கான முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். பொருளாதாரத்தில் சற்று முன்னேற்றமான சூழ்நிலை காணப்படும். தாயின் உடல் நிலையில் வெகுநாட்களாக இருந்து வந்துள்ள உடல்நிலை பாதிப்புகள் குறைந்து காணப்படும். நண்பர்களால் வீண் பிரச்சினைகள்வர இருப்பதால் கவனமுடன் பேசிப் பழகுதல் நல்லதாகும்.

### கன்னி

காதல் சம்பந்தமான விசயங்களில் உற வினர்களின் மூலமான நல்ல செய்திகள் வந்து சேரும். விட்டுப்போன பழைய உறவுகளில் இருந்து வந்த மனக்கசப்புகள் தீர்ந்து நல்ல சூழ்நிலை உருவாகும். அரசியல்வாதிகளுக்கு எதிர்பார்த்த ஆதாயங்கள் கிடைக்கும். ஒரு சிலருக்குப் புதிய வீடு மாற்றம் ஏற்படலாம். உத்தியோகத் துறையினர்களுக்கு மேலதிகாரி களிடம் மனக்கசப்புகள் ஏற்பட்டு பணி இட மாற்றம் ஏற்பட இருப்பதால் முன் கோபத்தை தவிர்த்துப் பணி ஆற்றுதல் சிறந்ததாகும். வராத கடன் கொடுத்து இருந்த பணம் திரும்பக் கை வந்து சேரும். கணவன் மனைவி உறவுகள் சுமாராகக் காணப்படும். வெளிநாடு சென்றுவருதல் போன்ற முயற்சி களில் நல்ல செய்திகள் கிடைக்கும்.

### துலாம்

உற்றார் மற்றும் உறவினர்களின் திடீர் வரவால் மனமகிழ்ச்சியும் பொருள் வரவும் உண்டாகும். ஒரு சிலருக்கு பணி செய்யும் இடங்கள் மற்றும் வீடுகளை இட மாற்றம் செய்வீர்கள். சகோதர சகோதரிகளின் தடைப் பட்ட திருமண காரியங்கள் மற்றவர்களின் உதவியால் நிறைவேறும் காலமாகும். வெளி நாடு சென்று வருதல் போன்ற முயற்சிகளில் வெகு காலமாக எதிர்பார்த்து இருந்த நல்ல தகவல்கள் வந்து சேரும். புதிய வீடுகள் மற்றும் வாகனங்களை வாங்குவதற்கான முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். வெளிநாடு சென்று வருவதற்கான புதிய முயற்சிகளில் வேற்று மதத்தினர்களிடம் இருந்து எதிர் பார்த்த செய்திகள் கிடைப்பதற்கு இன்னும் சற்று காலதாமதம் ஆகலாம்.

### விருச்சிகம்

கண் காதுகளில் கவனம் தேவை. வங்கிகளில் இருந்து எதிர்பார்த்து வந்த பண உதவித் தொகைகள் கிடைக்கும். காதல் சம்பந்தமான விசயங்களில் மிகுந்த கவனமுடன் நடந்துகொள்வது நல்லது. திருமண சம்பந்தமான முயற்சிகளை இன்னும் சற்றுக்கால தாமதமாகவே நடத்துவது சிறந்த தாகும். மாணவர்களுக்கு புதிய படிப்புகள் சம்பந்தமாக நல்ல தகவல்கள் கிடைக்கும். உடல்நிலையில் சுரம் மற்றும் உஷ்ண சம்பந்த மான உபாதைகள் வந்து போகும். புதிய வாகனங்கள் வாங்குவதற்கான முயற்சிகளைச் சற்று தள்ளிப்போடுதல் நல்லது. புதிய வீடு மற்றும் நில புலன்களை வாங்குவதற்காகப் புதிய கடன்களை வாங்குவீர்கள். தடைப்பட்டுப் போன சகோதர சகோதரிகளின் சுபகாரிய சம்பந்தமாக நல்ல தகவல்கள் வந்து சேரும்.

### தனுசு

குடும்பச் சொத்துக்களில் வெகு காலமாக இருந்து வந்துள்ள பிரச்சினை கள் பெரிய மனிதர்களின் தலையிடுதலால் திரும்பக் கிடைக்கும். மற்றவர்களை நம்பிப் பணம் மற்றும் பொருட்களைக் கடன் கொடுத்து ஏமாற்றம் அடைய வேண்டாம். பொருளாதாரத்தில் இருந்து வந்துள்ள நெருக் கடிகள் மாறி சற்றுமுன்னேற்றமான சூழ்நிலை கள் காணப்படும். உடம்பில் கண், காது, தலை போன்ற பாகங்களில் சிற்சில உபாதை கள் வருவதன் மூலம் மருத்துவச் செலவுகள் ஏற்படலாம். விவசாயிகளுக்கு நல்ல விளைச்சல் ஏற்படும். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

### மகரம்

வேலையாட்களால் எதிர்பார்த்த ஆதாயம் இல்லை. யாத்திரையின் போது சம்பந்தம் இல்லாத நபர்களுடைய தொடர்புகளால் எதிர் பாராத சில ஆதாயங்களை அடைவீர்கள். பூர் வீகச் சொத்து விசயங்களில் இருந்து வந்துள்ள கருத்து வேறுபாடுகள் தீர்ந்து மனநிம்மதி அடைவீர்கள். தேவையற்ற மனச் சஞ்சலங் களைத் தவிர்க்கவும். தாயின் உடல்நிலையில் சில பாதிப்புகள் வரக் கூடுமாகையால் கவன முடன் இருக்கவும். நீண்டகாலமாக திரு மணம் ஆகாதவர்களுக்குத் திருமண காரியங் கள் நிறைவேறும். உற்றார் மற்றும் உறவினர் களால் எந்தவிதமான ஆதாயமும் இல்லை. விடுபட்டுப் போன பழைய வழக்குகள் மீண்டும் தொடர வாய்ப்பு உள்ளது.

### கும்பம்

வெகு காலமாகப் பிரிந்துபோன கணவன், மனைவி இருவரும் ஒன்று சேருவார்கள். நீண்ட நாட்களாக வராத கடன்கொடுத்து இருந்த பணம் பொருட்கள் திரும்பக் கை வந்து சேரும். தன்னிடம் பணிசெய்யும் அடிமை ஆட்களால் பிரச்சினை களும் பொருள் இழப்பும் வர இருப்பதால் கவனம் தேவை. காதல் சம்பந்தமான விசயங் களில் எதிர்பார்த்து இருந்த நல்ல செய்திகள் வந்துசேரும். வெளிநாடு செல்வதற்கான வாய்ப்பு கிடைக்கும். விவசாயம் செய்பவர் களுக்கு நல்ல இலாபம் கிடைக்கும். பொது வாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

### மீனம்

உத்தியோகம் இல்லாதவர்களுக்கு புதிய வேலை வாய்ப்பு கிடைக்கும். தந்தையின் உடல் நிலையில் ஏற்பட்டு இருந்த பாதிப்பு கள் சற்று குறைவதன் மூலம் மருத்துவச் செலவுகள் குறைய வாய்ப்பு உள்ளது. வீடு மற்றும் தொழிற்சாலைகளை இடமாற்றம் செய்வதற்கு வாய்ப்பு உள்ளது. ஒரு சிலருக்கு வீடு மற்றும் பணி இட மாற்றங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. குடும்பத்தில் திரு மணம் போன்ற சுப காரிய நிகழ்ச்சிகளை நடத்துவதற்கான முயற்சிகளைச் சற்று தள்ளிப் போடவும். அண்டை அயல் வீட்டுக் காரர்களுடன் கவனமாகப் பேசப் பழகுவதால் வர இருக்கும் பிரச்சினைகளைத் தவிர்க்க லாம். பிள்ளை இல்லாதவர்களுக்கு இறைய ருளால் புத்திர பாக்கியம் உண்டாகும்.

Regd. as a News paper at the G.P.O.(QD/86/NEWS/2012)





## கடின உழைப்பு...

இங்கிலாந்து நாட்டிலுள்ள கிரேட் யார்க்ஷேரியில் விவசாய உற்பத்தி பொருட்கள் கண்காட்சி நடைபெற்றது.

இதில் பல்வேறு நாடுகளை சேர்ந்த விவசாயிகள் தங்கள் நிலத்தில் விளைந்த அதிசய காய்கறிகளைக் கொண்டு வந்து காட்சிக்கு வைத்தார்கள்.

இதில் அமெரிக்காவில் நியூஜெர்சி பகுதியிலுள்ள நிவார்க் என்ற ஊரை சேர்ந்த கிளேஸ்பெர்க்(வயது 68) என்பவர் தனது தோட்டத்தில் விளைந்த 8.2 கிலோ (18 பவுண்ட்) எடை கொண்ட இராட்சத வெங்காயத்தை காட்சிக்கு வைத்தார். இது புதிய உலக சாதனையாகும்.

இதை பாராட்டி அவருக்கு பரிசு வழங்கப்பட்டது. இதற்கு முன்பும் இவர் 18.5 அடி நீளம் கொண்ட முள்ளங்கியை உற்பத்திசெய்து சாதனை படைத்தவர் ஆவார்.

தற்போது இராட்சத வெங்காயத்தை உற்பத்திசெய்து 2ஆவது சாதனை புரிந்துள்ளார்.

## படகு போல் பாதம்...






இங்கிலாந்து நாட்டில் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் படிக்கும் இம்மா காஹில் (வயது 19) ஐரோப்பிய நாடுகளிலேயே ஒரு வித்தியாசமான பெண்ணாக விளங்குகிறார். இதற்கு காரணம் இவரது உயரம் 6 அடி 5 அங்குலம் என்பதோடு கால் பாதத்தின் அளவு (சைஸ்) 14 ஆகும். பொதுவாக பெண்களின் கால் பாத அளவு 7 ஆகவே இருக்கும். இதனால் இவருக்கு பெரும் பிரச்சினையாக இருப்பது கால் அளவுக்கு ஏற்ப ஷு கிடைக்காதது ஆகும். எனவே இணையத்தளம் மூலம் தேடி கொண்டிருப்பதாக இம்மா தெரிவிக்கிறார். சில ஆண்டுகளுக்கு முன்பு ஜெர்மனிக்கு அவர் சென்றபோது ஒரு கடையில் 13 சைஸ் ஷு இருப்பதை கண்டு மகிழ்ச்சி அடைந்து ரூ.40 ஆயிரத்துக்கு 5 ஜோடி ஷுக்களை வாங்கி வந்துவிட்டார். அதையே அவ்வப்போது சற்றுப் பெரிதாக மாற்றி அமைத்து வர்ணம்பூசி பயன்படுத்துகிறார்.

இந்த சிரமம் பற்றி அவர் கூறும்போது, "உயரமாக வளர்ந்து இருப்பது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது.ஆனால் படகுபோல கால் பாதம் விரிந்திருப்பது கவலை தருகிறது. இனி வளர்ச்சி நின்றுவிடும் என கருதுகிறேன்" என்கிறார். இது மட்டுமல்ல இம்மாவின் தந்தை ஆன்ட்ரூஸ் கால் சைசும் 14. தங்கை ஜென்னி (15) கால் அளவு 10 ஆகும்.

---

## உயரத்தின் நாயகன்





உலகின் சிறந்த சாதனை தொகுப்புகளை வெளியிடும் கின்னஸ் புத்தகத்தின் 2013ஆம் ஆண்டிற்கான பதிப்பு தற்போது வெளியாகி உள்ளது.

இதில் அமெரிக்காவின் மிச்சிகன் நகரைச் சேர்ந்த கிரேட் டேன் என்ற நாய் உலகின் மிக உயரமான நாயாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த நாய் நின்ற நிலையில், பாதம் முதல் தோள்வரை உயரம் 3.4 அடி. பின்னங்காலை வைத்து நிமிர்ந்து நின்றால், உயரம் 7.4 அடி ஆகும்.

தினமும், 14 கிலோ உணவை உண்ணும் டேனின் எடை 70.3 கிலோ. இதன் வயது மூன்று.

## பெறுமதி

பழங்கால நெம்பர் பிளேட் விலை 1 மில்லியன் பவுண்ட் இப்போதைக்கு எண்ணற்ற புதிய கண்டுபிடிப்புகள் வந்து மக்களை கவர்ந்தாலும்கூட பழங்கால பொருட்களின் மதிப்போ உயர்ந்து கொண்டே போகிறது. இங்கிலாந்து நாட்டில் 1903ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட வாகன நெம்பர் பிளேட் விற்பனைக்கு வருகிறது.




இதன் விலை எவ்வளவு தெரியுமா? ரூ.8 கோடி (1 மில்லியன் பவுண்ட்) என அறிவிக்கப்பட்டுள்ளது. இது தற்போதைய நவீன சொகுசு கார்களைவிட சுமார் 43 மடங்கு அதிகமாகும்.

---

## நாகரிகம்...

காதுகளில் தோடு போடுவதும், கடுக்கண் மாட்டுவதும் எமக்கும் பழக்கப்பட்டவை. அவ்வளவு ஏன்? காதிலே பூ வைப்பது கூட எம்மவர்க்குப் பரீட்சயமானது ஒன்றுதான். அதில் நம்மவர்கள் கில்லாடிகளும்கூட.

ஆனால், இங்கே படத்திலே காணப்படுகின்ற மனிதன் காதிலே பல்லி ஒன்றைப் புகுத்தி அது புரியும் சில்மிஷங்களை அணு அணுவாய் இருசிக்கின்றார் என்று நீங்கள் வியப்புடன் நோக்குவது எமக்குப் புரிகிறது. ஆனால் உயிருள்ள பல்லி அல்ல. தோடு உற்பத்தியில் புதிசாலி ஒருவர் வர்த்தகச் சந்தையின் சவால்களை முகங்கொடுப்பதற்காக பல்லி வடிவில் தோடு செய்து இளங்கன்னியரின் கடைக்கண் பார்வையினைக் கவர்ந்திழுக்க முயற்சிக்கின்றார்.



---

## விநோதம்...



சாதனை படைத்த சிகை அலங்காரம் ஜப்பானைச் சேர்ந்த ஆழாயறம என்பவர் தனது முடியினை மிக விநோதமாக அலங்காரம் செய்து உலக கின்னஸ் சாதனை படைத்துள்ளார். இவரின் அலங்காரம் செய்த முடியின் நீளம் 3 அடி 8 அங்குலமாகும்.